வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால்நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு 12.




புத்தகம் 18 | திருவள்ளுவர் ஆண்டு 1995 புரட்டாதி திங்கள் 18-ம் நாள் (4—10—1964) ஞாயிற்றுக்கிழமை ஐ.அவ்வல் 27 | இதழ் 19

# குடியுரிமை பிரச்சினை அரசுக்கு புதிய தலையிடி

## சிறுபான்மைப் பிரதிநிதிகள் ஒன்று சேர்ந்ததின் எதிரொலி

மலை நாட்டு மக்களின் குடியுரிமைப் பிரச்சினையில் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த பாராளுமன்றப் பிரதிநிதிகள் ஒன்று கூடி ஒரே குரலில் பேசத் தொடங்கியிருப்பதால் அரசாங்கத்துக்கு ஓர் இக்கட்டான நிலை ஏற்படலாம் என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இவ்வாரம் சிறுபான்மை இன மக்களின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு மாநாடு நடத்தி இந்திய வம்சாவளியினரின் பிரச்சினை பற்றிக் கூட்டு நடவடிக்கை எடுப்பதென்று முடிவு செய்திருக்கின்றனர். எனவே அவர்களின் கருத்தை முற்றாக அலட்சியம் செய்து அரசாங்கத்தின் பழைய கொள்கையைத் தொடர்ந்து வற்புறுத்துவது சாத்தியமில்லை யென்றும், இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்யப்படாத அனைவரும் இந்தியரே என்ற கொள்கையை மாற்றி அமைப்பதா வேண்டாமா என்ற சங்கடமான நிலை அரசாங்கத்துக்கு ஏற்படலாமென்றும் கூறப்படுகிறது.

இம் மாநாட்டின் விளைவாக ஏற்பட்டுள்ள புதிய நிலைமைக் கிணங்க ஆட்சியாளர் நடந்து கொள்ளத் தவறினால் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது சாத்தியமில்லையென்றும், இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினர் பற்றி தில்லியில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் சிறுபான்மை இன மக்களின் பிரதிநிதியும் கலந்து கொள்வது பிரச்சினையின் தீர்வுக்கு உதவியாக இருக்குமென்றும், ஆனால் அதற்கான மனோபாவம் அரசாங்க வட்டாரங்களில் இதுவரை காணப்படவில்லை யென்றும் விஷயம் தெரிந்தவர்கள் கூறுகின்றனர்.

மலைநாட்டில் பிரபல தொழிற் சங்கங்களிலொன்றான இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவர் திரு. தொண்டமானைப் பிரதமர் இப் பிரச்சினை பற்றிக் கலந்தாலோசிக்கத் தவறிவிட்டாரெனினும், அந்தக் குறையைத் திரு. தொண்டமான் இந்த மாநாட்டின் மூலம் தீர்த்துக் கொண்டார் என்று அரசியல் அவதானிகள் அபிப்பிராயம் கூறுகின்றனர்.

## ‘தில்லி பேச்சில் சிறுபான்மையர் பிரதிநிதிகளுக்கு இடம் வேண்டும்’

‘இலங்கை இந்தியர் பிரச்சினை சம்பந்தமாக இந்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்த இலங்கையிலிருந்து இந்தியா செல்லும் தூதுகோஷ்டியில், இலங்கைச் சிறுபான்மை மக்களின் பிரதிநிதிகளும் இடம்பெற வேண்டுமென இம்மாநாடு தனது விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் என்பதற்காக ஒரு அரசியற் கட்சித் தலைவர் தூதுகோஷ்டியில் இடம்பெற முடியுமானால், சிறுபான்மையினர் அதில் ஏன் பிரதிநிதித்துவம் பெறக் கூடாதென்பதற்குக் காரணம் எதுவுமில்லை.’

இவ்வாறு இவ்வாரம் நடைபெற்ற பாராளுமன்ற சிறுபான்மைப் பிரதிநிதிகளின் மாநாடு விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகளும் மாநாட்டில் கலந்துகொண்டனர். அவ்வறிக்கைமேலும் கூறுவதாவது:

‘இலங்கையின் பிரஜாவுரிமைச்சட்டங்கள், அவற்றின் தார்ப்பரியத்திலும் நடைமுறை அமுலிலுமிருந்து பிரச்சினையை இன்றும் குழப்பியுள்ளது. அவை இப்பொழுது ‘நாடற்றவர்’ என அழைக்கப்படும் மக்களை மட்டுமின்றி ஏனைய தமிழரையும் முஸ்லிம்களையும் கூடப் பாதிக்கின்றன இச் சட்டங்களினால் பாதிக்கப்படும் சிறுபான்மை மக்களின் கஷ்டங்களைப் பரிசிலனை செய்ய ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்நாட்டின் பிரசாவுரிமைச் சட்டங்களிலுள்ள குறைபாடுகளை விளக்க உதவுகிறது.

தேசிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதில், சிறுபான்மையோரின் கருத்துக்களும் மதிக்கப்பட வேண்டுமென்பது அரசாங்கத்தின் கொள்கையாயின், இந்தியாவுக்குப் பிரதமர் அழைத்துச்செல்லும் தூது கோஷ்டியில் சிறுபான்மைப் பிரதிநிதிகளும் இடம்பெறக் கூடிய வகையில் அது பரந்த அடிப்படையில் அமையவேண்டும்.

தத்தம் நாட்டில் எவ்வளவு தொகையினர் பிரசைகளாக முடியுமென்று ஏற்கனவே முடிவு கட்டிய அடிப்படையில் இந்திய, இலங்கை அரசாங்கங்கள் உடன்பாடு செய்துகொள்வதன் மூலம், இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.

இப்பிரச்சினைக்கு முடிவு காணும் வகையில், சம்பந்தப்பட்ட மக்களின் நேரடி ஒத்துழைப்பும், பங்குபற்றுதலும் பெறப்பட வேண்டுமென இம்மாநாடு விரும்புகிறது. இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே ஓர் உடன்பாடு ஏற்படும்பட்சத்தில், அந்த உடன்பாட்டை அமுல் நடத்துவதற்கு எந்தத் தொழிலாளர்களின் ஒத்துழைப்பு தேவையோ, அந்தத் தொழிலாளர்களின்

(9ம்- பக்கம் பார்க்க)

## திருமலைத் துறைமுகத்தில் தமிழ் தொழிலாளருக்கு அநீதி

திருமலைத் துறைமுகத் தொழிலாளர்களில் பெரும் பகுதியினர் மொழிவழி பிரிந்த தமிழ் பேசும் இனத்தவர்களின் தொழிற் சங்கங்களில் சேர ஆரம்பித்து வருவதாகத் தெரிகிறது. இவர்களில் பெரும்பாலோர் இதுவரை காலமும் சமசமாஜக் கட்சி சார்புடைய தொழிற் சங்கங்களில் உறுப்பினராக விருந்தவர்களாம்.

திருகோணமலைப் பிராந்தியத்தில் சிங்களவர்களை அதிகமாகக் குடியேற்றுவதில் தீவிரமாக முனைந்துள்ள சில சிங்கள வகுப்புவாத இயக்கங்களின் நடவடிக்கைகளின் விளைவே இத்தகைய சூழ்நிலை ஏற்படக் காரணம் என்று கூறப்படுகிறது.

துறைமுகத் தொழிலாளர்களை ஒதுக்கிவிட்டு அவ்விடங்களில் சிங்களத் தொழிலாளர்களை வேலைக்கமர்த்தவே இத்தகைய சூழ்ச்சிகள் கையாளப்படுவதாக ஊகிக்க இடமிருக்கிறது. சமசமாஜக் கட்சி சார்புடைய தொழிற் சங்கத்திலிருந்து அண்மையில் 43 தமிழ் தொழிலாளர்கள், வெளியேற்றப் பட்டனராம். இவர்கள் இதுகால வரை சமசமாஜக் கட்சி சார்புடைய தொழிற் சங்கத்தில் இருந்து பல வேலை நிறுத்தங்களிலும், போராட்டங்களிலும் பங்கெடுத்துக் கொண்டவர்களாம். இவர்களில் பெரும்பாலோர் இப்பொழுது துறைமுகத் தொழிலாளர் கழகத்தில் சேர முயற்சித்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

### ஆயுத ரோந்து எதற்கு?

கடந்த 20-ம் திகதி டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா திருமலைக்கு வந்து, பேசிய பொதுக் கூட்டத்தில் ஒரு சிலரே இருந்தாரெனினும் ஏராளமான ஆயுதப் பொலீசார் இருந்தார்களாம். இதைவிட ‘யூனிபோம்’ அற்ற இரகசியப் பொலீசாரும் பலர் திரிந்தனராம்.

இவை எல்லாவற்றையும்விட மேலாக திருமலை நகர வீதிகளில் ஆயுதம் தரித்த பொலீசாரின் ரோந்தும் காவலும் அதிகமாகவே தென்பட்டதாம். காரணம் என்னவென்று பொது மக்களுக்கு மட்டுமல்லாமல் ரோந்து சுற்றிய பொலீசாருக்குமே தெரியாதாம். பொலீசாரை நமது நிருபர் விசாரித்த போது மேலிடத்து உத்தரவே தவிர தமக்கு வேறு எதுவும் தெரியாது, என்று கூறிவிட்டாராம்.

## சர்வாதிகார ஆட்சி ஏற்பட பாதை அமைக்கிறது பத்திரிகைச் சட்டம்



சமாதான நீதவானாக நியமனம் பெற்ற கொழும்பு பிரபல வர்த்தகரான திரு. த. நீதிராசா அவர்களுக்கு யாழ்ப்பாணம் கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலையில் வைத்து ஓர் பாராட்டு அளிக்கப்பட்டது. தமக்களிக்கப் பட்ட பாராட்டுக்கு திரு நீதிராசா நன்றி தெரிவிக்கிறார்.

“இந்நாட்டில் உள்ள ஜனநாயக ஆட்சியினை அழித்தொழித்துவிட்டு சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்தும் நோக்குடன் தான் இந்தப் பத்திரிகைகள் மசோதா மிக அவசரமாகப் புகுத்தப்படுகிறது என்று தோன்றுகிறது. அமுலுக்கு உடந்தையாகவிருக்கும் சில நபர்களின் கோர உருவம் பொது மக்களுக்குத் தோற்றமளிப்பதற்கே இம்மசோதா வழி வகுக்கும்” என்று மூதவை உறுப்பினரான திரு மு மாணிக்கம் மூதவையில், முறைமைக்குப் புறம்பாகப் புகுந்த பத்திரிகை மசோதாவை எதிர்த்து முதல் முழக்கமிட்டார்.

திரு. மாணிக்கம் உரை நிகழ்த்தும்போது ஆளும் கட்சியின் அநீதிகளைக் கண்

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# எப்படி எழுத ஆரம்பித்தேன்

## சிறு கதை அது சிறிதாக இருக்க வேண்டும்



கொழும்பு நில அளவைத் திணைக்களத்தில் கடமையாற்றும் திரு இரத்தினசிங்கம் அவர்கள் 'இந்துமதி' என்ற பெயரில் நல்ல சில சிறு கதைகளை உருவாக்கியுள்ளார். இவர் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இன்றைய எழுத்துலகில் நடைபெறும் சல சலப்புகளைப் பற்றி சிறிதும் கவலைப்படாதவர். தன்னை ஒரு எழுத்தாளன் என்று காட்டிக் கொள்ளாது, சந்தர்ப்பம் கிடைக்கும் போது எல்லாம் சிறு கதைகளை உருவாக்கி வருகிறார். மலைநாட்டுச் சிறுகதைப் போட்டியில் இவரது சிறு கதை யொன்றிற்கு ஆறுதல் பரிசு கிடைத்துள்ளது.

'எப்படி எழுத ஆரம்பித்தேன், என்ற தலைப்பில் ஓர் கட்டுரை எழுதி அனுப்பும்படி சுதந்திரன் ஆசிரியரிடமிருந்து வந்த கடிதம் கண்டதும் நான் திகைத்துப் போய் விட்டேன். காரணம் என்னை நான் ஓர் எழுத்தாளன் என்று கூறிக் கொள்ளும் அளவுக்கு எழுதிக் குவித்து, எழுத்துலகில் அதிகம் அறிமுகமானவன் அல்ல. ஒரு சில சிறுகதைகளை எழுதி அவற்றில் சில பிரசுரமாகி விட்டதால் என்னை நான் ஓர் எழுத்தாளன் என்று கூறிக் கொள்ள முடியுமா? ஏதோ எழுத வேண்டும் என்ற அவா என் மனதில் சின்ன வயதிலிருந்தே குடிகொண்டிருந்தது. அந்த ஆசையைப் பூர்த்தி செய்ய எழுதினேன். முதலில் குழந்தை இலக்கியங்களும், கட்டுரைகளும், மேடையேறுத நாடகங்களுமே எழுதி வந்தேன். ஓர் எழுத்தாள நண்பரின் சினேகிதம் கிடைத்ததாலும், அவரின் தூண்டுதலாலும் சிறுகதை எழுத வேண்டும் என்ற எண்ணம் என் மனதில் ஏற்பட்டது.

### எது சிறு கதை?

சிறு கதை எழுத முயற்சி செய்த பொழுதுதான் அது எவ்வளவு சிரமமான வேலை என்பதை அறிந்து கொண்டேன். ஒரு சிறிய கருவை வைத்துக் கொண்டு சொற்சுவையாலும், எழுதும் பாணியினுலும் சுருங்கச் சொல்லி விளங்க வைத்து வாசகர்களின் நல் மதிப்பைத் தேடவேண்டும். அந்தப் பணியை எத்தனை கஷ்டமான நிலையிலிருந்து செய்ய வேண்டியிருக்கிறது என்பதை அனுபவத்தின் மூலமாக அறிந்து கொள்ள முடிந்தது.

சிறு கதை என்பது எழுத்தாளன் மனதில் ஒரே சமயத்தில் முழுமையாகத் தோன்றி விடுவதில்லை. முதலில் ஒரு சிறு கருத்து கருவாக அவன் மனதில் பதிகிறது. அதுவும் பார்த்து, கேட்டு அல்லது அனுபவத்தின் மூலமாக அவன் மனதில் உதயமாகிய அக்கருவை மையமாகக் கொண்டு, ஒரு சிறிய நெருப்புப் பொறியைக் கொண்டு ஒரு பெரிய தீயை உண்டாக்குவது போல, அந்தக் கருவை, கற்பனைக் காற்றை

(10-ம் பக்கம் பார்க்க)

## நண்பனை மறப்பனோ?

நகைச்சுவைக் கலை நன்கு கைவரப் பெற்றவர் மாஸ்டர் சிவலிங்கம். சிறுவர்களின் உள்ளத்தைக் கவரக்கூடிய முறையில் பயங்கரக் கதைகள் எழுதுவதிலும் இவருக்கு ஈடுபாடு உண்டு. மட்டக்களப்பிலுள்ள ஆரையம்பதியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் வளர்த்த வில்லுப் பாட்டை இலங்கையில் அறிமுகப்படுத்தி வைத்த பெருமைக் குரியவராவர். மட்டக்களப்பு சிறுவர் கலைக் கழகத்தை நல்ல முறையில் வளர்ப்பதே இவரின் முழு நேரப் பணி என்றால் மிகையாகாது.

என்னை ஏதோ ஒரு விழாவில் நகைச்சுவை பற்றிப் பேசுவதற்கு அழைப்பதற்காக நண்பர் கவிஞர் காசி ஆனந்தன் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார். நெடு



நேரம் வரை பல விடயங்களைப் பற்றி பேசிக்கொண்டிருந்தோம். ஒரு கட்டத்தில் பத்திரிகை உலகைப் பற்றி எங்கள் பேச்சுத் திரும்பியது. உடனே... 'மாஸ்டர் நீங்கள் நகைச்சுவையாகப் பேசினால் மட்டும் போதாது, பத்திரிகைகளுக்கு நகைச்சுவைக் கட்டுரைகள் எழுதவும் வேண்டும்...' என்று நான் முற்றும் எதிர்பாராத விதமாக ஒரு போடு போட்டார். நான் அப்படியே அசந்துவிட்டேன். என்னால் சிறிது நேரம் பேசவே முடியவில்லை. எனது எழுத்தார்வத்தை எப்படியோ அறிந்து கொண்டு என்னைக் கிண்டல் செய்கிறார் போலிருக்கிறது என்றுதான் ஆரம்பத்தில் எண்ணினேன். ஆனால் அவர் திருப்பித் திருப்பி அழுத்தந் திருத்தமாகக் கூறிய பின்புதான் எனக்கு நண்பரின் கூற்றில் நம்பிக்கை ஏற்பட்டது. அடுத்த விநாடி...!

### கவிஞர் கொடுத்த ஊக்கம்

சிரிப்போடு சிரிப்பாக மெள்ள எனது நெடுநாளையப் பேரவாவைச் சற்றுத் தைரியத்துடன் அவரிடம் வெளியிட்டேன். 'அப்படியானால் மிகவும் நல்லது. இவ்வளவு நாளும் ஏன் எழுதாது விட்டீர்கள்? 'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்'. அடுத்தடுத்து முயன்றால் ஆகாதொன்றில்லை...... பயப்படாமல் துணிந்து எழுதுங்கள், நிச்சயம் பிரசுரமாகும்...' என்று போர்க்களத்தில் தளர்ந்து நின்ற அருச்சுனனுக்குத் துணிவூட்டிய கண்ணபிரானின் தோரணையில் கவிஞர் காசி. ஆனந்தன் கூறினார்.

எனக்கு ஏற்பட்ட உற்சாக மிகுதியில், 'சரி இன்றைக்கு இரவைக்கே எழுத ஆரம்பிக்கிறேன். எதைப் பற்றி எழுதினால் நல்லது...?' என்று அவரிடமே ஆலோசனை கேட்டேன். அந்த நாட்களிலேதான் ருஷ்யா முதன் முதல் வான்வெளிக்குச் செயற்கைச் சந்திரனை அனுப்பியிருந்தது. 'ருஷ்யாவின் செயற்கைச் சந்திரனைப் பற்றி நகைச்சுவையாக இன்றே எழுதுங்கள். நாளைக்கே நமது சுதந்திரனுக்கு அனுப்பிவிடுங்கள். சூட்டோடு சூடாக அனுப்பினால்தான் நலலது...' என்று, சிரிப்புடன் கூறி விடைபெற்றுக்கொண்டார் நண்பர் ஆனந்தன்.

### 'டுப்ளிகேட் சந்திரன்'

அன்று இரவு...... நேரம் சுமார் பத்து மணியிருக்கும். அனைவரும் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தனர். எனக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. எவ்வளவு நேரமானாலும் [illegible] முடிவில் [illegible] 'டுப்ளிக்கேட் சந்திரன்'

(13-ம் பக்கம் பார்க்க)

## காதலை கனிய வைக்க எழுதினேன்



'வட கோவை வளவர் கோன்' என்ற பெயரில் கவிதைகளையும், 'தமிழ் மாறன்' என்ற பெயரில் சிறு கதைகளையும், கட்டுரைகளையும் எழுதி வரும் சோ. கனகரத்தினம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் புலவராவார். ஆசிரியராகக் கடமையாற்றும் இவர் கோப்பாயில் வாழ்ந்து வருகிறார். தமிழ் உணர்வு நிறையப் பெற்றவர். தமிழ் மொழியில் புதிய இலக்கியப் படிவங்களைப் புகுத்தி மொழியை அணிசெய்வதில் அதிக ஈடுபாடுடையவர்.

போலீஸ் உதையால பாட ஆரம்பித்தேன் என்கிறார் கவிஞர் ஆனந்தன். 'காதல் தோல்வியால் கவிதை எழுதினேன்' என்கிறார் கவிஞர் கண்ணதாசன். ஆனால் நானோ என் காதலைக் கனிய வைப்பதற்காகக் கதை எழுத ஆரம்பித்தேன். என் நோக்கம் வெற்றி பெற வில்லையேயொழிய என் கதை வெற்றி பெற்றது. என் முதற் கதை அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆண்டு மலரில் முதன் முதலாக அச்சேறியது. என் எழுத்துக்களை அச்செழுத்துக்களாகக் கண்ட பொழுது ஏற்பட்ட மகிழ்ச்சி..? இங்க எழுதும் தரமுமன்று. எடுத்துச்சொல்லும் தரமுமன்று.

ஆனால் அதை ஈடுசெய்யும் முறையில் அடுத்த நாள் எழுதிய 'துன்பம் தோய்ந்த இன்பம்' என்னும் கதை பல பத்திரிகை அலுவலகங்களில் நுழைந்து இறுதியாக ஈழநாட்டில் வெளியாகியிருக்கிறது. ஏனைய கதைகளெல்லாம் டாக்டர் மு. வரதராசன் அவர்களின் முன்னுரையுடன் அச்சேற முடியாமல் என் பையில் உறங்கிக் கொண்டிருக்கின்றன. என்னுடைய கவிதைகளுக்கு இடம் கொடுத்து அவைகளை முதன் முதலில் அறிமுகப் படுத்தி வைத்தது 'சுதந்திரன்'.

---

# கவிதைப் பூங்கா

## காந்தியே! துணை நீ....!

—ஜே. ஏ. மேரி—



அடிமைப் பட்டுழன்ற மாந்தர்
அகத்தினில் விடுதலைத் தீக்
கொழுந்தினை ஏற்றிவைத்த
காந்தியே! சாந்த மூர்த்தி!
விடுதலை வேட்கை மிஞ்சு
வீரர்கள் ஒன்றாய்க் கூடி
உனதரும் வழி நடந்தே
உரிமைப் போர் தொடுத்தோம் ஐயா!

சூழ்ச்சியின் திறத்தால் எம்மை
சுருட்டிட எண்ணம் கொண்ட
ஆட்சியின் ஆணவத்தை
அகிம்சையால் வெல்ல எண்ணி
அறவழிப் போர் தொடுத்தோம்
அண்ணலே ஆசிகூறி
சத்திய யுத்தம் வெல்ல
சாந்தனே துணை நீ வாராய்.

தமிழராய்ப் பிறந்ததாலே
தரணியில் தகைமைகுன்றி
வாழ்ந்திட வகையுமற்று
வஞ்சகர் வலையுள் வீழ்ந்தோம்.
சுற்றிய பகை ஒடிக்க
சூளுரை பகர்ந்த 'செல்வர்'
காட்டிய வழி நடக்க
காந்தியே கருணை தாராய்.

## காசினியில் ஒரு கதிரவன்!

—('மாவிட்டபுர ஆனந்தன்')—

அன்புக் கடலே அறிவுக் கனலே
பன்னற் கரிய புகழ்பெற் றோனே
சத்திய வழியிற் சமர் செய்வதற்கு
வித்திட் டவனே வீர மகனே
அண்ணல் காந்தி! அருமைத் தலைவ!
விண்ணை யதிர்த்த வீர முழக்கம்
பாரத மெங்கும் பாய்ந்திட வைத்த
திரம் மிக்க தியாகச் சுடரே!
பேடியர் நெஞ்சிற் பெருகிய அச்சம்
சாடியொழித்து ஆண்மை யளித்தோய்!
மலரே மலையே அறத்தின் உருவே
நிலமிசை வந்த நித்திலமே இக்
காசினியில் ஒரு கதிரவனாகி
மாசினை நீக்கித் தேசு கொடுத்தோய்!
பண்புச் சுடரே பாரில் நின்னை
என்றும் ஏற்றிப் போற்றுகின்றோமே!

## துயரக்காடு

—"அண்ணல்"—

பறந்துயர் வானை அண்டிப்
பாடிடும் வானம் பாடி
சிறந்த இன்னிசையால் இன்பஞ்
சேர்த்திடும் மகிழும் இந்தப்
பறவையின் வாழ்வில் துன்பம்
பஞ்சப் பேய் வறுமை என்று
சூழ்ந்திடுந் துன்ப மில்லை
தொல்லையே மனித வாழ்வு?

சோலையில் குயிலிருந்து
தூற்றிடும் ஓசை நெஞ்சின்
மூலைகள் தோறும் இன்ப
முழக்கினைக் காட்டும் வாழ்வில்
வேலையால் இரத்தஞ் சிந்தி
வேதனைப் பரிசு ஏற்கும்
ஏழைமை இல்லை இங்கோ
மனிதரில் இன்ப மில்லை.

ஆடிடும் மயிலின் தோகை
அழகினில் நாட்டியத்தில்
ஈடிலா இன்ப முண்டே
இருளெனும் முகிலு முண்டே
கேடிலா வாழ்வு கொண்ட
காரணந் தேடுகின்ற
கோடியாம் மனிதர் இங்கோ
குமைகின்றார் துயரக் காட்டில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




என் எஸ். இராசையா,
தலவாக்கொல்லை

கே: இலங்கை மக்களின் முன்னேற்றத்திற்காக, இலங்கை அரசாங்கம் சில கொள்கைகளைக் கைக்கொள்கிறதென்றும், அந்த அரசாங்கத்துடன் ஒத்துழைப்பது தான இலங்கைத் தமிழர்களின் கடமையாகுமென்றும், இந்திய வெளிநாட்டு மந்திரி சுவரண்சிங் கூறிவிட்டுப் போயிருக்கிறரே! இது பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: நேற்று வந்த பஞ்சாப் சிங்குகளுக்கு இலங்கைத் தமிழர்களின் தன்மானத்தைப்பற்றி என்ன தெரியும்!

ஃ

எஸ். எஸ். நாதன், ஏருவூர்.

கே: திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயமாகின்றன என்பது உண்மையா?

ப: இது சொர்க்கத்துக்குச் சென்று வந்த தம்பதிகளிடம் கேட்க வேண்டிய கேள்வி.

கே: கொள்கை வேறுபட்ட அரசியல் கட்சிகள் தேர்தல் காலங்களில் மட்டும் கூட்டுச் சேர்வதன் காரண மென்ன?

ப: 'தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற வேண்டும்' என்ற பொது நோக்கம் அக்கட்சிகளுக்கு இருப்பது தான் காரணம். மற்றக் காலங்களில் அந்தப் பொது நோக்கு இல்லையாதலின் அவை கூட்டுச் சேர்வதில்லை.

கே: வருகிற தேர்தலில் வடகிழக்கு மாகாண பிரதிநிதிகளை போட்டியின்றி சட்ட சபைக்கு அனுப்பி வைத்தால் எப்படி இருக்கும்?

ப: போட்டியின்றேல் மக்கள் கருத்தைச் சரிவரத் தெரிந்துகொள்ள முடியாது. போட்டி வேண்டும். மக்கள் தம் வாக்குகளையும் உபயோகிக்க வேண்டும். அதில்தான் ஜனநாயக ரீதியான முடிவைக் காண முடியும்.

ஃ

ஆர். ஏ. இராமன், கண்டி.

கே: ஈழத் தமிழ் நாடு தனி நாடானபின் பிரதமர் பதவி யாருக்குக் கிடைக்கும்?

ப: அவசரப்படாதீர்! பிள்ளை பிறந்த பின் பெயர் வைக்கலாம்.

ஃ

ம ஆனந்தம்,
வெள்ளவத்தை

கே: காதல் திருமணங்களுக்கு அநேகமான பெற்றோரிடமிருந்து வரும் எதிர்ப்புக்குக் காரணம் கூறுவீர்களா?

ப: பிள்ளைகள் ஆழந் தெரியாமல் காலைவிட்டு அவதிப்படக் கூடாது என்ற கவலை தான் காரணம்.

ஃ

சி மெய்யானந்தன்,
மயிலிட்டி

கே: இந்தியாவில் உணவு பொருட்கள் பற்றாக் குறையாக இருக்கும் இந்த நேரத்தில், இந்தியைப் பரப்புவதற்கு இலட்சக் கணக்கில் விரயம் செய்யும் அரசாங்கத்தை என்னென்று கூறுவது?

ப: காங்கிரஸ் அரசாங்கம் என்று கூறும்.

ஃ

ஜெம், கிழ்க்கரவை

கே: தந்தை செல்வாவுடன் பிரதமரம்மா நடாத்தும் பேச்சு வார்த்தைகளால் ஏதும் பயனுண்டா?

ப: பயனுண்டா என்பதை உடனடியாகக் கூறிவிட முடியாது. "மலையக மக்கள் பிரச்சினை பற்றி உங்கள் கொள்கை என்ன?" என்று கேட்டாராம் பிரதமர். கட்சிக் கொள்கையை விளக்கிக் கூறினாராம் தமிழரசுத் தலைவர்.

ஃ

பொன். கென்னடி,
கிளிநொச்சி

கே: பத்திரிகைகளை அரசாங்கம் எடுப்பதின் உள்நோக்கம் தங்கள் குறைகளை மூடி மறைத்து சிறி லங்கா பத்திரிகைக்கு நாட்டில் செல்வாக்கைப் பெருக்கவே என்கிறேன்?

ப: இரண்டுமல்ல— மக்களின் சிந்தனையைக் கட்டுப்படுத்தவே இந்த ஏற்பாடு. சிந்தனையைக் கட்டுப்படுத்தினலன்றி எதேச்சாதிகாரம் ஏற்படமுடியாது.

ஃ

எஸ். நாராயணசாமி,
யாழ்ப்பாணம்.

கே: என் உடம்பு வர வர மெலிந்து கொண்டு வருகிறதே. புகைப்பதைத் தவிர வேறு ஒரு கெட்ட பழக்கமும் என்னிடம் இல்லை. என்ன செய்யலாம்?

ப: எந்த முறையைக் கையாண்டாவது அடுத்து வரும் தேர்தலைப் பயன்படுத்தி பாராளுமன்றத்தில் நுழைந்து விடுங்கள். ஆறே மாதங்களில் ஊதிப்போவீர்!

ஃ

லூட்டி அவுஸ்கோன்,
ஏருவூர்

கே: மக்கட்காக ஆட்சி நடத்துகிறோம் என்று அலை உலகிற்கும் பறைசாற்றிடும் சிறிமா அரசாங்கம் மக்களை மதிக்காதிருந்தால் அந்த ஆட்சிக்குப் பெயர் ஜனநாயகமா?

ப: நீங்கள் கூறுவது தவறு. மக்களில் ஒரு சாராரைத் தான் — குறிப்பாகச் சிறுபான்மை மக்களைத்தான் அரசாங்கம் மதிப்பதில்லை. எனவே 66-2/3 சத விகிதம் ஜனநாயகம் இந்த அரசாங்கத்தில் இன்னும் இருக்கிறது என்று கூறலாம்!

கே: டாக்டர் என் எம். பெரேராவின் வரவு செலவுத் திட்டம் எந்தத் தொழிலாளரையும் பாதிக்கவில்லையென்று சொல்லுகின்றாகளே. அப்படியானல் தோட்டத் தொழிலாளரையுமா?

ப: வரவு—செலவுத் திட்டம் தொழிலாளரைப் பாதிக்கவில்லையென்றாலும் அதனல் தொழிலாளர்களுக்கு நன்மை ஏற்படவில்லையே!

ஃ

கேசு, பருத்தித்துறை.

கே: நான் என்னுடைய மாமன் மகளை விரும்புகிறேன். அவளை அண்ணன் முறையான இன்னொருவரும் விரும்புகிறார். நான் என்ன செய்ய வேண்டும்?

ப: அந்த நபருடன்மாமன் மகளுக்குக் காதல் கீதல் உண்டா என்று முதலில் தெரிந்து கொள்ளுங்கள். காதல் உண்டானல் அவளைக் கை கழுவுங்கள். இல்லையேல் உங்களின் பெற்றோரை அனுப்பி பெண் கேட்க ஏற்பாடு செய்யுங்கள். இது தான் சரியான வழி.

ஃ

சந்திரநாயகம், பருத்தித்துறை.

கே: நீர் எல்லா வினவிற்கும் விடை எழுதும் முறையை எங்கே கற்றீர்?

ப: நான் எல்லாக் கேள்விகளுக்கும் பதிலளிப்பதில்லை. ஆயிரக்கணக்கான கேள்விகளில் பதில் பெறத் தகுதியுள்ள ஒரு சில கேள்விகளுக்கு மட்டுமே பதிலளிக்கிறேன்.

ஃ

மணிவண்ணன், மட்டக்களப்பு.

கே: மனிதனுக்கு எப்போது வெறி உண்டாகிறது?

ப: வெறியில் பல இனுசுகள் உண்டு. அளவுமீறி விட்டால் எதுவும் வெறியாக மாற முடியும். எந்த வெறியும் மனிதனுக்குத் தீமையையே விளைவிக்கும்.

ஃ

எஸ் எஸ். கந்தன், காரைநகர்

கே: கனம் சுகாதார மந்திரியார் பெரும்பான்மை சமூகத்தார் பேசுவது எல்லாம் தேசியம் அல்ல என்கிறாரே. இந்த ஞானம் அவருக்கு எப்படி உதயமாயிற்று?

ப: இதுவரை சிங்கள வகுப்புவாத நடவடிக்கைகளைக் கண்டும் காணுதது போலிருந்த முஸ்லிம் தலைவர்களிடையே காணிச் சட்டத்தால் சலசலப்பு ஏற்பட்டிருக்கிறது. சுகாதார மந்திரியிடமும் அதுதான் எதிரொலிக்கிறது.

ஃ

வீர-மகாலிங்கம், ஆலிஎல.

கே: இ. தொ. கா. சங்க உறுப்பினர் பதிவுப் புத்தகத்தைச் சட்டைப் பையில் வைத்திருந்தால் கள்ளத் தோணி என்று பிடிக்க மாட்டார்கள் என திரு தொண்டமான் மகாநாட்டில் கூறினாராமே! இதனல் நன்மை உண்டா?

ப: அப்படி அவர் கூறியிருந்தால் தவறாகும். அது குறுகிய வழியில் தமது சங்கத்துக்கு ஆள் பிடிக்கும் முயற்சி என்று கூறலாம். அதனல் தோட்ட மக்களுக்கு எந்த நன்மையும் ஏற்படப்போவதில்லை.

ஃ

இ. இராசையா, கோப்பாய்.

கே: எனது சிநேகிதர் ஒருவர் சட்டமா, சத்தியமா பெரிது என்று கேட்டார். அதற்கு நான் சட்டம்தான் என்றேன். தங்களின் அபிப்பிராயம் என்ன?

ப: சத்தியத்துக்கு மாறுனது உண்மைச் சட்டமன்று. சத்தியத்துக்கும் சட்டத்துக்குமிடையே மோதுதல் ஏற்படவே கூடாது. ஏற்பட்டால் இறுதியில் வெற்றி பெறுவது சத்தியமே.

ஃ

சிவ. சண்முகநாதன்,
கோணமலை.

கே: மலை நாட்டுத் தமிழர்களாகிய நாங்கள் சிங்களம் படிக்கலாமா?

ப: மலைநாட்டுத் தமிழர்களும் இந்நாட்டுத் தமிழினத்தைச் சேர்ந்தவர்களே! எனவே தமிழ் மொழிக்குச் சம அந்தஸ்துக் கிடைக்கும் வரை சிங்களம் படிக்கக் கூடாது.

## பொய்யே பொய்!

—எம். ஏ. நுஃமான்—

பண்டைப் புலமைப் பசுமைகள் முற்றும் படித்தவராம்
என்று பலரும் இசைத்தார்; அதனல் எனதுளமும்
சென்று கதைத்தல் சிறப்பென எண்ணித் தெளிவுபெற
அன்றுநான் வந்தேன் அவித்திர் இருக்கவோர் ஆசனமே.

சந்தோடி மாகப் பழைய கதைகள்; சனங்களது
மந்த நிலைக்கும் வருந்தி; எமது வளம் நிறைந்த
சொந்த நிலையும் தொடுத்தோம்; இடையில் சுவைப்பதற்கும்
தந்தீர்கள் பானம் அடடா கவிதைத் தமிழுடனே!].

கடைசியிற் கேட்டீரோர் கேள்வி; அதுவுமென் கௌரவத்தை
உடைப்பது மன்றே எனினும் எதையோ உளறிவைத்தேன்
மடைப்பயல்! பின்என் மகிழ்ச்சிகள் எங்கு மறைந்ததுவோ?
விடைபெறும் போதும் சிரித்தீர்கள் துன்பம் விளைத்ததுவே!

உம்மிடம் பொய்தான் உரைத்தேன்; அதனல் உறுபயன்கள்
நம்மிடம் ஏதேனும் உண்டோ? உலகில் நடப்பதுபோல்
சும்மாதான் வெற்றுச் சுவைக்காக நானதைச் சொல்லியதால்
அம்மாடி! அன்றெல்லாம் பட்ட அவஸ்த்தைக் களவுளதோ?

இன்னும் ஒருநாள் வருதற்கு மிஷ்டம்; எனினுமக்கு
முன்னர் மொழிந்த அப்பொய்யைப் பிடித்து முடிந்துவிட்டு
பின்னர் வரலா மெனவெண்ணி உள்ளேன்; பிடிப்பதற்கோ
என்னல் இயல விலையே; அதுவந் திகழ்கிறதே!

**திருவாளர்**
**குயுக்தியார்**
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப் [illegible] டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

தமிழ் பேசும் மக்கள் விரும்பிப் பாவிப்பது
**மாயா ஜோதி**
**ஊது பத்திகளே**

- சுகந்த வாசனை
- நிலைத்து எரியும் தன்மை
- நியாயமான விலை
- நவீன முறையில் இறுக்கமாக அடைக்கப்பட்ட பாக்கெட்டுகளில் இப்பொழுது விற்பனையாகிறது.

உற்பத்தியாளர்கள்:-
ந. செல்லத்துரை, மாயஜோதி இன்டஸ்றீஸ்.
128/3, வாட்பிளேஸ், கொழும்பு—7.

**வாழ்க்கைச் சிக்கலைத் தீர்க்கும் ரகசியமுண்டு**

எந்தவகையான காரணத்தாலும், மனவேதனை, தொல்லை, துக்கம், துன்பம் இருப்பின, அந்த ரகசிய பிரச்சினை வெளியிடப்படாது தீர்த்துக் கொடுக்கப்படும். மனைவி -கணவன் பேதம், வழக்கு விவகாரம், பகைவர் தொல்லை, நிந்தனை, பழி, விரும்பியவர்களை அடைதல், தேவையற்றவர்களை விலக்கிவிடல், காதல், அன்பை நிலை நிறுத்துதல், பிழை செய்துவிட்டுத் தப்பிவிடப் பார்ப்பவர்கள் அல்லது எந்தவகையான கொடூரமானவர்களையும் அடக்கி வைக்க, வயது கூடி விவாகமின்றி, விவாக சம்பந்தங்கள் முறிந்து போகிறவர்களுக்கு சந்தோஷமான திருமணம நடைபெற, பட்டம், பதவி, உத்தியோகம், வியாபாரம் அபிவிருத்தியாவதற்கு, ரகசிய நோய்கள் பெண்களின் உடல் இளைத்தல், வேறு தனிப்பட்ட வாழ்க்கையில் எந்தவொரு சிக்கலையும் குப்த சாஸ்திரத்தின் மூலமாகவும், கடவுள் மகிமையாலும், மைவெளிச்சத்தின் மூலமாகவும், மாந்திரீகத்தின் மூலமாகவும் தீர்த்துக் கொடுக்கப்படும். உண்மையாக யாவற்றையும் எழுதுங்கள் அல்லது நேரடியாக வந்து கூறுங்கள். ஞாயிறு, திங்கள் கம்பளையிலும், செவ்வாய் முதல் சனி வரை 103, ஸ்ரீசங்கராஜ மாவத்தை, மருதானையிலும் சந்திக்க முடியும்.

கவர்மெண்ட் ரெஜிஸ்டர் மாந்திரீக வைத்தியர்

**பி. எம். திசாநாயக்க,**

நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா
அருத எண்ணெய் மருந்துச்சாலை
கம்பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சிறுபான்மையினருக்கு வாளைக் காட்டுதல் கோழைத்தனம்"

## தமிழுணர்ந்த மகாத்மா

காந்தியடிகள் பிறப்பால், பேசும் மொழியால் குஜராத்தியாவார்; அம் மொழியில் அவருக்கு அதிகப் பற்றுமுண்டு. அவர் தமது வாழ்க்கை வரலாற்றை குஜராத்தியில் எழுதியதே இதற்குத் தக்க சான்று. ஆனால், மாகாண மொழிகளில் அவர் தம் தாய்மொழிக்கு அடுத்த படியாகத் தமிழ் மொழியையே விரும்பினர். சமஸ்கிருதத் தொடர்புடைய பிற இந்திய மொழிகளினின்றும் முற்றிலும் வேறுபட்டு தனித்தியங்கும் தமிழ் மொழியை குஜராத்தியாகிய காந்தியடிகள் கற்பதென்பது எளிதல்ல, அப்படியிருந்தும் அவர் தென்னுப்பிரிக்காவில் வாழ்ந்தபோது தமிழை ஊருந்திக் கற்ருர். தென்னுப்பிரிக்கத் தமிழர்களுக்கு, தமிழ் கற்பிக்க ஆசிரியர் கிடைக்காத குறையை அடிகள்போக்கி விட்டார். தாமே ஆசிரியராக இருந்து தமக்குத் தெரிந்த சொற்ப எழுத்தறிவை ஏழைத் தமிழ் மாணவர்களுக்குப் புகட்டினர்.

### திருக்குறள் பற்று

அடிகளார், தமிழரிடம் பேசிப் பழகுவதற்காக மட்டும் தமிழ் கற்க விரும்பினரில்லை. திருக்குறளை, தமிழ்மொழியின் மூலமே சுவைக்க ஆவல்கொண்டு தமிழ் கற்ருர்.

'யான் தமிழ் பயிலத் தொடங்கியதற்குக் காரணம் திருக்குறள் மூலத்தையே நேராகப் படித்தல் வேண்டுமென்று என் உள்ளத்தில் எழுந்த அவாவே யாகும்'

என்று அடிகள் 1927-ல் தமது தூத்துக்குடிச் சொற்பொழிவு ஒன்றில் வெளியிட்டார். ஆனால், அவர்மேல் சுமந்துவிட்ட அரசியல் பொறுப்புக் காரணமாக அவரது தமிழ்க் கல்வி முற்றுப்பெருமல் இடையே முறிந்துவிட்டது.

### தமிழுக்கு வாழ்த்து

'தமிழ் மொழியில் புலமை பெறுவதற்குரிய ஓய்வு எனக்கு ஆண்டவன் அருளினரில்லை. அது குறித்து எனக்குள்ள வருத்தம் அளவற்றது'

என்று தமது தமிழ்க்கல்வி தடைப்பட்டதற்கு வருந்தினர். தமிழின் ஆழத்தைக் காணுவதில் அடிகளார் வெற்றி பெருவிடினும், அம்மொழியின் அருமை பெருமைகளை அவர் நன்கு உணர்ந்திருந்தார். இதை,

'தமிழ் மொழி பயில, அதன் அழகை உணரலானேன். அஃதொரு மனங்கவரும் இனிய மொழி. தமிழ் மக்களுள் பண்டை நாளிலிருந்து இந்நாளிலுங்கூட பலஅறிஞர்கள் இருந்தார்கள்; இருக்கிறார்கள் என்பது அம் மொழியின் அமைப்பாலும், அப்பயிற்சியாலும் அறியக் கிடக்கிறது.'

என்று அவர் தமது சுயசரிதையில் கூறியுள்ளதால் அறிகிறோம். இதை, வாய்மை தவருத் அண்ணல் தமிழுக்குக் கூறிய வாழ்த்துரையாகவே கொள்ளலாம்.

### தமிழருக்கு வாழ்த்து

இந்தியர் அனைவரும் ஒரே இனம்; இந்தியா முழுவதும் ஒரே நாடு; என்ற ஒற்றுமைக் குரலை எழுப்பியவர், அவற்றை நாள்தோறும் வலியுறுத்தி வந்தவர் காந்தியடிகளைத் தவிர இன்னெருவர் இருக்கமுடியாது. ஆனால், அவர்கூறும் ஒற்றுமைக்கு அடிப்படை அன்பேயொழிய, ஆதிக்கப் புத்தியல்ல. 'தமிழ் மக்கள் எனது இரத்தக் கலப்புற்ற உடன் பிறந்தவர் போல் தோன்றுகிருர்கள்' என்று எத்தனையோ முறைகளில் காந்தியடிகள் கூறியிருக்கிறார். அவர் தமிழ் மக்கள் மீது அன்பு செலுத்தவும் தமிழ் மொழியைப் பயிலவும் காரணமென்ன? இதை அவரே கூறக் கேளுங்கள்:

'தென்னுப்பிரிக்காப் போரில் தமிழ்மக்கள் புரிந்த துணைபோல வேறு எந்த இந்தியரும் புரியவில்லை. அவர்களுக்கு நன்றியறிதல் காட்ட அவர்கள் நூல்களைப் பயில வேண்டுமென்று நினைத்தேன்.'

இது அடிகளார்தமிழினத்தின் மீது வைத்த அன்புக்கோர் சான்று.

[ம. பொ. சி. எழுதிய 'தமிழர் கண்ட காந்தி' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.]

## விபுலாநந்த சிலை நிதி

கொழும்பு தமிழ் எழுத்தாளர் மன்றம் உருவாக்கி வரும் விபுலாநந்த சிலைக்கு மேலும் பல தமிழ்ப் பெரியார்களிடமிருந்து நிதி கிடைத்துள்ளது. 6-9-64ம் திகதி 'சுதந்திரன்' இதழில் வெளியிடப்பட்ட பட்டியலின்படி 481 ரூபா கிடைத்துள்ளது. மேலும் நிதி கொடுத்தோர் விபரம் வருமாறு:

திரு. இ. சிவகுருநாதன் ரூ. 25, திரு.ச. வைரமுத்து ரூ 10, விசயலட்சுமி புத்தகசாலை ரூ 5, திரு செ. அரங்கநாதன் ரூ 51, திரு. குல.சபாநாதன் ரூ 5, திரு. மு. திருச்செல்வம் ரூ. 25, திரு. இரா. சபாநாயகம் ரூ. 25, திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை ரூ.15, திரு. எஸ். தம்பித்துரை ரூ 25, ஜனுப் எஸ். எம். கமால்தின் ரூ. 5. மொத்தம் ரூ. 672.

இப்பணிக்கு நிதி அனுப்ப விரும்புவோர் திரு. கா.பொ. இரத்தினம், 58, உருத்திரா வீதி, கொழும்பு-6 என்ற முகவரிக்கு அனுப்பவும்.

## சிங்களக் கொடியில் செய்ய வேண்டிய மாற்றம்

'தற்போது உபயோகிக்கப்படும் தேசியக் கொடியென அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட கொடியில் இலங்கைச் சிறுபான்மையருக்கென ஒதுக்கப்பட்ட இரு கோடுகள் உண்டு. இவ்விரு கோடுகளுக்கும், வாளேந்தி நிற்கும் சிங்கள சிங்கத்திற்கும் உள்ள தொடர்பைச் சற்று சிந்தித்துப் பார்த்தால், சிங்களச் சிங்கம் சிறுபான்மையோரை எதிர்த்து வாளேந்திக் கொண்டு நிற்பதையும் உலகிற்குப் பின் பக்கத்தைக் காட்டிக் கொண்டு நிற்பதையுமே காண்கிறோம். சிங்களக் கொடியில் சிங்கம் இலங்கையின் சிறுபான்மையோருடன் மோதுவதைப்போல் நின்றுகொண்டு, உலகத்திற்குப் பயந்து உலகிற்குப் பின் பக்கத்தைத் திருப்பிக்கொண்டிருப்பது கோழைத்தனத்தை விட வெட்கமின்மையையே எடுத்துக்காட்டுகிறது என்று கூற முடியாதா?' இவ்வாறு திரு. விஜேமான்ன என்பவர் 'தவஸ' 30-9-64ல் எழுதியுள்ள ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

'நம் நாட்டுச் சிறுபான்மையோருக்கு வாளை உருவிக் காட்டாமல், உலகிற்குச் சவால் விடும் முறையில் உலகின் பக்கம் திரும்பி நிற்பதுதான் சாலவும் நன்று.

சிறுபான்மையோருக்கு வாளைக்காட்டி, உலகிற்கு வாலைக் காட்டுவது சிங்கள இனத்தின் வீரத்துக்கு ஒரு சவாலாகும். நம் மக்களின் ஒரு சிறு பகுதியினருக்கெதிராகவா நாம் போராட வேண்டும்? அவர்களுக்கெதிராகவா நாம் எழுச்சி பெற வேண்டும்?' என்று அவர் தமது கட்டுரையில் வினவுகிருர்.

## சிங்கள இதழ்களில்...

## தமிழ்ப் பகுதி தமிழ் பொலிஸார் கையில்

'பொலிஸ் அதிபரின் கட்டளையின் மீது செய்யப்படும் பொலிஸ் அதிகாரிகளின் மாற்றங்கள் காரணமாக தமிழ்ப் பிரதேசங்களில் பொலிஸ் அதிகாரம் தமிழ் அதிகாரிகள் கைக்குப் போய்விட இடமுண்டு' என்று சவஸ 29-9-64ந்திகதி எழுதியுள்ளது.

'சிங்களப் பகுதிகளிலுள்ள தமிழ்ப் பொலிஸ் அதிகாரிகளைப் படிப்படியாகத் தமிழ் மாகாணங்களுக்கு மாற்றம் செய்யும் ஒரு வேலைத்திட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் அதிபரின் கட்டளையின்மீது இப்பொழுதோ தமிழ் பொலிஸ் அதிகாரிகள் கணிசமான தொகையினர் வட, கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இப்பொழுது வட, கிழக்கு மாகாணங்களில் பொலீஸ் நிலையங்களில் பணியாற்றும் பொலீஸ் அதிகாரிகளில் 100க்கு 75 பேர் சிங்களவர்களே. புதிய மாற்றல் திட்டத்தின் படி தமிழ் மாகாணங்களில் பொலீஸ் அதிகாரம் தமிழ் அதிகாரிகள் கைக்குப் போய்விடுமென கூறப்படுகிறது' என்று 'சவஸ' மேலும் குறிப்பிட்டுள்ளது.

## நிதி மந்திரியின் இரகசிய ஏற்பாடு

பத்திரிகைகளை அரசாங்கம் மேற்கொள்ளும் கொள்கையின் மீது பொது ஜனக் கிளர்ச்சி ஏற்பட்டால், அதனை அடக்குவதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி விவாதிப்பதற்கு பிரதமர், படைத் தளபதி, பொலீஸ் அதிபர் ஆகியோருடன் நிதி மந்திரி இரகசியமாக பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிருர் என்று பௌத்த ஜாதிக பலவேகயா ஓர் அறிக்கை விடுத்துள்ளது.

—தவஸ (30-9-64)

## தமிழ் படித்த பெரியோருக்கு அமிர்தலிங்கம் அழைப்பு

### தமிழ் மரபைப் பேணிக் காக்க வேண்டுகோள்

இலங்கை அரசின் இன்றைய போக்கு உலகத் தமிழர்களோடு ஒன்றுபட்டு உறவாட முடியாத நிலையை நம்மவர்க்கு உருவாக்கி வருகிறது. தமிழ் நாட்டிலிருந்து வரும் நூல்களையும் பத்திரிகைகளையும் நாளை ஆளவந்தார் தடைப்படுத்தலாம், நமது நாட்டிலிருந்தும் தமிழ் நூல்களையும் பத்திரிகைகளையும் வெளியே செல்லவிடாது தடைப்படுத்தலாம். இப்படியொரு நிலை உருவாகுவது ஆச்சரியப்படக்கூடியது அல்ல. ஆனால் இவற்றையெல்லாம் எதிர்த்து நிற்கும் ஆற்றலை முதலில் நாம் பெற வேண்டும். தமிழ் படித்த பெரியோர்கள் தமிழ் மரபைப் பேணிக் காப்பதில் கண்ணும் கருத்துமாயிருக்க வேண்டும். அன்றேல் இந்த இருள் சூழ்ந்த நேரத்தில் மொழியின் தூய்மை கெட்டுவிடும்.



திரு. அ. அமிர்தலிங்கம்

இவ்வாறு வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் தமிழ்ச் சங்க ஆரம்ப விழாவில் உரை நிகழ்த்துகையில் கூறினர்.

வட்டுக்கோட்டை தொகுதியிலுள்ள தமிழ் மொழியில் பாண்டித்தியம் பெற்ற பெரியார்கள் ஒன்று கூடி ஓர் தமிழ் சங்கம் உருவாக்கியுள்ளனர். இதன் அங்குரார்ப்பண விழா [illegible] சாலை மண்டபத்தில் திரு. இ. பாலசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பண்டிதர் அ. ஆறுமுகம் வரவேற்புரை நிகழ்த்துகையில், 'நாட்டில் இன்று நம் மொழி இருக்கும் நிலையில் அதனை வளர்க்க வேண்டிய பொறுப்பு இத் தொகுதியில் வாழும் கற்றறிந்தோர் கடன் என உணர்ந்து இத் தமிழ் சங்கத்தை அமைக்க முன் வந்தோம்' எனக் குறிப்பிட்டார்.

திரு. அ. அமிர்தலிங்கம், பா. உ. ஆரம்ப உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது 'எனது தொகுதியில் தமிழ்ச் சங்கம் அமைக்க முன்வந்த செய்தி கேட்டு யான் மகிழ்ச்சியடைந்தேன். அரசியற்றுறையில் தமிழை வளர்க்க முயன்றல் மட்டும் போதாது. சமுதாய ரீதியாக கற்றறிந்த புலவர்கள் தமிழை வளர்க்க முன்வர வேண்டும்.

தமிழை முறையாகக் கற்க ஆர்வமூட்ட வேண்டியது

(13-ம் பக்கம் பார்க்க)

"அது வெளியே பெருமளவு சளியைக் கொண்டு வந்தது. அதற்குப் பிறகு குழந்தை மிகவும் ஆறுதலாக இருந்தது."

—திருமதி சி. ஜி.




உங்கள் குழந்தையின் நன்மைக்காக எப்பொழுதும் கிறேசன்ஸ் வேப்பர் கிறீமையே கேட்டு வாங்குங்கள்.

எல்லா மருந்துக் கடைகளிலும், பலசரக்குக் கடைகளிலும் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைநாட்டில் நாடகக்கலை

## தொழிலாளர் விழிப்புணர்ச்சிக்கு துணை புரிகிறது

விடியுமுன்னே மலையேறி, பணிபுரிந்து, பகலவன் மறைந்த பின் மனை புகுந்து உறங்கி, தான் வாழும் சுற்றும் சூழ் நிலை, நாட்டின் நிலை அறியாது, அஃறிணைகளாய் அறிவற்று வாழ்ந்த நிலை மாறி வேலை ஓய்ந்த வேளையிலே சமூகத்தோடு சங்கமமாகி சங்கங்கள் அமைத்து கலை வளர்த்து வாழு நிலையிலே மிளிர்கின்றது மலையகம்.

இன்று மலை நாட்டின் எப் பக்கத்தைப் பார்த்தாலும் அங்கே வளரும் தமிழ் சங்கங்கள்! கூத்து (நாடகக்) கலை வளர்க்கும் மன்றங்கள்! மக்கள் 'கூட்ட'ங்கள்! கலை வளர்க்கும் சேவைகள்.

அந்தச் சில ஆண்டு சேவையால், நாடகம் பார்க்க-பரவசிக்க-நடித்து வளர்க்க திறனற்றுக் கிடந்த மலைநாடு, இன்று நாடகக் கலைகள் தத்தும் குழந்தையாக இருந்து, வளர்ச்சி பெற்று உன்னத நிலையில் திகழும் காலம் வெகு தூரத்தில் இல்லை என்பது, கூத்துக் கலையில் வாடையே வீசாத அன்றைய மலையகத்தையும், அசுர வேகத்தில் வளர்ந்து வரும் இன்றைய மலையகத்தையும் சிறிது எடை போட்டு பார்த்தால் உள்ளங்கை நெல்லிக் கனியாக விளங்கும். இன்னும் ஓரிரு ஆண்டுக்குள் பூரணத்துவம் அடைந்துவிடும், என்பதில் சந்தேகமே இல்லை.

### 1939க்குப் பின்

1939-ம் ஆண்டுக்கு முன் 'பெரிய' கங்காணிகளின் 'கொரே' 'ஆட்சி' நிலவி வந்தது. தொழிலாளர்கள் அந்த ஆட்சியிலே சிக்குண்டு ஓய்வின்றி, இரத்தம் சிந்தி உழைத்து, பெற்ற ஊதியத்தை எல்லாம் பெரிய கங்காணிகளின் 'கோணி'களிலே கொட்டிவிட்டு, அவர்கள் தருவதையே வாங்கி உண்டு, சக தொழிலாளர்களோடு பேசவே நடு நடுங்கி வாழ்ந்தார்கள்.

அப்போது தொழிலாளர்கள் கல்வி, அறிவு அற்றவர்களாக எதையுமே சிந்திக்கும் திறனற்று,—எதையும் செய்யும் செயலற்றுக் கிடந்தார்கள்.

1939க்குப் பின் கங்காணிகளின் வரம்பெற்ற 'குறும்பு' தனம் ஓய்ந்தது. வாய்ப்பும் வசதிகளும் ஏற்பட்டன. மற்றைய தொழிலாளர்களோடு மனம்விட்டு பேச தொடங்கினார்கள். சமூகத்தோடு கலந்துறவாடத் தொடங்கினார்கள். அப்போதுதான்......

### நாடகக் குழுக்கள்

தென்னகத்து நாடகக் குழுக்கள் இலங்கை வரத் தொடங்கின. அக் குழுக்கள் 'கிருஷ்ண லீலா', 'வள்ளி திருமணம்', 'சத்தியவான் சாவித்திரி', முதலான 'புராணக்' கதைகளை நடித்துக் காண்பித்து தொழிலாள மக்களை மகிழ்வித்தன.

அப்போது கட்டிட வசதி, 'லைட்' வசதி இல்லாத படியால் தோட்டங்களில், வசதியான தெருக்களிலே—திறந்த வெளிகளிலே

இரா. மலைச்செல்வன்

மேடை அமைத்து திரைச் சீலைகளை இருவர் பிடித்துக் கொண்டும், தீப் பந்தங்களை நிலத்தில் நட்டு வைத்தும் 'தெருக் கூத்து'களாக நடத்தினார்கள்.




இந்த 'கூத்து'கள் இன்று மேடையேறும் கூத்துகளைப் போல் ஒரு நாளில் சுமார் மூன்று மணித்தியாலங்களில் முடிவதில்லை; விடிய விடிய நடக்கும். ஒரு நாளிரவில் முடியவில்லையேல் தொடர்ந்து (ஒரே நாடகக் கதை) பல இரவுகள் நிகழும்.

தோட்ட மக்கள் இவற்றைப் பார்ப்பதில் அளவுக்கு மீறிய ஆர்வம் செலுத்தினார்கள்; இந் நாடக இரசிகர்களும் பெருகிக் கொண்டே வந்தார்கள். தோட்டம் விட்டு தோட்டம் சென்று பார்க்கும் அளவிற்கு மலையகத்தில் இந் நாடகங்கள் வேரூன்றின.

### ஆரம்ப வித்து

ஆனால் இந் நாடகக் குழுக்கள், ஈழத்திற்கோ, ஈழமலையகத்திற்கோ கலையை வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்தோடு வரவில்லை. நாடகங்களை அரங்கேற்றி பொருள் சேகரிக்கவே வந்தார்கள். ஆனால் இவர்களின் வரவும், நாடக அரங்கேற்றமுமே மலையகத்தில் நாடகக்கலை வளர்க்கும் ஆரம்ப வித்தாக இருந்தன என்றால் மிகையாகாது.

நாளடைவில் இந் நாடகங்களைப் பார்க்கும் மக்கள் கூட்டம் பெருகிக் கொண்டே வந்தது. நாடகக் குழுக்களுக்கும் 'வருமானம்' அதிகரித்துக் கொண்டே வந்தது. குழுக்களும் 'பெருந்தன'த்துடன் 'தம்மகம்' திரும்பின.

அதனால் வெளிநாட்டுச் செலவாணி அதிகரிப்பதைக் கண்ட அரசாங்கம் அவர்களது குறிப்பிட்ட வாசகாலத்தைக் குறைத்தது. சிலருக்கு அனுமதி அளிக்கவும் மறுத்தது.

இதனால் கொடுக்கப்பட்ட குறைந்த காலத்தில் வருமானம் சேகரிக்க முடியாதமையினாலும், அனுமதி மறுப்பு காரணத்தாலும் இந் நாடகக் குழுக்கள் வரவும் குறையத் தொடங்கின.

### தொழிலாளர்களே நடிகர்கள்

தமிழக நாடகக் குழுக்கள் ஈழம் வருவது குறையத் தொடங்கியதால், அவர்கள் அரங்கேற்றிய நாடகங்களை பார்த்துப் பார்த்து பரவசம் (படித்துக்) கொண்ட மலையகத் தொழிலாளர்கள் தாங்களாகவே நடிக்கத் தலைப்பட்டனர்.

இவர்களும் அவர்களைப் போலவே இராமாயணம், மகாபாரதம், காமன் கூத்து போன்ற புராணக் கதைகளையே நாடகங்களாக நடித்துக் காட்டினார்கள். சில குழுக்களாகத் தோட்டங்கள் தோறும் சென்று மேடையேற்றினார்கள்.

நாடகங்களைக் கோவில் தோட்டப் பள்ளிக் கூடங்கள் போன்ற பொது இடங்களில் (மண்டபங்களில்) நடித்துக் காண்பித்தார்கள். 'பெற்றோல் மாக்ஸ்' போன்ற அன்றைய நவீன சாதனைகளை மேடை ஒளி முறைக்குப் பயன்படுத்தினர். 'தப்பு' முதலானவைகள் தான் வாத்தியக் கருவிகளாகப் பயன்பட்டன.

இவர்கள் மத்தியிலே நாடகக் கலை வளர்க்க வேண்டுமென்ற எண்ணம் இருந்ததா? இல்லை. ஏதோ தம் நடிப்புத் திறனை மற்றவர்கள் பார்க்க வேண்டும், அதோடு சிறு வருமானம் கிடைக்கும் என்ற நோக்கத்தோடுதான் நடித்தார்கள்.

### பகுத்தறிவு பாசறைகள் தோன்ற...

மலையகமெங்கும், குறிப்பாக தோட்டங்கள் தோறும் புராணக் கதைகளை நடித்து தொழிலாள மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்திவரும் போதுதான்; தமிழகத்திலே திராவிட கழகம் போன்ற பகுத்தறிவுப் பாசறைகள் தோன்றின.

அவற்றின் சீர்திருத்தக் கருத்துக்கள் நாடெங்கும் பரவிவந்தன. அவற்றின் பகுத்தறிவுக் கருத்துக்களை அடுக்குத் தொடரில் அள்ளிக்கக்கும் நூல்கள் ஏராளமாக வெளிவந்து கொண்டிருந்தன.

அவை ஈழத்திலும் பரந்தன; மலைநாட்டு இளைஞர்களும் விரும்பிப் படிக்கத் தொடங்கினர். கருத்துக்கள் நெஞ்சைத் தொட்டன. அவர்களது உள்ளமும் சிறிது 'ஒளி' பெற்றது.

அதனால் அக் கருத்துக்களை அறிவற்று வாழும் மலைஞர்கள் மத்தியிலே புகுத்தத் தொடங்கினர் அதனால் ஏற்பட்ட எதிர்ப்புகள் பலவற்றை எள்ளளவும் எண்ணாது துணிந்து செயல்பட்டனர்.

கருணாநிதி போன்றோரின் 'தூக்கு மேடை', 'நச்சுக் கோப்பை' போன்ற நாடகங்களையும், சினிமாக் கதைகளையும் மேடை ஏற்றினார்கள்.

ஆனால் இவ் விளைஞர்கள், நாடகக் கலை வளர்ச்சியையோ மலையக 'அவல' நிலையையோ பற்றி அக்கறை செலுத்தவில்லை. வெறும் புரட்சிக் கருத்துக்களைத் தொழிலாளர் உள்ளங்களில் புகுத்துவதில் தீவிரம் கொண்டார்கள். என்றாலும் அவைகள் நம் மலையக விழிப்புணர்ச்சிக்கு ஊன்றுகோலாக இருந்தது.

இந்த விழிப்புணர்ச்சியே—சிறந்த எண்ணமே—நாடகக் கலை உன்னதத்திற்கு வழி வகுத்தது. இதனால் ஒரு புறம் கலை வளரத் தொடங்கியது மறுபுறம் அறியாமை அகன்று தோட்ட மக்கள் திருந்தவும் தொடங்கினர்.

மலைநாட்டு நாடகக்கலை குழுவின் பருவத்தில் 'வியாபாரமே' நோக்கமாக இருந்து, பின் பல உருவங்கள் பெற்று, இன்று அதை வளர்ப்பதில், மலையக அவல நிலையைப் போக்குவதிலும் செயல்பட்டிருக்கிறது.

இன்று மலையக இளைஞர்கள், கலையை வளர்ப்பதோடு மலையகத்தோட்ட மக்களைத் திருத்துவதிலும் தீவிரம் காட்டி மலையக சீர்திருத்த நாடகங்களை மேடையேற்றி வருகின்றார்கள்.

மலையக நாடகக் கலை சிறந்த வளர்ச்சிக்கு கண்டி, அட்டன் நாடகவிழாக்களே சான்றாகும்.

மலை நாட்டில் நாடகக் கலை இன்னும் சில ஆண்டுகளில் உன்னத நிலை பெற்று, மலை நாடு எதற்கும் சளித்ததல்ல என எடுத்துக் காட்ட கவி பாடி குருதியைக் குளிர வைக்கும் 'சிங்க கிரிச் செல்வி' (கவிதை நாடகம்) ஒருத்தியே போதும்.

---

## அடுத்த வாரம் முதல்:

முற்றிலும் புதிய முறையில்—புதிய வடிவில், ஈழத்தின் தனிப் பெரும் தமிழ் வார ஏடான 'சுதந்திரன்' வெளிவரவிருக்கிறது.

- உலக அரசியல் செய்திகளைச் சுடச்சுட விளக்கும் 'உலகவலம்'.
- இலங்கை அரசியல் செய்திகளைத் தரம் பிரித்துத் தரும் 'வாராசாரம்'.
- உலக, உள் நாட்டு அரங்கில் அவ்வவ் வாரம் முக்கிய இடம் பெறும் பிரமுகர்கள் பற்றி வர்ணிக்கும் 'இவ்வாரப் பிரமுகர்'.
- உங்களை வருத்தும் எண்ணற்ற பிரச்சினைகளைத் தீர்க்க வகை கூறும் 'கவலை வேண்டாம்'.
- உங்களைச் சிரிக்க வைக்க, 'விகடத் துணுக்குகள்'.
- வாழ்க்கையின் பலதரப்பட்ட அம்சங்களையும் ஒரே நிமிடத்தில் வாசித்து அறியவும், அனுபவிக்கவும் 'நிமிடக் கதை'.
- மங்கையரை மகிழ்விக்க, அவர்க்கு அறிவு புகட்ட, அவர் தம் பிரச்சினை தீர்க்க 'மாதர் பகுதி'.

இன்னும் பல புதிய அம்சங்களுடன் 'சுதந்திரன்' வெளிவருகிறது.

**இவற்றைவிட, இலங்கை அரசியலை விளக்கும் அரசியல் ஆய்வுக் கட்டுரைகளும், இலக்கியக் கட்டுரைகளும் இடம் பெறும்.**

**உங்கள் பிரதிக்கு இன்றே பதிவுசெய்து கொள்ளுங்கள்**

---

## இஸ்லாமிய இளைஞர் கழகம்

இதுகால வரை இஸ்லாமிய கலைவளர்ச்சி மன்றம் என்ற நாமத்தோடு செயல்பட்டு வந்த மன்றத்தை 26-9-64 அன்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் 'இஸ்லாமிய இளைஞர் கழகம்' என்ற பெயருடன் செயல்பட வேண்டுமென்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

---

## தலவாக்கொல்லை தமிழ் அரசுக் கட்சி புதிய நிர்வாகிகள்

அட்டன் டிப்போவிலிருந்து மலைநாட்டில் பல்வேறு பகுதிகளுக்கு செல்லும் பஸ் வண்டிகளிலுள்ள பெயர்ப் பலகைகள் பெரும்பாலும் தனிச் சிங்களத்தில் இருப்பதனால் தமிழ்ப் பிரயாணிகள் அவர்கள் செல்ல வேண்டிய இடங்களுக்கான பஸ் வண்டிகளைத் தெரிந்து கொள்வதில் பெரும் அவதிக்குள்ளாகிறார்கள். எனவே தமிழிலும் பெயர்ப் பலகைகள் இருக்க உடன் நடவடிக்கை எடுக்கும்படி போக்குவரத்து மந்திரியவர்களையும் போக்குவரத்துச் சபை தலைவரையும் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று தலவாக்கொல்லை தமிழரசுக்கட்சிக் கிளையினரால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தலவாக்கொல்லை தமிழரசுக்கட்சிக் கிளையின் புதிய உத்தியோகத்தர் தெரிவும் நடைபெற்றது.

விபரம் வருமாறு:-

தலைவர்: சி. பரமலிங்கம், உபதலைவர்: பெ. கோவிந்தசாமி, செயலாளர்: ரா. ம. இராமலிங்கம், உபசெயலாளர்: வி ஜே அலக்சாண்டர், பொருளாளர்: நா. அழகர்சாமி.

குழு உறுப்பினர்கள்:-

திருவாளர்கள்: மு பழனியாண்டி, பொ. குழந்தைவேல், பொ. சுப்பிரமணியம், சு. சி. சுப்பிரமணியம், ஆ. பாண்டியன், தே. வீ. பெரமன்.

---

## 'சுதந்திரன்' புதிய சந்தா விபரம்

தபால் கட்டணம் அதிகரித்திருப்பதன் காரணமாக, பின்வருமாறு சந்தா உயர்த்தப்பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| ஒரு வருடம் | ரூபா 14-00 |
| ஆறு மாதம் | ரூபா 7-50 |

நிர்வாகி
'சுதந்திரன்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசுக் கட்சிக்கு புதிய அமைப்பு முறை

## பொதுச் செயலாளர் அறிக்கை

தமிழ் பேசும் மக்களின் இழந்த உரிமைகளைத் திருப்பிப் பெறுவதற்கான போராட்டத்திற்கு இலங்கைத் தமிழரசுக்கட்சியை இயக்க அடிப்படையில் ஒரு முகப்படுத்துவதற்கு இவ்வருடம் டிசம்பர் திங்கள் 31ம் நாளுக்கு முன்னர் நடவடிக்கைகள் எடுப்பதென்று கடந்த வார இறுதியில் கொழும்பில் கூடிய இலங்கைத் தமிழரசுக்கட்சிச் செயற்குழு முடிவு செய்துள்ளது.

கட்சிப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் கட்சித் தீர்மானங்கள் பற்றி சுதந்திரனுக்கு விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

கொழும்பு நகரிலுள்ள ரோயல் கல்லூரி, விவேகானந்த வித்தியாலயம், கிரீன் வீதி வித்தியாலயம், தெமட்டகொடை வித்தியாலயம் மற்றும் இதர சில கல்லூரிகளிலும் தமிழ்ப் பிள்ளைகளுக்குச் சிங்களம் போதிப்பதற்காகச் சிங்கள ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டதை ஆராய்ந்த செயற்குழு, தமிழ் பேசும் மாணவர்கள் சிங்கள வகுப்புகளுக்குப் போகாது தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளைக் கட்சி எடுக்க வேண்டுமென்றும் முடிவு செய்தது.

திருமலை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைப் பரிசீலனை செய்த செயற்குழு, உரிமைப் போராட்டத்திற்குக் கட்சியை இயக்கரீதியில் பலப்படுத்துவதென்றும் தீர்மானித்தது.

திருமலை மாநாட்டுக்கான நுழைவுச் சீட்டுக்கள் அச்சடிக்கப்பட்டு, விநியோகம் செய்யப்பட்டது சம்பந்தமாகச் சில பத்திரிகைகள் வெளியிட்ட செய்திகளைப் பரிசீலனை செய்த செயற்குழு அச்செய்திகள் முற்றிலும் ஆதாரமற்றவை என்ற முடிவிற்கு வந்துள்ளது.

கட்சி நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தும் நோக்கத்துடன் பல உப குழுக்கள் நியமிக்கப்பட்டதுடன் கட்சி ஏடு ஒன்றையும் வெளியிடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலுள்ள கட்சிப் பணிமனையில் தமிழரசு வாலிப முன்னணியினருக்கும் அலுவலகம் அமைக்க இடம் கொடுப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

## பிரதமருக்கு அழைப்பு விடுத்தவர்கள் யார்?

கடந்த வார முற்பகுதியில் தமிழ், ஆங்கில தினசரிகளில் ஈழத்தமிழ் மக்களை வரையும் பிரமிப்புக் கொள்ள வைக்கும் திடுக்கிடும் செய்தியொன்று பிரசுரமானது. இதனைக் கண்ட அனைவரும் தம் மூக்கின் மேல் விரலை வைத்து அதிசயித்திருப்பரென்பது நிச்சயம்!

விந்தையான அச்செய்தி இதுதான்: "தமிழ் மொழிப் பிரச்சினையில் பிரதமர் ஏதாவது தீர்வு காண்பாராகில் அவர் வடபகுதிக்கு வரும் போது மேளதாளங்களுடன் வரவேற்கப் படுவாராம்."

பிரதமருக்கு 'உறுதி' யளித்த இந்தப் பிரகஸ்பதிகள் யார்...? அறிய வேண்டாமா அவர்களை?

ஆபத்துச் சகாயநிதிச் சங்கத் தூதுக்குழுவினராம்! பிரதமருக்கே 'ஆபத்தில்' உதவுகிறார்கள்!

இவர்கள் திருநாமங்கள்..?

முகாந்திரம் ஈ. பி. இராசையா, பேர்ஸி அத்தநுசியா, உ. ந. தேவகடாட்சம், திரு. மதி உருத்திரா கந்தசாமி (இவரின் கணவர் சீனுவில் தமிழ் ஒலிபரப்பில் கடமையாற்றுகிறார்).

இந்த நால்வருமே தமிழினத்தின் தலைவர்களான தந்தை எஸ். ஜே. வி., கோப்பாய்க் கோமான் கு. வ., இன்றைய தமிழரசுத் தலைவர்கள் அனைவரும் சாதிக்க முயன்று வரும் இலட்சியப் போரை இடையிலே முடிய வைத்துச் சிங்கள ஏகாதிபத்தியச் சின்னம் சிறிமாவுக்கு தமிழ்ப் பிரதேசத்தில் குடை, கொடி, ஆலவட்டம், சாமரைவீசி வரவேற்பளிக்கப் போகிறார்களாம்.




# ரிஷி லேகியம்

ரிஷி கருணைக் கிழங்கு லேகியம்

ரிஷி படம் உள்ளதாவெனப் பார்த்து வாங்கவும்

மலச்சிக்கலுக்கும், மூலவியாதிக்கும்

மூல முளைகள், இரத்த மூலம், சீழ் மூலம், வெளி மூலம், உள் மூலம், பௌத்திர கை கால் அசதி, சோம்பல், அஜீரணம், பசியின்மை, பத்தவாயு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், இடுப்பு வலி, நெஞ்சுவலி, புற்றுகள், கண் கை கால், திரேக எரிச்சல், தேக மெலிவு, மூலச் சூட்டினால் உண்டாகும் எல்லா வியாதிகளையும் உடனே கண்டிக்கும்.

குறிப்பு

அசல் R. S. பதிமருந்துகளும், திருச்சினாப்பள்ளி குரு மருந்துகளும் கேசவர்தனி எண்ணெயும் மற்றும் ரிஷி மருந்துகள் முதலியவைகள் கிடைக்கும்.

விபரமடங்கிய கேட்லாக் இனாம்

**15 நாள் டின் ரூபா 3-00**

**30 நாள் டின் ரூபா 5-75**

தபால் செலவு /-95

63 வருட பரம்பரை வைத்திய நிபுணர்.

**ஞானசுந்தர வைத்தியசாலை**

187, செட்டியார் தெரு, கொழும்பு.


## சாகித்திய விழாவும் சுன்னாகம் பட்டினசபையும்

சுன்னாகம் பட்டினசபை எல்லைக்குட்பட்ட மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் எடுக்கப்பட்டதாக வர்ணிக்கப்படுவதும், சமசமாஜக் கட்சிப் பிரமுகரும், சுன்னாகம் பட்டினசபைத் தலைவருமான திரு. பொ. நாகலிங்கம் தலைமையில் நடைபெற்றதுமான சாகித்திய விழா கடந்த 21-9-64 திங்கட்கிழமை மாலை சுன்னாகம் சந்தைமைதானத்தில் நடைபெற்றது. சாகித்திய விழாவின் உண்மையானநோக்கம் என்ன என்பதனையே தெரிந்துகொள்ள முடியாதவர்களினதும் தொழிலாளர்களுக்காக 'நீலிக் கண்ணீர் வடித்த'வர்களினதும் அரசியல் ஒப்பாரியில் சாகித்திய விழா முடைநாற்றமெடுத்தது.

### வானொலி அஞ்சல் ஏன்?

பேச்சாளர்களாக வந்திருந்தவர்கள் அனைவரும் வாயில் வந்தபடி உளறிவிட்டு மேடையை விட்டிறங்கினார்கள். இலக்கியம், கலை, கலாச்சாரம் சம்பந்தமான அறிவையும் உணர்வையும் சாதாரண மக்களுக்கு எடுத்துணர்த்தவேண்டிய இவ்விழா வேண்டாத அரசியல் ஒப்பாரியிலும், சிங்கள அமைச்சர்களுக்குப் பந்தம் பிடிக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தலிலும் முடிந்த விந்தையை என்னவென்றுரைப்பது?

இரண்டு பேச்சாளர்கள் மாத்திரம் ஏதோ ஒப்புக்காக இலக்கியம்பற்றிக் குறிப்பிட்டார்கள். ஏனைய சமசமாஜ, கம்யூனிஸ்ட்டுத் தோழர்களான வி. பொன்னம்பலம், க. சிவகுரு, சி. தில்லைநாதன், கலாச்சார உதவி மந்திரி சந்திரா குணசேகரா ஆகியோர் வகுப்புவாத, இனவாத, மார்க்ஸியப் புரட்டுவாதங்களை மணிக்கணக்கில் அளந்து தீர்த்தனர். சாகித்திய விழாவுக்கும் இவற்றுக்கும் என்ன சம்பந்தமோ? சாகித்திய மண்டலத் தமிழ்உறுப்பினர்களில்ஒருவர் கூட வரவழைக் [illegible] வானொலி அஞ்சல் [illegible] தென்றால் அரசியல் கபட நாடகமே தவிர வேறெதுவுமல்ல.

### திரு. சுவாமிநாதன்

மலேயா தொழில் திணைக்களத்தில் பிரதம எழுதுவினைஞராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சி உடுப்பிட்டிக் கிளையின் முக்கிய பிரமுகருமான திரு. கு. சுவாமிநாதன் அவர்கள் இத் திங்கள் 19-ம் நாள் அவரது இல்லத்தில் இயற்கை யெய்தினார்.

திரு. சுவாமிநாதன் அவர்கள் இனவுணர்வு நிரம்பப் பெற்றவர். தமிழரசுக் கட்சி நிதியென்றதும் அள்ளிக் கொடுப்பவர். உடுப்பிட்டிப் பகுதி வாலிபர்களாகிய எமக்கு 'சோறல்ல மானமே பெரிது' என்ற உண்மையை எப்பொழுதும் எடுத்துக் கூறிவருபவர். சிறந்த சமூக சேவையாளர். சமத்துவத்தை நிலைநாட்ட பாடுபட்ட பெரியார். அன்னாரின் மறைவு உடுப்பிட்டிப் பகுதி மக்களுக்கு, குறிப்பாக வாலிபர்களுக்கு, ஓர் பெரும் இழப்பாகும்.

—எஸ். விநாயகமூர்த்தி,
தென் கருணையூர்,
கரணவாய்.

# நாம் தமிழர் இயக்கம் இரண்டாகப் பிரிந்தது

## பெரும்பான்மை உறுப்பினர் தி. மு. க. வில் சேரலாம்

கடந்த ஆறு ஆண்டுகளாக திரு. சி. பா. ஆதித்தன் தலைமையில் இயங்கிவந்த 'நாம் தமிழர்' இயக்கம் பிளவுபட்டுவிட்டது. பதினெட்டு மாதங்களுக்குப் பின்னர் கடந்த 13-ம் திகதி மதுரையில் நடைபெற்ற நாம் தமிழர் பொதுச் சபைக் கூட்டத்திலேயே இப் பிளவு ஏற்பட்டது. இயக்கத் துணைத் தலைவர்களில் ஒருவரான திரு. ஈரோடு சின்னசாமி தலைமையில் பெருந் தொகையான உறுப்பினர்கள் நாம் தமிழர் இயக்கத்தை விட்டு வெளியேறியுள்ளார்கள்.

நாம் தமிழர் இயக்கம் ஒரு எதிர்க்கட்சியாகவே இயங்கி வந்தது. இப்பொழுது இயக்கத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு பிளவை உருவாக்கியுள்ளது. பதவியிலிருக்கும் காங்கிரசை எதிர்க்கக் கூடாது என்று திரு. சி. பா. ஆதித்தன் கோஷ்டியினரும், காங்கிரசை எதிர்ப்பதுடன் பிரதான எதிர்க் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரிக்க வேண்டுமென்ற ஈரோடு சின்னசாமி கோஷ்டியினருக்குமிடையே நீண்ட காலமாக கருத்து வேறுபாடு இருந்து வந்தது.

கடந்த வாரம் மதுரையில் நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டத்தில் இப் பிரச்சினை மீது விவாதம் நடைபெற்றது. இரு பகுதியினரும் தமது கொள்கைகளை வலியுறுத்தி நின்றனர். முடிவில் ஈரோடு சின்னசாமி, கா. சிவப்பிரகாசம், ஏ. சீனிவாசகமூர்த்தி ஆகியோர் தலைமையில் பெரும்பான்மையான உறுப்பினர் கூட்டத்தை விட்டு வெளியேறினர்.

கூட்டத்திலிருந்து வெளியேறிய கோஷ்டியினர் மற்றவர்களை இயக்கத்திலிருந்து நீக்கிவிட்டதாக அறிக்கை விடுத்துள்ளனர்.

திரு. சி. பா. ஆதித்தன் தலைமையில் ஒரு நாம் தமிழர் இயக்கமும், ஈரோடு சின்னசாமி தலைமையில் ஒரு நாம் தமிழர் இயக்கமுமாக இரண்டு நாம் தமிழர் இயக்கம் இப்பொழுது இயங்கி வருகிறது.

ஈரோடு சின்னசாமி தலைமையில் பெரும் பான்மையான உறுப்பினர்கள் உள்ளனர் என்றும் இவர்கள் தி. மு. க. வுடன் சேரக்கூடும் என்றும் தெரிகிறது.

### பரிசில் பெற்றவர்கள் அழைக்கப்படவில்லை

உண்மையில் பொதுமக்களிடையே பெரும் அதிருப்தியை இவர்கள் தேடிக் கொண்டார்கள். இவ்வாண்டு சாகித்தியமண்டலத்தின் தமிழ்ப் பிரிவில் பரிசில்கள் பெற்ற நால்வரில் இருவர் உடுவில் தொகுதியைச் சேர்ந்தவர்கள். 'ஒப்புக்காகவேனும் அவர்களை இவ்விழா நடத்தியவர்கள் அழைக்கவும் எண்ணவில்லையே' எனப் பலர் குறைப்பட்டுக் கொண்டனர். உடுவில் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரை ஒரு உறுப்பினராகக் கொண்ட சுன்னாகம் பட்டினசபை இவ்வாறு நடந்து கொண்டது வெட்கக்கேடு தருவதாகும்! தமிழ்ப் பண்பாடு, முறையான அரசியல் சிந்தனை, இலக்கிய உணர்ச்சிகள் எதுவுமிலா விழாவினால் சனநாயக சமதர்மத்தில் நம்பிக்கை கொண்டுள்ள உண்மைச் சமசமாஜிகள் அனைவரும் நாணித் தலைகுனிகின்றனர். பட்டினசபை சாகித்திய விழாக்கொண்டாடுதற்கென அரசாங்கம் உதவிய பணமும் பாழாகியது. தமிழ்ஒழிப்பு துரித கதியடைந்தது. அரசியல் சூழ்ச்சியே மேடையேறியது.

## வெள்ளவத்தை கல்லூரி மாணவிகளின் கதி

வெள்ளவத்தை சென்ற். கிளேயர்ஸ் பெண்கள் கல்லூரியில் படிக்கும் தமிழ் மாணவிகளின் எதிர்கால நிலையையிட்டுக் கவலை தெரிவித்தும், அதற்குப் பரிகாரம் காணும்படியும் கேட்டுக் கல்வி மந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்லைக்குத் தமிழ்ப் பெற்றோர் சங்கம் தந்தி ஒன்றினை அனுப்பி வைத்துள்ளது.

பெற்றோர் சங்கத்தின் பிரமுகர் ஒருவர் கவலைக்குரிய நிலை ஏற்பட்டதற்கான காரணத்தை விளக்கினார். 'கொழும்பு தெற்கிலேயே தமிழ் மாணவிகள் படிக்கக் கூடிய மதிப்பானவொரு கல்லூரி இருக்கிறதென்றால், அது சென்ற். கிளேயர்ஸ் கல்லூரியே. இது ஓர் அரசினர் கல்லூரி. மும்மொழியில் பாடம் போதிக்கப்படும் இக் கல்லூரியை இவ்வருட ஆரம்ப முதல் ஒரு கனிஷ்ட தராதரப் பள்ளிக்கூட நிலைக்குக் கொண்டு வருவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. அப்படியாயின் எட்டாம் வகுப்புவரையுமே போதனை இருந்திருக்கும். இந்தப் புரனமைப்புத் திட்டத்தின் கீழ், எட்டாம் வகுப்புக்கு மேல் தொடர்ந்து கல்வி பயில சிங்கள, ஆங்கில மூலம் மாணவிகளுக்குக் கொழும்பு தெற்கில் வேறு பல அரசினர் பெண்கள் கல்லூரிகளின் வாய்ப்பிருந்தாலும், தமிழ் மாணவிகள் எட்டாம் வகுப்புடன் தமது படிப்பை நிறுத்திவிட வேண்டிய நிலை ஏற்படும்.

இந்தத் திட்டத்தை தமிழ்ப் பெற்றோர் சங்கம் வெற்றிகரமாக எதிர்த்தது. சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் ஜி. ஸி. ஈ. உயர்தர வகுப்புகளை ஆரம்பிக்குமாறு கல்வி இலாகாவைச் சங்கம் கேட்டுக் கொண்ட போதும், தமிழிலே மாத்திரம் இத்தகைய வகுப்புகளை (கலைப் பகுதி) ஆரம்பிக்க இலாகா அனுமதித்தது. கல்வி இலாகாவின் உத்தரவின் பேரில் கல்லூரியின் அப்போதைய அதிபர் செல்வி சொலமன்ஸ் நடவடிக்கை எடுத்தார். ஆனால் இதை ஒரு சாரார் எதிர்த்ததுடன், அதிபரையும் இடமாற்றம் செய்ய வழி வகுத்தனர். இவர்களுடைய தூண்டுதலினால் அவ்வதிபர் இடமாற்றம் செய்யப்பட்டார்.'

கல்வி இலாகாவின் இந் நடவடிக்கையை எதிர்த்து தமிழ்ப் பெற்றோர் சங்கம் கல்வி மந்திரிக்கு முறையிட்டுள்ளது.

### புதிய இந்திய தூதுவர்

முன்னாள் ஆந்திர மாநில கவனர் திரு. பீமசேன சச்சார் இலங்கையில் புதிய இந்தியத் தூதுவராக நியமிக்கப்படலாம் என்று இந்தியப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயிற்றைக்கட்டி அறிவை வளர்க்கும் ஈழத்து மாணவிகள்

## அன்னவர் குறை போக்க நமதுபிரதிநிதிகள் முன்வரவேண்டும்

## பொங்கல் விழாவும் இலட்சிய நடிகரும்

ஆண்ணமலை பல்கலைக்கழகப் பெண்கள் விடுதிக்குள் செல்வதற்கு ஆண்களுக்கு அநுமதி இல்லையாதலால், நம் கோஷ்டியிலிருந்த பெண்மணிகள் மட்டும் விடுதிக்குள் நுழைகின்றார்கள். ஆண்மணிகளாகிய நாம் வெளியிலிருந்த ஒரு சிறிய கட்டிடத்துள் அமர்கின்றோம்.

விடுதிக்குள் நம் கோஷ்டிப் பெண்கள் நுழைந்த ஒரு சிறிது நேரத்தில், விடுதியிலிருந்து ஒரு பெரிய 'பெண் பட்டாளம்' ஒன்று நம்மை நோக்கிப் படையெடுக்கின்றது!

ஆண்களுக்குத்தான் விடுதிக்குள் செல்ல அநுமதி இல்லையே தவிர, பெண்கள் ஆண்களாகிய நம்மை வந்து 'தரிசிப்ப'தற்கு எந்தவிதகட்டுப்பாடும் கிடையாது!

### காப்பியும் கோப்பியும்

நம்மை நோக்கிப் 'படையெடுத்த' அத்தனை நாரீமணிகளும் நம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். சங்கீதத்தில் 'டிப்ளோமா' பெறுவதற்காக அங்குவந்து பயின்றுகொண்டிருக்கின்றனர்.

இலங்கையிலிருந்து வந்த நம்மைக் கண்டதில் அவர்களுக்கொரு திருப்தி. நமக்கும் அவர்களைக் கண்டதிலும், அவர்களோடு பேசியதிலும் ஒரு திருப்தி.

அதுவரை தமிழ்நாட்டில் 'காப்பி' குடித்துப் பழக்கப்பட்ட நமக்கு இங்கு இந்த யாழ்ப்பாணத்துப்பெண்கள் 'கோப்பி' தந்து உபசரித்தனர்.

### ஈழத்து மாணவிகள் படும் கஷ்டம்

ஈழத்திலிருந்து பணம் வருவது மிகவும் சங்கடமாக இருக்கின்றதாகவும், வாயைக்கட்டி, வயிற்றைக்கட்டிப் பயிற்சியை முடித்துவருவதாகவும்நம் நாட்டுப்பெண்கள் அழாக்குறையாகத் தெரிவித்த புகாரைக் கேட்க நம் மனசு நிரம்பவும் வேதனைப் படுகின்றது.

'அப்போ எப்படித்தான் செலவைச் சமாளிக்கின்றீர்கள்?' என்று நாம் கேட்டுவைக்கின்றோம்.

'அதுதான் சொன்னேமே 'வாயைக்கட்டி வயிற்றைக் கட்டி' என்று!' என்றுசொன்னார் கூட்டத்திலிருந்த ஒரு வாயாடிப் பெண்.

'அம்மணி! உடனடியாக நீங்கள் ஒன்று செய்யவேண்டும். வயிற்றைக் கட்டினாலும், வாயை மட்டும் கட்டிவிடாதீர்கள்' என்கின்றோம் நாம்.

'ஏன் அப்படி?'

'நீங்கள் தான் சங்கீதம் பயில்பவராயிற்றே!வாயைக் கட்டினால் அப்புறம் எப்படி பயிற்சியை முடிப்பது?'-பிரமாத ஹாஸ்ய வெடியை உதிர்த்துவிட்ட மாதிரி எதிரே நின்ற 'மலர்க் கூட்டத்தை' ஏறெடுத்துநோக்குகின்றோம் நாம்.

'நீங்க ஒன்றுஸார்! (யாழ்ப்பாணப் பெண்களாக இருந்தாலும் இந்தியத் தமிழ் சரளமாக விளையாடுகின்றது) அவள் வாய்ப்பாட்டுக் கத்துக்கல்ல ஸார்! வயலின் பழகிக் கொண்டிருக்கின்றாள்! வேண்டுமானால் அவள் கையைமட்டும் கட்டாமல் விட்டால் போதும்' என்று ஒரு போடு போட்டாள் கூட்டத்திலிருந்த ஒரு மாணக்கி.

### பிரதமரை பேட்டிகாண முடிவு

'தேவலையே! நம் நாட்டுப் பெண்களும் நல்லாகத் தானே பேசுகின்றார்கள்' என்று சொல்லிக்கொண்டு, முன்னர் நாம் அவர்களிடம் கேட்ட கேள்வியை ஞாபக மூட்டுகின்றோம்.

'செலவுக்கு எப்படிப் பணம் வருகின்றது?' மலாயாவிலிருந்து 'மணி ஆர்டர்' மூலம் வருகின்றது!'

'மலாயாவிலிருந்து பணம் அனுப்ப எதுவித சங்கடங்களுமில்லையோ?'

'கிடையவே கிடையாது! இலங்கையிலிருந்து பணம் அனுப்புவதென்பது தான் மலையைப் புரட்டுவதாக இருக்கின்றது. மலாயாவிலுள்ள எங்கள் சொந்தக்காரர்களின் உதவியால், ஒரு மாதிரியாக இங்குகாலத்தை ஓட்டுகின்றோம். அதெல்லாம் பெரிய கதை ஸார்' என்கின்றனர் அந்தச் சங்கீத மாணக்கிகள்.




(24)

'அஞ்சேல்! அஞ்சேல்! நாங்கள் இந்த தமிழ்நாட்டுயாத்திரையை விரைவில் முடித்துக்கொண்டுஇலங்கைதிரும்பியதும் முதல் வேலையாக நமது பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவைப் பேட்டிகண்டு இந்தச் சங்கடத்துக்கு ஒரு முடிவு கட்டுகின்றோம!' என்று அவர்களுக்கு வாக்குறுதிகொடுத்துவிட்டு, அவர்களைவிட்டுப் பிரிய மனமில்லாமல் பிரிகின்றோம் நாம்.

### கூடலூர்

பின்னால் இலங்கை திரும்பிய பிற்பாடு துரதிர்ஷ்டவசமாக நமக்குப் பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவைப் பேட்டிகாண்பதற்கு ஒய்வும், ஒழிச்சலும் இல்லாமல் போன காரணத்தால், இந்தக் கோரிக்கையை நம் தமிழ் எம். பிக்கள் செவிகளில் ஊதிவிடுகின்றோம். இந்தியாவில் பயிலும் நம் மாணக்கருக்கு ஏற்படும் சிரமங்களை போக்க வழி தேடினால் புண்ணியமாக இருக்கும்!

இதுநாள்வரை நமக்கும், நம்மோடு உற்சாகமாகப்பிரயாணம்செய்துகொண்டிருக்கும் நேயர்களுக்கும் 'டிமிக்கி' கொடுத்துவரும் நம்முடைய இந்தப் பிரயாணக் கதையின் 'கதாநாயகனை சென்னை மாநகருக்குச் செல்வதற்காக இப்போது நாம் சிதம்பரம் ரெயில்வே [illegible] மூட்டை முடிச்சுகளோடு நின்று கொண்டிருக்கின்றோம்.

'ஹோய்' என்ற பேரிரைச்சலோடு வந்து நிற்கும் ரெயிலில் இதோ ஏறிக்கொள்ளுகின்றோம் நாம்.

கம்பீரமாகப் புறப்படுகின்றது ரெயில். சென்னைக்குச் செல்லும் வழியில் இடையில் குறுக்கிடும் கூடலூரிலும் சற்று இறங்கி அந்த அழகிய ஊரை ஒரு தடவை வலம் வருகின்றோம் நாம்.

நவம்

கடற்கரையை அண்டியிருக்கும் இந்தக் கூடலூரை இப்பொழுது எல்லாரும் 'கடலூர்' என்றே அழைக்கின்றார்கள். இங்கிருந்து பல நாவாய்களும், கப்பல்களும் ஓடு முதலிய சரக்குகளை ஏற்றிக்கொண்டு நமது இலங்கைக்குக்கூட வருகின்றனவாம். ஒரு காலத்தில் மட்டக்களப்புக்கு இங்கிருந்து வந்து தொழிற்செய்த பிளளை என்ற ஒரு வணிகரையும் நாம் சந்தித்து உரையாட நேர்கின்றது

இந்தக் கூடலூர் இப்போ இரண்டுபகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. 'கூடலூர் பழைய நகர்', 'கூடலூர் புதிய நகர்' என்ற பெயரில் இயங்கும் இந்தக் கூடலூரின் சிறப்பையும், அழகையும் பார்த்து ரசித்துவிட்டு அடுத்த வண்டியில் நேரே செனனை வந்து சேருகின்றோம் நாம்!

### இலட்சிய நடிகரின் அண்ணா இல்லம்

அதிகாலை 5 39 க்கு சென்னை எழும்பூர் ஸ்டேஷனில் வந்துஇறங்கிய நம்மை மதராஸின் முக்கிய 'புள்ளி'களான 'ரிக்ஷா' வாலாக்களும், 'ஜட்கா' வாலாக்களுமாக முற்றுகையிடுகின்றனர். அவர்களுக்குப் போட்டியாக, நீலக் கோர்ட்டும், சிவப்புத் தலைப்பாவும் அணிந்த ரெயில்வே 'போர்ட்டர்'களும் சேர்ந்துகொள்ளவே நாம் திக்குமுக்காடிப் போகின்றோம்.

ஒருபடியாக அவர்களிடமிருந்து விடுதலைபெற்ற [illegible] 'ரிவர் சைட் லாட்ஜ்' பொறுப்பேற்கின்றது.

நாம் சென்னையில் வந்து இறங்கிய அன்று பொங்கல் தினமாகையால், எங்கும் புதுக்கோலமும், பச்சை இஞ்சி, மஞ்சள், கரும்பு, மாவிலைத் தோரணங்களுமாகச் சென்னை மாநகர் காட்சி தருகின்றது. தற்செயலாக இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரனின் 'அண்ணா இல்லம்' இருக்கும் தெரு வழியாகவும் நாம்வர நேருகின்றது. அம்மாடி! எஸ். எஸ். ஆரின் அந்தப் பெரிய பங்களா முழுவதும் கறுப்பும், சிவப்பும் இணைந்த தி. மு. க. கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கும் அழகைப் பார்த்து நாம் வாயைப் பிளக்கின்றோம். இது ஓர் இல்லமா? அல்லது தி. மு. க. வின் கட்சிக் காரியாலயமா? என்ற மலைப்பே நமக்கு ஏற்படுகின்றது!

சென்னை நகரின் தெருச் சுவர்களிலெல்லாம் அன்று ஒட்டப்பட்டிருந்த விளம்பரங்களைப் பார்த்து நமக்குத் தலைச் சுற்றல் ஏற்படுகின்றது. அப்பப்பா! எத்தனை கலை நிகழ்ச்சிகள்.

### கலை நிகழ்ச்சியா? மெரினா பீச்சா?

பத்மினியின் கண்ணகி நாட்டிய நாடகம், வைஜயந்திமாலாவின் திருப்பாவை நிகழ்ச்சி, நடிகவேள் எம். ஆர். ராதாவின் நாடகம், 'குலதெய்வம்' ராஜகோபாலின் நாடகம், 'வலையாபதி' முத்துக்கிருஷ்ணனின் நாடகம் — எஸ். எஸ். ஆர். தலைமையில்! சிவாஜி கணேசனின் நாடகம், நாகேஷ்—சௌகார் ஜானகி நடிக்கும் நாடகம், கவிஞர் கண்ணதாசன் நடிக்கும் நாடகம், மனோகர் குழுவின் நாடகம், சகஸ்ரநாமம் கோஷ்டியினரின் நாடகம், சீர்காழி கோவிந்தராஜன், சௌந்தரராஜன், சுசீலா முதலான பின்னணிப் பாடகர்களின் இன்னிசை. இப்படி ஒரே கலை நிகழ்ச்சிகளாகச் சென்னையின் ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் நடைபெறுவதாக விளம்பரங்கள் விளம்பரப்படுத்திக் கொண்டிருந்தன!

இவற்றில் எதைப்பார்ப்பது? எதை விடுவது? என்ற பிரச்சினையில் மூளையைப் போட்டுக் குடைந்ததில் ஒரு முடிவு தானும் கிட்டவில்லை. ஒன்றை ஒதுக்கி இன்னொன்றைப் பார்க்கக்கூடிய நிகழ்ச்சிகளா அத்தனை நிகழ்ச்சிகளும்? எல்லாமே பார்த்து ரசிக்கக் கூடிய நிகழ்ச்சிகள் தாம்! எனவே ஒரு முடிவுக்கு வருகின்றோம் நாம் இந்த நிகழ்ச்சிகளில் ஒன்றையுமே பார்ப்பதில்லை என்றும், நேரே 'மெரினா பீச்' சுக்குச் சென்று பிரயாணக் களைப்புத் தீர உலாத்தல் போடுவதென்றும் ஏகமனதாகத் தீர்மானித்துக் கொண்டு ஒரு 'பட்டாள'மாகச்சென்று புகழ் பெற்ற மெரினாக் கடற்கரையை 'மொய்க்'கின்றோம் நாம்.

### மெரினாக் காட்சி

நமக்கு முன்னமேயே மெரினாக் கடற்கரையை இளம் ஜோடிகளும், இளவட்டங்களும், பழம் கிழங்களும் மொய்த்துக் கொண்டுவிட்டார்கள். அந்த நெரிசலோடு நெரிசலாக நாமும் நெருக்கியடித்துக் கொண்டு பரந்த மணற்பரப்பில்போய் 'அப்பாடா' என்று அமர்கின்றோம்! கடலின் இரைச்சல், கடலைப் பார்க்க வந்தவர்களின் பேரிரைச்சலில் அமுங்கிவிடுகின்றது. போதாததற்கு 'சுண்டல்' விற்பவர்களின் சத்தமும், தேங்காய் மாங்காய் விற்பவர்களின் சத்தமும், மணி அணிகள், பலூன் விற்பவர்களின் சத்தமும் சேர்ந்து சந்தை இரைச்சலாய் இரைகின்றது.

'ஆகாஷ்வாணி' யில் யாரோ ஒரு வித்துவான் ஆலாபனை செய்துகொண்டிருக்கிறார். இளம் காதலர்களும், இளம் தம்பதிகளும் கைகோர்த்துக் 'கல கல' என்று பேசி மகிழுகின்றனர். பெண்கள் தலையில் சூடியிருக்கும் ஜாதி மல்லிகை, ரோஜா, இருவாட்சி, சம்பங்கி, மருக்கொழுந்தின் வாசனை இன்பலாகிரியை ஏற்படுத்துகின்றது நமக்கு.

கடலில் மணற்பரப்பில் பலதரப்பட்ட சாமான்களைப் பரப்பி வைத்துக் கொண்டு கடைக்காரன், 'எதை எடுத்தாலும் தொண்ணூறுபைசா' என்று பிசாசுக் கத்துக் கத்துகின்றான்!

கருப்பை ஓர் இயந்திரத்தில் நுழைத்துச் சாறுகப் பிழிந்து இஞ்சி—எலுமிச்சம் பழம் சேர்த்து ஒரு கிளாசில் நிரப்பி 15 பைசாவுக்கு விற்றுக் கொண்டிருக்கிறான் ஒருவன். தலைக்கு ஒன்றும் இரண்டுமாகக் கருப்பஞ்

(13-ம் பக்கம் பார்க்க)


உங்கள் கவலை என்ன?

எந்த விதமான மனக்கவலைகளோ, வாழ்க்கையில் நிறைவேற வேண்டிய காரியங்களோ இருப்பின் அவைகளை விபரமாக எழுதி அனுப்புங்கள். தெய்வ பலத்தினாலும் மந்திர சக்தியினாலும் தகுந்த நிவாரணம் செய்து கொடுக்கப்படும். இரகசியங்கள் வெளியிடப் படமாட்டாது.

கவர்மெண்ட் ரிஜிஸ்டர் மாந்திரீக வைத்தியர்

பி. எம். திசாநாயக்க,

நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா

அருத எண்ணெய் காரியாலயம்

கம்பளை.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1964 ஒக்டோபர் மாதம் 4-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183

# கூட்டு நடவடிக்கை

மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமைப் பிரச்சினை அவர்களின் உரிமைகளைப் பற்றிய பிரச்சினை என்று மட்டும் கருதவேண்டாம். தமிழ் மக்கள், முஸ்லிம் மக்கள் அனைவரையும் இப் பிரச்சினை இன்று பாதிக்கிறது. எனவே இது தமிழ்பேசும் இனத்தின் அடிப்படைப் பிரச்சினைகளிலொன்றாகும்.

குடியுரிமைப் பிரச்சினைபற்றி சிறுபான்மை மக்கள் அனைவரும் ஒரே குரலில் பேசவேண்டிய வேளை வந்துவிட்டது. பிரதம மந்திரியும் இதனைக் கட்சிப் பிரச்சினையாகக் கருதவில்லையாம். சிறுபான்மை மக்களும் இதனைத் தனியொரு கட்சியின் பிரச்சினையாகக் கருதவில்லை. சிறுபான்மை இனத்தின் பொதுப் பிரச்சினையாகவே கருதுகின்றனர்.

இப் பிரச்சினையில் சிறுபான்மை மக்கள் ஏகோபித்த குரல் எழுப்ப வேண்டுமென்பதை உணர்ந்த சிறுபான்மை இனத்தின் பிரதிநிதிகளான பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாரம் ஒரு மாநாடு நடத்தியுள்ளனர். சிக்கலைத் தீர்க்க கூட்டு நடவடிக்கை எடுப்பதென்றும் மாநாட்டில் முடிவு செய்துள்ளனர். இது முக்கியத்துவம் வாய்ந்த மாநாடாகும்.

அடுத்தமாதம் இருநாட்டுப் பிரதமர்களும் தில்லியில் கூடி மலைநாட்டுத் தமிழர்களின் தலைவிதியை நிர்ணயிக்கப் போகிறார்களாம். அவர்களின் இந்த முயற்சி சிறுபான்மை மக்களின் ஒத்துழைப்பின்றி வெற்றிபெற முடியாது. இது அவர்களுக்கும் தெரியாதிருக்க முடியாது.

பிரதமர் அரசியற் கட்சித் தலைவர்களின் கருத்துக்களை அறிந்து, அதற்கேற்ப இப்பிரச்சினைபற்றி அரசாங்கக் கொள்கையை நிர்ணயித்திருக்கிறாராம். மந்திரிசபையும் இக் கொள்கையை ஆமோதித்திருக்கிறதாம். இது 'நாடற்றவர்கள்' அனைவரும் இந்தியர்களே என்ற கொள்கைதானா அல்லது வேறு புதிய கொள்கையா என்பது தெரியவில்லை.

"பழைய" கொள்கையை அரசாங்கம் இதுவரை கைவிடவில்லையென்றால் தில்லிப் பேச்சு வார்த்தைகள் புஷ்வாணமாகிவிடுமென இப்பொழுதே கூறிவிடலாம். அந்தக்கொள்கை, பிரச்சினையைத் தீர்க்காமலிருக்க உதவுமேயன்றி தீர்ப்பதற்கு உதவாது. அது செயல்படுத்த முடியாத ஒரு குருட்டுக் கொள்கையாகும்.

இவ்வேளையில் சிறுபான்மை மக்களின் பிரதிநிதிகள் கூட்டு நடவடிக்கை எடுக்க முன் வந்திருப்பது குடியுரிமைக் கோரிக்கையை வலுப்படுத்துவதாகும். சிறுபான்மையோர் அனைவரும் ஒரே மனிதனைப் போலத் தலை நிமிர்ந்து நின்று ஏகோபித்த குரல் எழுப்பினால், இந்திய, இலங்கை அரசாங்கங்கள் அவர்களின் கருத்தை அலட்சியம் செய்துவிட முடியாது.

பெரும்பான்மையோரின் கருத்து மட்டும் தேசியக் கருத்தாக முடியுமா? பிரதமர் இதனைத் தேசியப் பிரச்சினையாகக் கருதுவதானால், பெரும்பான்மையோரின் கருத்து மட்டுமின்றி சிறுபான்மை இனத்தின் கருத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லையேல் "தேசியப் பிரச்சினை" என்பது வெறும் கண் துடைப்பாகிவிடும்.

ஆகவே தில்லி செல்லும் இலங்கைத் தூதுகோஷ்டியில் சிறுபான்மை மக்களுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டுமென சிறுபான்மை மக்களின் பாராளுமன்ற உறுப்பினர்களின் மாநாடு கேட்டுக்கொண்டுள்ளது.

சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் அவர்களின் கருத்துக்களை எடுத்துக் கூறுவதற்கும் அவர்களின் பிரதிநிதிகள் தில்லிப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள வேண்டும். பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் மாத்திரம் கலந்து கொள்வதால் ஒருதலைப் பட்சமான முடிவுகளையே காண முடியும். அத்தகைய முடிவுகளைச் சிறுபான்மை இனம் ஏற்றுக் கொள்ளாவிட்டால், அவை வெறும் காகிதத் திட்டங்களாகிவிடும். கடந்த காலங்களிலும் இதே தவறுகள்தான் நிகழ்ந்தன.

ஆதலின், பிரச்சினைக்குச் சுமுகமான, இறுதியான தீர்வு காண ஆட்சியாளர் விரும்பினால், சிறுபான்மை மக்களின் கருத்துக்களையும் தழுவித் தங்களின் கொள்கையை வகுத்துக் கொள்வதுடன், சிறுபான்மை இனத்துக்கும் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள வசதியளிக்கட்டும். அதனால் பிரச்சினை தீர வழி பிறக்கும் என்பது திண்ணம்.

சிறுபான்மை இனத்தைப் பாதிக்கும் இதர பிரச்சினைகளிலும் இதே முறையைக் கையாளும் திறனும் துணிவும் அரசாங்கத்துக்கு இருந்தால் எந்தப் பிரச்சினைக்கும் சுமுகமான தீர்வைக் காண முடியும்!

# பூட்டிய கதவு-காவலுடன் தீட்டப்படும் சட்டங்கள்

## நாட்டுக்கு நன்மை செய்திடுமா?

நாட்டுக்கு நன்மை பயக்கப் போவதாக வர்ணிக்கப்படும் சட்டங்கள் கொண்டுவரப்படும் போதெல்லாம், இந்நாட்டில் மகிழ்ச்சி ஏற்படுவதேயில்லை. மாறாக பொலீஸ், இராணுவ கெடுபிடிகள் தான் உருவெடுக்கின்றன.

மக்களுக்கு வேண்டிய ஒரு நல்ல காரியத்தைச் செய்யும்போது மக்கள் ஆரவாரித்து மகிழுவர். கிடைக்கும் நன்மையை எண்ணிக் கொண்டாடுவர். ஆனால் இலங்கையின் நிலையோ தலைகீழ்.

நாட்டுக்கு நன்மை பயக்கும் நல்லதொரு திட்டம் தரும் சட்டம் என்று கொண்டு வந்தார்கள் மொழிச் சட்டத்தை. 1956 ஜூன் மாதம் 5ம் திகதி இச் சட்டம் கொண்டுவரப்பட்ட போது—மக்களுக்கான சட்டத்தை, மக்கள் சபையில், மக்கள் பிரதிநிதிகள் கொண்டுவந்த போது—பொலீஸ் இராணுவக்காவல். ஆயுதம் தாங்கிய வீரர்கள் பொது மக்களை மக்கள் மன்றத்துக்கு அருகே செல்லவும் அனுமதி மறுத்தனர். அமைதி குலைந்தது; அராஜகம் உருவெடுத்தது. அவசர அவசரமாகச் சட்டம் நிறைவேறியது. ஆனால் நாட்டிலோ வகுப்பு வெறி கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது.

மக்களுக்கு நன்மை புரிய வந்த சட்டம் நாட்டைச் சின்னாபின்னமாக்கிச் சிதறடித்து இன ஒற்றுமைக்கு உலை வைத்ததுடன் இந்நாட்டின் சுபிட்சத்திற்கும் செல்வ வளர்ச்சிக்கும் வேட்டு வைத்தது.

29—9—64 செவ்வாய்க்கிழமை மூதவைக்குக் கொண்டுவரப்பட்ட பத்திரிகைகள் மசோதா விவாத ஆரம்ப வேளை, நமக்குக் கடந்தகால மேற்படி நிகழ்ச்சிகளை நிழற் படங்களாகக் காட்டியது.

### எரிகிற வீட்டில் பீடிக்கு நெருப்பு

உணவுப் பஞ்சம், உடைப் பஞ்சம், உற்பத்திக்குறைவு, மக்கள் பெருக்கம், அந்நிய செலாவணியின்மை, முன்னேற்றத்தடை, வர்த்தக பந்தம் ஆகிய இன்னோரன்ன பிரச்சினைகள் பூதாகாரமாக நாட்டை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் வேளை இது.

பஞ்சப் பேயும் லஞ்சப் பேயும் விரட்டப்பட வேண்டிய காலம் இது.

ஆனால் இந்நாட்டில் நடப்பதென்ன?

அவசரமில்லாத அநாகரிகச் செயலுக்கு அத்திவாரம் அமைக்கப்படுகிறது. கோர வெள்ளம் வரும்போது அணைகட்ட முயற்சி எடுக்காமல், வெள்ளத்தில் மீன் பிடிக்க முற்படுகின்றனர். வீடு பற்றி எரியும்போது பீடிபுகைக்க நெருப்பு எடுக்கின்றனர்.

இவ்வளவு அவசரமாகப் பத்திரிகை மசோதாவைக் கொண்டு வருவதற்கு ஆட்சியினர் முயலுவதன் அடிப்படையில் பலத்த அந்தரங்கத் திட்டம் ஒன்று இருப்பதாகப் பொது மக்கள் கருதுகின்றனர். பொது மக்களின் கவனத்தை நாட்டின் அன்றாடப் பிரச்சினைகளில் செலுத்தவொட்டாமல் தடுப்ப [illegible] சூழ்ச்சி இதுவென்றும் வர்ணிக்கப்படுகிறது.

### யூ. என். பி. திக்விஜயம்

சிங்களம் மட்டும் என்ற தாரக மந்திரத்தை முதன் முதலில் ஒரு தேசியப் பிரச்சினையாக்கி, தேசத்தின் தேசிய உறவையே சீர்குலைத்தவர்களான ஐக்கிய தேசியக்கட்சியினர் கிழக்கு வடக்கு மாகாணங்களுக்குப் 'போகப் போகிறோம்' 'போகப் போகிறோம்' என்று வானளாவக் கூறினர்கள். இதோ போயும் விட்டார்கள்.

மட்டக்களப்பில்......

முன்னாளில் மந்திரிகளாக விருந்து செங்கோலோச்சிய சீமான்களைக்காண யாருக்குத்தான் ஆசை வராது.

சுதந்திரன்
அரசியல் விமர்சகர்

முன்னாளில் 'குடை நிழலிருந்து குஞ்சர மூர்ந்தோர் நடையெலிந்து' வந்ததை கண்டு மட்டக்களப்பு மக்கள் பலர் பரிதாபப்பட்டதுண்டு. பட்ட சூட்டின் தழும்புகளை மறக்கமுடியாத மக்கள், பரிதாபப்படுவதை விட வேறு என்னதான் செய்வார்கள்.

முன்னாள் பிரதமர் நாட்டின் சிற்பி திரு. சேனநாயக்காவின் புதல்வர் திரு. டட்லி சேனநாயக்கா, முன்னாள் நிதி அமைச்சர் திரு. ஜெயவர்த்தன ஆகியோரெல்லாம் காட்சி கொடுத்தனர். புதினக்காட்சிச்சாலைப் பொருட்களைப்பார்ப்பதுபோல் மட்டக்களப்பு மக்கள் இவர்களைப் பார்த்தனர்

### சேர்ந்த செல்வம் சிதற வழி?

நல்ல விளைச்சல் பூமிகளுக்கு உடைமையாளர் சிலரிடம் ஒட்டியிருக்கும் கொஞ்சப் பொருள், புரள வழிதெரியாமல் தேங்கி நிற்கிறது. வழக்குவகையறுக்களில் வாரிச் சேர்த்த செல்வம், சிதற வழியறியாமல் சிக்கிக் கிடக்கிறது. தேங்கிக் கிடக்கும் திரண்ட செல்வங்கள் வெளியேற ஐ. தே. கட்சி வாய்ப்புகளை வழங்கப்போகிறது. பதுங்கியிருக்கும் பணம் வெளியேறி டாக்டர் பெரேராவின் திட்டங்களுக்காவது உதவட்டுமே!

'மொழிப் பிரச்சினையில் 'சிங்களம் மட்டும்' சட்டத்துக்கு மீறி எதுவுமே செய்ய முடியாது; தமிழ்பேசுவோருக்கு, அரசாங்க வர்த்தமானி பகுதிகள் தமிழில் பிரசுரிக்கவும், தமிழில் படிக்கவும், ஏன் கதைக்கவும், கடிதம் எழுதவும் வழிவகை செய்வோம்' என்று தங்கள் மொழிக் கொள்கையினையும் உள்ளதை உள்ளபடி இந்த யூ. என். பி. தலைவர்கள் கூறியிருக்கின்றனர். இந்த வகையில் இவர்களுடைய நேர்மையை—உண்மையை மறைக்காத தன்மையையிட்டு மட்டக்களப்புமக்கள் பாராட்டாமலில்லை. அத்துடன் தங்களுடைய உள்ளப் போக்கையும் மட்டக்களப்பு மக்கள் நாசூக்காக எடுத்துக் காட்டத் தவறவில்லை.

யாழ்ப்பாணத்தில்......

'தமிழ்பேசும் மக்களின் நேசனாக நான் இன்று ஒரு தோற்றத்தில்வந்துள்ளேன். நாளை அரசியல் தோற்றத்தில் வருவேன்' என்று கொழும்பு மாநகர அதிபர் யாழ்ப்பாணம் கொக்குவிலில் கூறியிருக்கிறார். யாழ்ப்பாணத்திலும் பணம் படைத்த பலர் ஐ. தே. களுக்கு வரவேற்பளிக்கக் காத்துக்கொண்டில்லாமலில்லை. மட்டக்களப்பில் புதினக்காட்சிப் பொருட்களாகக் கணிக்கப்பட்டவர்கள், யாழ்ப்பாணத்தில் 'மிருகக் காட்சிச் சாலையைச்சேர்ந்தவைகள்' என்ற வர்ணனைக்கணைக்கு இலக்கானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எல்லாம் பெண்ணாலே

அம்பாறை இ. போ. ச. தொழிலாளர்கள் திடீரென ஒரு வேலைநிறுத்தத்தைத்தொடங்கினார்கள். இவ்வேலை நிறுத்தத்துக்கு காரணப் பொருளாக அமைந்தவர் யார் தெரியுமா? ஒரு ஆசிரியை.

அந்த ஆசிரிய அம்மையாரின் வீட்டு வாசலில் பஸ் வண்டி நிறுத்தப்படாததனால் பெரிய அனர்த்தமே விளைந்துவிட்டதாம்.

பிரதமர் சிறிமாவோ அம்மையாரின் மகள், லண்டன் மாநாகரப் பள்ளியில் பயிலச் செல்ல நாட்டின் நடைமுறைச் சட்ட விதிகளை மாற்றி அமைக்கப்படும்போது, ஒரு பெண் ஆசிரியையின் கோரிக்கை (?), அதுவும் இந்தப் பெண் அரசாட்சியில் ஈடேறுமலா போய் விடும்?

## சர்வாதிகார ஆட்சி ஏற்பட....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டித்து வந்த சமசாஜக்கட்சி உறுப்பினரான டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, பத்திரிகைகள் மசோதாவை எவ்வாறு கண்டித்து வந்துள்ளார் என்பதை ஆதார பூர்வமாக எடுத்துரைத்தார். 'அரசாங்கத்தின் ஊதுகுழலாக பத்திரிகைகள் அமைக்கும் முறையினை இறுதிவரை எதிர்ப்பேன்', என்று கூறிய டாக்டர் வாசகங்களை அப்படியே எடுத்துக்காட்டினார்.

சுதந்திரக் கட்சிக்கு எதிராகப் பத்திரிகைகள் பிரச்சாரம் செய்தன என்ற காரணத்தினால் தானா பத்திரிகைகளின் மேல் வஞ்சம் தீர்க்க ஆளுபவர்கள் முனைகிறார்கள்? அப்படியானால் 1960ம் ஆண்டு இவர்கள் எப்படி ஆட்சிபீடம் ஏற முடிந்தது? பொது மக்கள் பத்திரிகைகளின் பொய்யுரைக்கும் புனைந்துரைக்கும் செவிமடுக்கவில்லை என்பது இத் தேர்தலின் முடிவுகளினால் தெளிவாக்கப்பட்டிருப்பதனால், பத்திரிகைச் சுதந்திரத்தை நசுக்குவதன் மூலம் வஞ்சம் தீர்ப்பது அவசியமற்ற செயலாகும் என்பதனையும் திரு. மாணிக்கம் சுட்டிக்காட்டினார்.

29ம் திகதி செவ்வாய்க்கிழமை பகல் மூதவையில் பத்திரிகைகள் மசோதாவினை நீதி அமைச்சர் திரு. சி. ரி. ஏ. டி. சில்வா பிரேரித்தபோது தான் மேற்கண்ட கண்டனக் குரலை மூதவை உறுப்பினர் திரு. மு. மாணிக்கம் எழுப்பினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலவாக்கொல்லையில்

# இ. தொ. க. கூட்டத்தை நிறுத்தும் முயற்சி படுதோல்வி

## விஷமிகள் கொட்டம் முறியடிக்கப்பட்டது

கடந்த வார இறுதியில் இலங்கைத் தொழிலாளர் கழகம் மஸ்கெலியாவிலும், தலவாக்கொல்லையிலும் பிரசாரக் கூட்டங்கள் நடாத்தின. இரு கூட்டங்களும் அமைதியாக நடைபெற்றன. பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டனர். தலவாக்கொல்லையில் சில விஷமிகள் கூட்டத்தைத் தடுத்து நிறுத்த எடுத்த முயற்சிகள் படுதோல்வியில் முடிந்தன.

இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் பிரசாரக் கூட்டங்கள் இரண்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன. ஒன்று மஸ்கெலியாவிலும், மற்றது தலவாக்கொல்லையிலும் இடம் பெற்றன.

பெருந்தொகையான மக்கள் இரண்டு கூட்டங்களிலும் கலந்து கொண்டனர். திருவாளர்கள்: வ. நவரத்தினம் பா. உ., செ. கோடீசுவரன், செ. கலியபெருமாள், கரிகாலன், தென்னரசு, எல்லாளன் ஆகியோர் இவ்விரு கூட்டங்களிலும் உரை நிகழ்த்தினர்கள்.

ஞாயிற்றுக்கிழமை காலை ஒன்பதரை மணியளவில் தலவாக்கொல்லை வாடி வீட்டிலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகியது. ஊர்வலத்தில் பெருந்தொகையான கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். ஊர்வலம் கூட்டம் நடைபெறும் ஜெயந்தி மாவத்தையைச் சென்றடைந்ததும், கூட்டம் நடைபெறும் இடம் தனி நபர் ஒருவருக்குச் சொந்தமானது என்று கூறி ஒரு சிலர் கூட்டம் நடைபெறுது தடுக்கும் நோக்கத்துடன் பழம் டயர்களை அவ்விடத்தில் பரப்பினர்.

ஆனால் கழகத் துணைத் தலைவர்களில் ஒருவரான திரு. மு. எல்லாளன் கூட்டம் நடைபெற்ற ஜெயந்தி மாவத்தைக்குரிய அனுமதிக் கடிதத்தை ஏற்கனவே பெற்றிருந்ததால் விசமிகளின் முயற்சி பொலீசாரின் ஒத்துழைப்புடன் முறியடிக்கப்பட்டது.

கூட்டம் ஆரம்பிப்பதற்குச் சிறிது நேரத்திற்கு முன்னர் தலவாக்கொல்லை நகர சபை உறுப்பினர் என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட ஒருவர் ஒலிக்கம்பத்தில் ஒலிபெருக்கி கட்டப்பட்டிருந்ததை ஆட்சேபித்து அதை அகற்றச் செய்தார். பின்னர் ஒலிபெருக்கி மேசைமீது வைக்கப்பட்டது.

கூட்டம் அமைதியாக நடைபெற்றுக் கொண்டிருக்கையில் அரைமணி நேர இடைவெளிக் கொன்றாக மூன்று கற்கள் மலைமுகட்டின் மறைவிலிருந்து வீசப்பட்டன. அவற்றுள் ஒன்று வீதியிலும், ஒன்று பொலீசாரின் ஜீப் வண்டியிலும், மற்றையது தொழிலாளி ஒருவரின் காலிலும் விழுந்தது. இதைத் தொடர்ந்து பொலீசார் மறைவிடங்களில் சென்று தேடிய பொழுது யாரும் அகப்படவில்லை. ஆனால் கூட்டம் எத்தகைய குழப்பமுமின்றி அமைதியாகத் தொடர்ந்து நடைபெற்றது.

### அதி. வணக்கத்துக்குரிய பீட்டர்பிள்ளை

அதி. வணக்கத்துக்குரிய வண. பிதா பீட்டர்பிள்ளை அவர்கள், சென்ற ஞாயிற்றுக்கிழமை விடியற்காலையில் இவ்வுலக வாழ்வை நீத்துப் புகழுடம்பெய்தினார்.

1904ம் ஆண்டு, ஒக்டோபர் மாதம் 19ம் திகதி பிறந்த வண. பீட்டர்பிள்ளை அவர்கள், தமது ஆரம்பக் கல்வியினைத் தமது பிறப்பிடமாகிய வெள்ளப்புவலி உள்ள தமிழ்ப் பாடசாலையொன்றில் பயின்றார்.

கல்வியில் அவர் தலைசிறந்து விளங்கினார். ஜூனியர் கேம்பிரிட்ஜ் பரீட்சையில் எட்டு விசேஷ சித்திகளுடன் உலகிலேயே முதன்மையானவராகத் தேறினார். கேம்பிரிட்ஜ் ஜூனியர் பரீட்சையிலும் ஒன்பது விசேஷ சித்திகள் பெற்று, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலேயே இதுவரை முறியடிக்கப்படாத சாதனையொன்றை நிறுவினார்.

1940ல் வண. பீட்டர் பிள்ளை அவர்கள் சென்ற். ஜோசெப் கல்லூரி அதிபராக நியமிக்கப்பட்டார். 1961ம் ஆண்டு வரை இப்பதவியில் இருந்த அவர், அவ்வருடம் தொடக்கம் அகுவினாஸ் பல்கலைக்கழகக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றினார்.

இவருடைய மறைவு கத்தோலிக்கருக்கும், நாட்டுக்கும் பெரும் இழப்பாகும்.

## நாடற்றவர்கள் என்று எவருமில்லை

திரு. நவரத்தினம் அவர்கள் தலவாக்கொல்லையில் நடைபெற்ற இ. தொ. க. பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறியதாவது:

யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படுகையில் நகரசபை மண்டபத்தில் ஒரு தொழிற்சங்க மாநாடு அமைதியாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. அம் மாநாட்டில் பெருந்தொகையான சிங்களத் தொழிலாளர்களும் பங்குபற்றினார்கள். அம் மாநாட்டை யாரும் குழப்ப முனையவில்லை. ஆனால் இங்கே நடைபெறும் ஒரு தொழிற்சங்கக் கூட்டத்தைக் குழப்பச் சிலர் முனைகிறார்கள். இந்த நிலை வருந்தத் தக்கது.

எம்மிடம் எவ்வித பாரபட்சமும் கிடையாது. நாம் சமாதானத்தை விரும்புகிறவர்கள். அதற்காகப் பயந்து ஒடுங்கிவிடமாட்டோம்.

மேலும் அவர் பேசுகையில் நாடற்றவர்கள் என்று யாருமில்லை என்றும், இந்த நாட்டையே தாயகமாகக் கொண்ட மலையக மக்களை வெளியேற்றமுனைந்தால் முப்பதுலட்சம் தமிழ்பேசும் மக்களும் ஆளவந்தாரின் அநியாயத்தைப்பார்த்துக்கொண்டு கைகட்டி வாழமாட்டார்கள் என்றும் கூறினார்.

## மங்கையர் சங்கதி

### அடுத்தவாரம் சந்தியுங்கள்

புரட்டாசி மாசம் பிறந்தால் சைவப் பெண்டிரின் உள்ளமெல்லாம் உவகையால் பொங்கும். பெண்மைக்குப் பெருமை யூட்டும் 'நவராத்திரி' இம் மாதத்தில்தானே ஆரம்பமாகிறது. சைவ மகளிருக்கு மட்டும் அல்லாமல் பெண்மைக்கே பேரானந்தம் அளிக்க வல்ல நவராத்திரி காலத்தில் சுதந்திரன் 'மங்கையர் சங்கதி' பகுதியும் ஆரம்பமாகிறது என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

'நவராத்திரி' பற்றி 'மகேசுவரி' எழுதியுள்ள கட்டுரையுடன் 'மங்கையர் சங்கதி' அடுத்த வாரம் ஆரம்பமாகிறது.

மகளிருக்கான சகல தகவல்களையும் தரத்தக்க 'மங்கையர் சங்கதி' பகுதியை வாராவாரம் படிக்கத் தவறாதீர்கள்.

—செல்வி

## வாழ்க மணமக்கள்



திரு. முருகேசு பாலசுப்பிரமணியம் அவர்களுக்கும் செல்வி செல்லத்துரை லோகநாயகி அவர்களுக்கும் 5-9-64-ல் சிறப்பாக மண விழா நடைபெற்றது.

## தபால் திணைக்களத்தில் 'பகற் கொள்ளை'

திங்கட்கிழமை தொடங்கிய பாராளுமன்றத்தில் இலாகாக்களுக்கும் பிரிவுகளுக்கும் மான்யம் ஒதுக்குவதற்கான விவாதங்கள் ஆரம்பமாயின.

தபால் இலாகாவின் சீர்கேடுகளைச் சுட்டிக்காட்டிய திரு. அ. அமிர்தலிங்கம் 'தமிழ் பேசும் பொது மக்கள் தபால் கந்தோர் சேமிப்பு வங்கிமூலம் சேர்க்கும் பணத்தை அதிகமாக தன்னகத்தே கொண்டுள்ள தபால் இலாகா தமிழ் பேசும் பொது மக்களுடன் தமிழில் தொடர்பு கொள்ள மறுக்கிறது. அவர்களுக்குப் புரியாத மொழியான சிங்களத்தில் கணக்குகளைச் சமர்ப்பிக்கிறது," என்று சொன்னார்.

'அதிக கட்டணத்தை வசூலித்துவிட்டு தந்திகளைப் பெறும் தபால் இலாகா அவற்றை உரியவர்களிடம் சாதாரண தபால் மூலம் அனுப்பி வைப்பது 'பகற் கொள்ளை'க்குஒப்பாகும்' என்று கடிந்த திரு. அமிர்தலிங்கம், அப்படி ஏற்படும் சமயங்களில் தந்திக்காகப் பெறப்படும் தொகை திரும்பக் கொடுக்கப்பட வேண்டும் என்றும் வற்புறுத்தினர்.

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமிடையில் ஒரே தொலைபேசித் தொடர்பு இருப்பதாகவும், அதன் சேவை இராணுவத்தினருக்கு மட்டுமே அதிக நன்மை அளிப்பதாகவும் இதனால் மக்கள் பிரதிநிதிகள் பொது மக்கள் அடையும் கஷ்டங்களைவிட்டும் திரு. மு. சிவசிதம்பரம் எடுத்துக் கூறினர்.

வடபகுதியிலுள்ள பல திவுகளுடனும் தொடர்பு கொள்ளுவதற்காக இணைக்கப்பட்ட வானொலி தொடர்புக் கருவிகளை இராணுவமும் கடற்படையும் கைப்பற்றிக் கொண்டமையினால் பொது மக்களின்சேவைக்குக் காலங் கடந்த பழைய கருவிகளே உபயோகிக்கப்படுவதால் ஏற்படும் சிரமங்களைச் சாவகச்சேரி உறுப்பினரான திரு. வ. நவரெத்தினம் எடுத்துக் காட்டினர்.

### தமிழ்த் தந்தி

ஆளும்கட்சி உறுப்பினரான திரு. லக்ஷ்மன் டி சில்வா, தனிப்பட்ட வர்த்தகர்களிடம் கிடைக்கும் மரியாதையும் பண்பொழுக்கமும் அரசாங்க வர்த்தகத் துறைகளிலுள்ளவர்களிடம் இல்லாதிருப்பது வருந்தத்தக்கது என்று கூறிய கூற்று விசித்திரமாக விருந்தது. அரசாங்க ஊழியர்கள் பணிவுடைமை, பண்புடைமையில் பயிற்றப்படவேண்டும் என்பதையும் அவர் கூறியபின்னர், தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. சா. ஜே. வி. செல்வநாயகம், கொழும்பில் ஏராளமான தமிழ்பேசும் மக்கள் இருந்தும்மத்திய தந்தி அலுவலகத்தில் மட்டும் தமிழ்த் தந்தி ஏற்கப்படுவதற்கு வருத்தம் தெரிவித்துவிட்டு, கொள்ளுப்பிட்டி தபால் அலுவலகத்திலிருந்த தமிழ்த்தந்தி வசதி ஒழிக்கப்பட்டதைக் கண்டித்தார்.

மத்திய தந்திக் கந்தோர் போன்று வேறு சில தபாற் காரியாலயங்களிலும் தமிழ்த்தந்தி ஒழுங்குகள் செய்யப்படவேண்டும் என்று வற்புறுத்தினர்.

தபால்—தந்தி இலாக்கா ஊழியர்களுக்குள் ஒற்றுமையும் இணைந்துசெயலாற்றும் தன்மையும் இல்லாதிருப்பதே இவ்விலாகாவின் சீர்குலைவுக்குக்காரணம் என்பதை எடுத்துக்காட்டிய திரு. சி. மு. இராசமாணிக்கம் காலத்துக்கேற்ற புதிய மாற்றங்கள் செய்யப்படாமையைக் கண்டித்தார்.

### 'தில்லி பேச்சில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும்.

இவ்வறிக்கையின் அடிப்படையில் மேற்கொண்டு நடவடிக்கைகள் தொடர, திருவாளர்கள் சா. ஜே. வே. செல்வநாயகம், எஸ். தொண்டமான், அ. அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரம் ஆகியோரைக் கொண்ட உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.


ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை;

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழ்ச் சட்டம்பி

**"எல்லாற்றை பெட்டையளும் காற்சட்டை போட்டவங்களோடை இங்கிலீசு பேசிக் கொண்டு போக என்றை பெட்டையை மாத்திரம் வேட்டி உடுத்தவரோடை தமிழ் பேசிக்கொண்டு போகச் சொல்லுறியளே."**

அராலியூரான்

'தங்கம்! தங்கம்! இஞ்சை ஒருக்கா ஓடியா?'

'ஏனணை அம்மா கூப்பிடுகிறியள்?'

'உன்ரை கொத்தானெல்லே பெண்சாதியோடை போறார். ஓடியந்து பாரன்'

'உண்ணணைப் போறார்?'

'உண்ணணைப் போறார் பின்னை' என்று பார்வதி சத்தியம் செய்து கூறியதும் விட்டு விருந்தையைக் கூட்டிக்கொண்டு நின்ற தங்கம் கூட்டுமாறையும் அப்படியே விட்டுவிட்டு ஓடினாள் தெருப்படலையடிக்கு.

'பாத்தியே உன்ர கொத்தானை. எங்கண்டை வீட்டுக்கே வராமல் போறார். அவருக்கு நாங்கள் என்ன செய்தனாங்கள்'

'என்ன செய்தனிங்களோ? அவருக்கு நீங்கள் செய்ததை எல்லாம் நினைத்தால்...'

'என்னத்தைச் செய்தனாங்கள்? நாங்கள் சொன்ன மாதிரிப் படிச்சிருந்தால் ஏன் இப்படியெல்லாம் வருகுது'

'நீங்கள் சொன்ன மாதிரிப் படிச்சாப்போலை ஏதோ பெரிய மனிசனா விடுவாரே? இப்ப மாத்திரம் ஏதோ குறைவே?'

'இப்ப குறைவில்லைதான். இருந்தாலும்...'

'என்ன? என்ன இருந்தாலும் என்று இழுத்துப் பேசிறியள். இப்பதானாமே அவருக்குச் சரியான சம்பளம். வேலையும் சொந்த ஊரிலையாம். அவருக்கு இன்னும் சம்பளம் ஏறப் போகுதாம்!

'ஆர் சொன்னது?'

'பேப்பர் தான் சொல்லுது. சுயபாஷைக்காரருக்கு இன்னும் சம்பளத்தைக் கூட்டப் போறாங்களாம்'

'உண்ணணை எண்டு சொல்லு?'

'உண்ணணை'

'நாங்களெல்லே கொத்தான்ரை சம்பளம் பிச்சைக்காரச் சம்பளம், குடும்பத்தைக் கொண்டு நடத்த முடியாதெண்டெல்லே நினைச்சு உன்னை'...

'என்னை அவருக்குச் செய்து குடுக்காமை விட்டாப்போலை அவர் குறைஞ்சு போனாரே? என்னைக் கலியாணம் செய்ய வேணுமெண்டு அவர் பட்ட பாடு. பாவம்.' என்று தங்கம் சொன்னதும் கடந்த காலச் சம்பவங்கள் யாவும் பார்வதியின் நினைவுக்கு வந்தன.

ஆனந்தன் பார்வதியின் அண்ணன் மகன். அவன் பிறந்து ஐந்து ஆண்டுகளால் தகப்பன் இறந்துவிட்டான். சின்னஞ் சிறு வயதிலே தகப்பனை இழந்த ஆனந்தன் அவ்வூர்த் தமிழ்ப் பாடசாலை ஒன்றில் படித்தான். ஆனந்தன் படிக்கும் காலத்தில் ஆங்கிலத்திற்கு நல்ல மதிப்பு இருந்தது. ஆங்கிலம் படித்தவர்களுக்கே அரசாங்கத்தில் உத்தியோகங்கள் கிடைத்தன. உத்தியோகத்திற்காக ஆங்கிலத்தில் மோகங் கொண்ட தமிழர்கள் பலர் தமிழை வெறுத்து ஆங்கிலக் கல்லூரிகளில் ஆங்கிலம் படிக்கத் தொடங்கினர்.

ஒரு நாள்.

'தம்பி ஆனந்தன்! இந்தக் காலத்திலை இங்கிலீசு படிக்காமை ஒண்டும் செய்ய முடியாது. நீயும் இங்கிலீசுப் பள்ளிக்கூடத்திலை போய்ப் படியன்'

'எனக்கேன் இங்கிலீசை. எங்கண்டை தமிழ் இருக்கையுக்கை தமிழை விட்டுவிட்டு இங்கிலீசு படிக்கிறதே'

'பின்னை உனக்கு உத்தியோகம் வேண்டாமே?'

'உத்தியோகத்துக்காகத் தாய் மொழியை விடச் சொல்லுறியளே, தமிழ் படிச்சவை உத்தியோகம் பாக்கையில்லையே. பண்டைத் தமிழர்கள் எல்லாம் உத்தியோகம் பாத்தவையே?'

'தமிழ் படிச்சவைக்கு என்ன உத்தியோகம் கிடக்குது. ஆக அந்த வாத்தி வேலைதான் கிடக்குது. அதுவும் பிச்சைக்காரச் சம்பளம்'

'அந்தக் காலத்து வாத்திமாரெல்லாம் சம்பளத்துக்காகவே படிப்பிச்சவை. என்ன இருந்தாலும் நான் தமிழ் தான் படிக்கப் போறன். தமிழிலை இருக்கிற இலக்கண இலக்கியம் வேறை எந்த மொழியிலை இருக்குது?'

'ஆர் சொன்னது உப்பிடி? நானும் தமிழ் படிச்சனான் தான!'

'ஓ! நீங்களும் தமிழ் படிச்சிருக்கலாம். ஆனால், அங்கினை ஒண்டையும் இங்கினை ஒண்டையும் படிச்சிருப்பியள். முற்றும் ஆராய்ந்து படித்தவனுக்குத்தான் அதன் பெருமையும் சிறப்பும் தெரியும்!'

'சரி சரி, உன்னோடை கதைச்சு வேலையில்லை. உன்ரை கொம்மாவை ஒருக்கா வந்துவிட்டுப் போகச் சொல்லு!' என்று பார்வதி சொன்னதும் ஆனந்தன் சிரித்துக் கொண்டே எழுந்து வீட்டுக்குப் போனான்.

'தங்கம்! மச்சாள் இருக்கிறுவே?'

'என்ன மாமி! அம்மாவையே கேக்கிறியள். அவ கோனுக்கை இருக்கிறு. வாருங்கோவன் உள்ளுக்கு!' என்று கூறித் துள்ளிக் குதித்துக்கொண்டு மான் போல் ஓடி மறைந்தாள் தங்கம். தங்கத்தைப் பின் தொடர்ந்து சென்றாள் பரிமளம்.

'உதார் எங்கண்டை பரிமள மச்சாளே? வா மச்சாள் வா'

'வரச்சொல்லிச் சொல்லியனுப்பினனிங்களாம். அது தான் வந்தனான்.'

'எனணை மச்சாள் நிண்டு கொண்டு கதைக்கிறியள். உதிலை இரன். உன்ரை மேனைப் பற்றித்தான் கதைக்க வேணும்' என்று பார்வதி சொன்னதும் சேலைத் தலைப்பைச் சரி செய்து கொண்டே நாற்காலியில் அமர்ந்தாள் பரிமளம்

'நேற்றைக்கு மேன் என்ன சொன்னவர்?'

'அவன் எல்லா விஷயமும் சொன்னவன் தான். என்ன இருந்தாலும் தமிழ்தானாம் படிக்கப் போறான் வருங் காலத்திலை தமிழுக்குத் தானாம் மதிப்பு வரும்'

'உந்த எம்.பீ மார் சும்மா சொல்லுவங்கள். பிறகு என்ன நடக்குதெண்டு பாருங்கோவன்'

'மச்சாள்! என்னை என்னணை செய்யச் சொல்லுறாய்?'

'மேனை இங்கிலீசு படிக்கச் [illegible] இங்கிலீசு படிக்கையுக்கை இவர் மாத்திரம் தமிழ் படிக்கப் போறாராமே?'

'அவன் தமிழ் தான் படிக்கப் போறேனெண்டு ஒற்றைக் காலிலை நிக்கிறான்.'

'அப்பிடியெண்டா உன்ரை மேனுக்கும் என்றை மேளுக்கும் ஒத்துவராது. அவளை நாங்கள் இங்கிலீசு படிப்பிக்கப் போறம்'

'நான் என்ன செய்யிறது? நீங்கள் என்னத்தை எண்டாலும் செய்யுங்கோ' என்று சொல்லிக் கொண்டே நழுவியிருந்த முந்தானைச் சேலையைச் சொருகிக் கொண்டு போனாள் பரிமளம்.

ஐந்து வருடங்களுக்குப் பின்:

'என்ன மச்சாள்! இண்டைக்கு உறவினர்களோடை வந்திருக்கிறாய்? என்ன விஷேசம்?'

'ஒண்டுமில்லை, என்னை மேன்ரை விஷயமாகத்தான் வந்தனாங்கள்.'

'என்ன விஷயம்?'

'கலியாண விஷயமாகத் தான்.'

'ஆருக்குச் செய்ய...'

'என்ரை ஆனந்தனுக்கும் தங்கத்துக்கும்...'

'என்ன!...நான் தானே படிக்கையுக்கை சொன்னனான்'...

போனதை விடு மச்சாள். அவன் தானே இப்ப உத்தியோகமாகி விட்டான்.'

'என்ன உத்தியோகம்? தமிழ்ச் சட்டம்பிதானே?'

'ஓமணை மச்சாள்'

'அது ஒத்துவராது. வேறை யாரையும் பாத்துச் செய்யுங்கோ'

'உருத்துக்காகவோ உத்தியோகத்துக்காகவோ கலியாணம் செய்யப் போறியள்.'

'எல்லாற்றை பெட்டையளும் காற்சட்டை போட்டவங்களோடை இங்கிலீசு பேசிக்கொண்டு போக என்ரை பெட்டையை மாத்திரம் வேட்டி உடுத்தவரோடை தமிழ் பேசிக்கொண்டு போகச் சொல்லுறியளே?'

'ஏன் தமிழ்ச் சட்டம்பி உத்தியோகம் சரியில்லையே?'

'சரியெண்டு வை. சம்பளம் என்ன தெரியுமே.'

'இஞ்சை பார் மச்சாள்! சம்பளம் குறைஞ்சாப் போலை தமிழ்ச் சட்டம்பியைத் தள்ளி வைக்காதையுங்கோ. ஒரு காலத்திலை தமிழ்ச் சட்டம்பிமாருக்கும் நல்ல காலம் வரும்'

'அது வந்த காலத்திலே பாப்பம். இனிமேல் இதைப் பற்றிக் கதைக்காமல் உன்ரை மேனுக்கு எங்கையாலும் பார்த்துக் கலியாணத்தைக் கட்டிவை.'

'அது எனக்கும் தெரியும். இனிமேல் இந்த விஷயமாக உன்ரை வீட்டுக்கு வந்தால் உன்ரை காலுச்செருப்பாலை அடி' என்று சொல்லிக் கொண்டே விறுவிறென்று நடந்தாள் பரிமளம்.

ஆனந்தனுக்கும் அவ்வூரைச் சேர்ந்த பிரபல விவ

**சிறுகதை**

சாயி ஒருவரின் மகள் ரோகிணிக்கும் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. ரோகினி வறுமைப்பட்டவள். அதிகம் படிக்காதவள். ஆனால் பண்புள்ளவள். ரோகினியின் சிறந்த பண்பு ஆனந்தனைக் கவர்ந்தது. ஆனந்தன் ரோகினியை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்டதையிட்டுப் பெருமைப்பட்டான்.

'என்ன பார்வதி! ரோட்டையே பார்த்துக் கொண்டு நிக்கிறியள்? என்ன விஷேசம்?' என்று அந்த வீதியால் வந்த தம்பையா மாஸ்ரர் கேட்டதும் பார்வதி சுய நினைவுக்கு வந்தாள்.

'ஒண்டுமில்லை மாஸ்ரர். எங்கண்டை மருமேனும் பெண்சாதியும் போகினம். அதுதான் என்றை மேளுக்குக் காட்டினனான்.'

'இப்ப காட்டினாப் போலை என்ன. அந்தப் பொடியன் கேட்ட நேரம் செய்து கொடுத்திருந்தா உன்ரை மேள் ஏன் உப்பிடி இருக்குது'

'அதுக்கென்ன மாஸ்ரர் செய்யிரது. மருமேனுக்குப் பேசியிருந்ததெண்டெல்லே ஒருத்தரும் மாட்டமெண்ணுறாங்கள்.'

'பார்வதி! இப்பவெல்லே மருமேனுக்குச் சம்பளம் கூட்டிப் போட்டாங்கள். அவன்றை சம்பளத்துக்கும் மதிப்புக்கும் ஆரும் கிட்ட நிக்க முடியுமே?'

'நானென்ன செய்யிறது. இதெல்லாம் காலம் செய்யிற வேலை மாஸ்ரர். அல்லாட்டித் தமிழ்ச் சட்டம்பியை வேண்டாமெண்டு தள்ளியிருப்பேனே? தமிழை வேம்பென வெறுத்துவிட்டு இங்கிலீசைக் கரும்பென நினைத்தது என் தவறுதான். அதுக்கினி என்ன செய்யிறது?'

(யாவும் கற்பனை)

## சிறுகதை—அது சிறிதாக....

(2-ம பக்கத் தொடர்ச்சி)

ஊதி அதனைப் பெருப்பித்துக் கதையாகப் படைக்க வேண்டும். அந்தக் கதையைச் சுருக்கமாகப் படைத்து விட்டால் அது சிறு கதையாக மலர்கிறது.

நான் முதல் முதலில் படைத்த சிறு கதை 'நினைவு' ஆகும். அச் சிறுகதை என்னால் முதலில் படைக்கப்பட்ட போதிலும், அதன் பின் படைக்கப்பட்ட சிறுகதைகளே முதலில் பிரசுரமாகின 'நினைவு' என்ற எனது முதல் எழுத்தோவியம் 63 ம் ஆண்டில் ஈழநாடு, ஞாயிறு இதழில் பிரசுரமாகியது 'நினைவு'க்குப் பின் எழுதப்பட்ட சிறு கதைகள் தாமுள்ளவைகளாக இருந்த போதிலும் 'நினைவு' எனது முதல் எழுத்தோவியம். அச் சிறுகதை பிறந்த வரலாறே பெரிய தோர் கதை அச் சிறுகதையின் பின்னணியில் எனது நண்பன் ஒருவனின் கதையே அமைந்திருக்கிறது.

### நண்பன் கூறிய கதை

சிறுகதை எழுதக் கரு தேடிய போதெல்லாம் நண்பன் கூறிய கருத்துக்களே என் மனதில் தோன்றின கடைசியில் அக்கருவை வைத்தே என் முதற் சிறுகதையைப் படைக்க முற்பட்டேன். நண்பனின் கதையை அப்படியே கதையாக எழுதுவது சரியாகத் தோன்றவில்லை. எனவே சில மாற்றங்களைச் செய்து எனது கதையை உருவாக்கினேன்.

எழுதிய கதையைத் திரும்ப வாசித்துப் பார்த்தேன். என் நண்பன் சொன்ன சம்பவங்கள் சில என் கற்பனையின் அதிக இடத்தைப் பிடித்திருந்ததை உணர்ந்து கொண்டேன். என்னை நான் நினைத்துச் சிரித்துக் கொண்டேன். காரணம் எனக்கு வேண்டிய சிறுகதை படைத்து முடிந்து விட்டதே என்பதால். இதுவே என் முதல் சிறுகதையோவியம் பிறந்த வரலாறு.

**வேல் தைலம்**
**மிகச் சிறந்த சஞ்சீவி**

ஜலதோஷம், தலைவலி, ஒருதலைக்குத்து, கை கால் உளைச்சல், முதுகு வலி, விஷக் கடி, தேள்கடி, ஜன்னி, வாய்வுப் பிடிப்புகள், சுளுக்கு, வீக்கம், இரத்தக் கட்டு, கட்டிகள், புறப்பாடுகள் முதலிய சகல வியாதிகளுக்கும் பாதிக்கப்பட்ட இடங்களில் நன்றாகத் தேய்த்தால் மிக விரைவில் குணமடையும்.

ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய மகா சஞ்சீவி.

**விலை ரூபா 1-50**

தபால் செலவு வேறு

தயாரிப்பாளர்கள்:

**S. P. S. ஜெயம் கம்பெனி,**
மதுரை.

இலங்கையில் சோல் ஏஜன்ட்:

**M. A. R. S. மனுவேல் நாடார் அன் கோ.,**
34, செட்டியார் தெரு,
கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்களின் உரோமாபுரி திருமலை

## குடிசன மதிப்பீடு தரும் புத்தமதத்தினர் எண்ணிக்கை

## கோணமாமலையை வாழவைக்க இந்துக்கள் முன்வருவார்களா?

**'திருமலை இந்துக்களின் உரோமாபுரி' என்று பிற சமயத்தவர் கூறுமளவிற்கு திருமலை முக்கியத்துவம் பெற்று விளங்கியுள்ளது. 1834ம் ஆண்டில் கணக்கிடப்பட்ட குடிசன மதிப்பீட்டின்படி திருமலையில் 250 புத்தமதத்தினரே வாழ்ந்துள்ளார்கள். 1954ம் ஆண்டில் எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீட்டின் வண்ணம் புத்தமதத்தினரின் எண்ணிக்கை 14, 082 ஆக உயர்ந்துள்ளது. இந்த ஆண்டு புத்தமதத்தினரின் எண்ணிக்கை இந்துக்களின் உள்ளத்தில் ஏக்கத்தை உருவாக்கக் கூடியளவிற்குப் பெருகியுள்ளது. இந்த நிலையிலும் ஈழம் வாழ் 20 இலட்சம் சிவநெறிதழுவிய செந்தமிழ் மக்கள் திருமலையின் நிலையை எண்ணிப் பார்க்கிறார்களில்லை.**

பேராயிரம் உடையவன் எம்பெருமான். அப்பெருமான் கொலுவீற்றிருக்கும் கோணமலைக்கும் பல பெயர்கள் உண்டு. திரிகோணமலை, திருக்குன்றமலை, திருக்கோணமலை, திருக்கோணதமலை, திருக்கொணமலை, கோணமலை, கோணமலை, கோணமாமலை, மச்சேந்திர பர்வதம், மச்சேஸ்வரம், தெக்கணகைலாசம், தென்கைலாசம், திருமலை ஆகிய பெயர்கள் அவற்றுள் சில. இப்பெயர்கள் அனைத்தையும் துருவி ஆராயும் போது அவை அனைத்தும் செந்தமிழ் சிவநெறி தொடர்புள்ளனவாகவே இருப்பதை உணரலாம். வேறு சொற்களில் விளம்பின் ஈழத்தின் பெரும்பான்மை இனத்தவர் தம் இன அடிப்படையிலேயோ, தம் மொழி அடிப்படையிலேயோ, தம் மத அடிப்படையிலேயோ இத் திருமலை தமக்கு உரியதென்று உரிமை பாராட்டுதற்கு அருகதையற்றவர்கள் என்பதை ஆணித்தரமாக எடுத்துக் காட்டுகிறது.

வடக்கினை, கிழக்கினை இணைத்து வரலாற்றுப் பெருமையோடு சமய முதன்மையும் பெற்று விளங்கும் இத் திருமலை உலகிலுள்ள மிகச் சிறந்த இயற்கைத் துறைமுகங்களில் ஒன்றையும் தன்னுள் அடக்கித் திகழ்கிறது. திருமலையைச் சுற்றியுள்ள கடல் வளத்தினை 'குரைகடல் ஓதம் நித்திலம் கொழிக்கும் கோணமாமலையென' தமிழ் ஞானசம்பந்தர் தகைசான்ற முறையில் கூறிப் போந்தார். இங்குதான் எமக்கு அருளினை அள்ளி வழங்கும் அருள்நேசனாகிய கோணேசனும் கொலுவீற்றிருக்கிறான். ஆழி சூழ் ஈழத்தின் வடகீழ் கரையிலுள்ள திருகோணமலை தமிழர்கள் குடியேறிய முதன்மையான இடங்களில் ஒன்றாகும். இதையொட்டிய பிரிவை பிரித்தானிய கலைக் களஞ்சிய (Encyclopaedia Brittania) தொகுதி 22ல் பக்கம் 477ல் கண்டு பயன் பெறுக.

### நெருங்கி வாழ்ந்த தமிழ்க் குடிகள்

ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் 'குடிதனை நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றும் கோணமலை' என்று கூறிய கூற்று தமிழ்க் குடிகள் அன்று மிகப் பலர் வாழ்ந்தனர் என்ற உண்மையை உணர்த்திநிற்கிறது. இன்று, அன்று நெருக்கமாய் வாழ்ந்த தமிழ்க்குடி வேற்று இனத்தவரால் நெருக்கப்பட்டு அல்லல் உறும் நிலையினைக் காண்கிறோம்.

### ஈழத்தில் முதல் நிலவிய சமயம் சைவம்

ஈழத்தில் குறிப்பாகத் திருகோணமலையில் சிவநெறி தழுவி நின்ற செந்தமிழ் மக்கள் வாழ்ந்தனர் என்ற உண்மையை வணக்கத்திற்குரிய வல்போல இராகுல என்பவர் எழுதிய 'இலங்கையில் பௌத்த வரலாறு' (பக்கம் 44) என்னும் நூலின் வாயிலாக அறியலாம். கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் சிங்களவரின் முன்னோர் என்று கருதப்படும் விசயன் வருவதற்கு முன்பே இங்கு சைவம் தழைத் தோங்கியிருந்ததென்பதற்குரிய சான்றுகளை அந்நூல் தருகிறது.

### திருமலை-இந்துக்களின் உரோமாபுரி

இனி கத்தோலிக்க மத பீடத்தில் முதன்மை பெற்றவர்களுள் ஒருவராகிய தூய (பரிசுத்த) பிரான்சிஸ் சவேரியார் தரும் கருத்து இதோ.

**ஈழவேந்தன்**

திருகோணமலையை நேரில் பார்வையிட்ட இவர் 'கீழைத்தேய மிலேச்சர்களின் உரோமாபுரி' (The Rome of the heathens of the East) என திருக்கோணமலையைக் குறித்துள்ளார். இதன் விரிவு 'இலங்கையில் கத்தோலிக்க மதம் வளர்ந்த வரலாறு' (History of the Catholic Church in Ceylon Vol. 1 by Father Ganapragasam) என்ற நூலில் இருந்து அறிய முடிகிறது. இதில் எம்மை அவர்கள் 'மிலேச்சர்' என்று அழைத்திருப்பினும் உலகின் பல பாகங்களில் இருந்து வந்த இந்துக்கள் திருகோணமலையில் எழுந்தருளியிருக்கும் கோணேசரை வழிபட்டனர் என்ற பேருண்மையை எடுத்துக் கூறியதற்கு நன்றி காட்டுவோமாக. கத்தோலிக்கருக்கு உரோம் எப்படியோ அப்படியே இந்துக்களுக்கு திருகோணமலை என்று மொழிந்த மொழி மிக மிக முக்கியத்துவம் வாய்ந்தது.

### வரலாற்று உணர்ச்சி உரிமைக்கு வித்து

இவ்விதம் விரிவாகத் திருமலையின் வரலாற்றை யாம் ஆராய்ந்ததற்குக் காரணம் தமிழர்கள் தம் உரிமைக்காகப் போராடுகின்றபோது தமது வளமிக்க வரலாற்றை அறிந்திருக்க வேண்டும். வரலாற்று உணர்ச்சியுமற்று உரிமை வேட்கையுமின்றி 'ஏனோதானோ' என்று வாழ்வதினால்தான் இன்று சிவநெறி தழுவிநிற்கும்செந்தமிழர் இந்தச் சீர் அழிந்த நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

### குடிசனமதிப்பு இடித்துரைக்கும் ஆபத்து

வந்தோரை வாழவைக்கும் பண்பு வண்டமிழரோடு கூடப்பிறந்த பண்பு. இது வரவேற்கத் தக்க பண்பும் கூட. ஆனால் எதற்கும் ஓர் எல்லை உண்டு-ஓர் வரம்பு உண்டு என்றபடி வந்தவர்கள் வாழ்வினில் உயர்ந்த பின் எம் வாழ்வினை ஒழிக்கும் அளவிற்கு இடம் கொடுத்தல் மடமை. தன் கூடாரத்தில் தங்குவதற்கு ஒட்டகத்திற்கு இடம் கொடுத்த அரேபியனின் கதை எல்லைமீறிய எம் பரந்த நோக்கிற்கு எச்சரிக்கையாக அமையட்டும். திருமலை குடிமக்கள் மதிப்பைக் காலக் கண்கொண்டு பார்க்கும் போது 1834ம் ஆண்டு 250 யென மிகச்சிறிய எண்ணிக்கையுள்ள புத்தமதத்தவர் 1953ல் 14,082 ஆக பெருகியுள்ளனர். இன்று 1964ல் அவர்களின் எண்ணிக்கையை எண்ண எம் உள்ளத்தில் ஏக்கம் ஏற்படுகிறது. 1834ல் இந்துக்களின் எண்ணிக்கை 14,182, 1953ல் எம் எண்ணிக்கை 32,362 ஆகத்தான் பெருகியுள்ளது. விகிதாசாரப்படி எமது பெருக்கம் போதாது. ஆனால் 1964ல் எமது எண்ணிக்கையின் வளர்ச்சி தடைப்பட புத்தமதத்தினரின் எண்ணிக்கை மிகப் பெருகியுள்ளது. இந் நிலைக்கு காரணம் இரண்டு. ஒன்று எம் மரபுவழித் தாயகத்தைப் பறிக்கும் அரசாங்கத்தின் சதித்திட்டம். மற்றையது எமது தாயகத்தை பாதுகாக்கவேண்டும் என்ற உணர்ச்சி அற்ற நிலை எம்மிடை நிலவுவது.

இவ் விபரங்கள் அனைத்தையும் அறிந்த பின்பும் யாம் பொறுத்திருப்பின் யாம் அழிவது உறுதி. எம்முடைய அடிப்படை உரிமைக்காக யாம் போரிடும் போது எம்மை வகுப்புவாதிகள்—சமய வெறியர்கள் என்று சிலர் தூற்றக்கூடும். ஆனால் எம்மைப் பொறுத்தவரை எம்மை யாமே பாதுகாப்பது வகுப்புவாதம், சமய வெறியென்றால் அந்த வகுப்புவாதமும் சமயவெறியும் வாழட்டும் என்றும் வாழ்த்துவோமாக.

### புத்தமும் சைவமும் ஒன்று?

எம் இனத்தை, எம் மதத்தை அழிக்கும் சதித்திட்டங்களை உருவாக்கும் ஈழத்தின் பெரும்பான்மைஇனம் கையாளும் மற்றைய சதித்திட்டம் புத்தமதமும் சைவமதமும் ஒன்று என்று கூறி எம் மதச் சின்னங்களோடு தம் மதச் சின்னங்களை இணைக்க முயல்வதே. இந்த மாயவலையில் யாம் சிக்க மறுக்கிறோம். யாம் தழுவிநிற்கும் சிவநெறி ஒரு மதம், ஆனால் புத்தம் ஒரு முழு மதமல்ல. அது ஒரு மெய்விளக்கம் (தத்துவம்)-ஒரு கோட்பாடு என்பதை யாம் உணரவேண்டும்.

எமது மதம் எம் [illegible] (ஆன்மா) இறைவனுக்கும் உள்ள [illegible] வலியுறுத்தும்போது, ஆண்டவன் இல்லையென்று கூறுகிறது புத்த கோட்பாடு இந்த அடிப்படை தத்துவத்திலேயே யாம் மாறுபடும் போது எப்படி புத்தமும் சைவமும் ஒன்றாக இருக்க முடியும்? எம் மணிவாசகப் பெருந்தகை 'புத்தம் முதலாய புல்அறிவுப் பல்சமயம்' என்று புத்த நெறியை வன்மையாக ஒறுத்ததின் உட்பொருள் என்ன? சைவமும் புத்தமும் அடிப்படை நோக்கில் மாறுபட்டவை என்பதை இடித்துரைக்கவில்லையா?

ஆதலால் புத்தமும் சைவமும் ஒன்று என்று பசப்புவார்த்தை கூறி எம்மை மயக்கி எம் உரிமைக்கு உலைவைக்க வருவோரையிட்டு யாம் மிக மிக விழிப்போடு இருக்கவேண்டும். யாம் மீண்டும் கூறுகிறோம் எம்மிடம் மதவெறியில்லை. ஆனால் யாரும் மதம்பிடித்து எம் மதத்தைஅழிக்கசூழ்ச்சி செய்யின் யாமும் சும்மாவிருக்கப்போவதில்லை.



கட்டுரையாசிரியர்

அனுராதபுரமும் கலனியாவும் எப்படி புத்தமதத்தினருக்கு புனித நகரங்களாக விளங்குகின்றனவோ அதுபோல திருகோணமலை குறிப்பாக கோணேசர் கோட்டை எம்மதத்தவருக்குப் புனித நகராக விளங்குகிறது. அப் புனிதத் தன்மையை கெடுக்கும் முறையில்—எம் மதத்தில் மாசினை ஏற்றும் முறையில் கோணேசர் கோட்டைக்குள் புத்தமத சின்னங்களையும் புத்தமத பாடசாலையையும் நிறுவி எம்மோடுபோர்தொடுக்க சிலர் முயல்வதாக செய்திகள் கிடைத்துள்ளன.

### தமிழன் செய்யும் தவறு

புத்த சிங்கள ஆதிக்கம் எம் இனத்தின்—எம் மதத்தின் அழிவிற்கு வழிகோலுவதால் யாம் இவ் வாதிக்கத்தை ஆணிவேரோடு அகற்றவேண்டும் என்பது முடிந்த முடிபுவெனினும் ஏறக்குறைய 20 இலட்சம் சிவநெறி தழுவிநிற்கும் செந்தமிழ் மக்கள் ஈழத்தில் வாழ்ந்தும் வரலாற்று பெருமைமிக்கஅருள் ஞான சம்பந்தரும் அருணகிரிநாதரும் ஏனைய சிவநெறிச்செம்மல்களும் உள்ளம் உருகி வழிபட்ட இக்கோயிலை எத்தனைபேர் சென்று வழிபடுகிறோம்? திருமலைக்குச் செல்ல எத்தனையோ போக்கு-வரவு வசதிகள் இருந்தும் வழிபடச் செல்லும் எம் மதத்தவரின் எண்ணிக்கை மிகக் குறைவே. கதிர்காமத்திற்கும், திருக்கேதிசுவரத்திற்கும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்கும் பல்லாயிரக்கணக்கில் செல்லும் நாம் ஏன் கோணேசரின் அருள்பெற விழைகிறோமில்லை.

'தாயினும் நல்ல தலைவன் எம் வாயினும் மனத்தும் மருவி நின்று அகலா மாண்பினன்' என்று எம் தமிழ் ஞானசம்பந்தன் பத்திச் சுவை நனி சொட்ட கோணேசன் புகழ் பாடினாரே; இப்பாடல் பாடியவர் உமையின் முலைப்பால் அருந்திய ஞானசம்பந்தர் என்பதை யாம் மறக்க முடியுமா? குரைகடல் ஓதம் நித்திலம் கொழிக்கும் கோணமலை அமர்ந்தவர் எம் குறைகள் தீர்ப்பது உறுதி.

கோணேசர் கோயிலின் குடமுழுக்கிற்கு (கும்பா அபிடேகத்திற்கு) முன் எம்மவர் போகாதிருந்திருப்பின் ஏதும் பொருள் இருக்கலாம், ஆனால் சென்ற ஆண்டு 3-4-63ல் மிகச் சிறப்பாக கோணேசர் கோயில் குடமுழுக்கு நடந்த பின்பும் யாம் அங்கு சென்று வழிபடத் தவறின் யாம் செந்தமிழ் பேசி சிவநெறி தழுவி நிற்பதில் யாது பயனும்

(13-ம் பக்கம் பார்க்க)

BLACK FLAG

பக் கில்லர்

மந்திர சக்தி போன்று

மூட்டைகளை

கொன்று விடுகிறது.




கரப்பொத்தான்கள், சிலந்திப் பூச்சிகள், எறும்புகள், படுக்கை மூட்டைப் பூச்சிகள், மற்றும் ஊரும் பூச்சிகளிலிருந்தும் பாதுகாக்க இதோ உத்தரவாதத்துடன் கூடிய மருந்து. பக் கில்லர். இதில் மலாத்தியான், டில்ட்ரன், பிரித்ரின்ஸ் ஆகியன அடங்கியுள்ளன.

ஸ்ப்ரே இணைப்புடன் கூடிய கைக்குகந்த போத்தலாக கிடைக்கும்.

இன்றே உங்கள் வியாபாரியிடம் ஒரு போத்தல் வாங்குங்கள்.

ஏக விநியோகஸ்தர்கள்:
லூயிஸ் பிரவுண் அன் கம்பெனி லிமிட்டெட்,
மக்கலம் ரோடு, கொழும்பு. BKI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர். ஆர். பிக்சர்ஸ்

# பணக்கார குடும்பம்

தந்தை மகளை அறிவார். மகளுக்கும் தந்தையைத் தெரியும். ஆனல் உலகத்தின் கண்களுக்கு இவர்களுடைய உறவு மறைபொருளாகவிருக்கிறது. இவர்களின் உறவு முறை தெரிந்தால் தந்தைக்கு ஆபத்துக் காத்திருக்கிறது. இந்த ஆபத்தை விளைவிக்கக் கூடியவர்கள்—அவருடைய இரண்டாவது மனைவியும் மைத்துனனும்.

ராணி தந்தையை அறிந்தும் பலர் முன்னிலையில் அப்பா என்று அவரை அழைக்க அருகதையற்றவளாக-காரணமே தெரியாதவளாக வாடுகிறுள். அவள் காதலனுன நல்லதம்பி இந்தக் குடும்பத்தில் பீடித்திருந்த கொடுமையைஉடைத்தெறிகிருன். அவன் பாவித்த ஆயுதங்கள் ஒருசிறு குத்துவிளக்கு, ஒரு மெழுகுதிரி, ஒரு தீப்பெட்டி. இம்மூன்று ஆயுதங்களும் ராணியின் வாழ்க்கையில் மறுமலர்ச்சியையும், அவள் தந்தையின் துயர் மறைந்தொழிவதையும் கொடுப்பதோடல்லாமல் பணக்காரக் குடும்பத்தின் ஒற்றுமையையும் சிருஷ்டித்து விடுகின்றன.

புரட்சி நடிகர், நல்லதம்பியாக 'பணக்காரக் குடும்ப'த்தில் தோன்றுகிருர். நல்ல பண்புகளுக்கு இலக்கணமாகவே எம். ஜி. ஆரைக் கதாசிரியர்களும், தயாரிப்பாளர்களும் ஆக்குவது தமிழகத்துத் திரைப்படத்துறையின் மிக முக்கியமான அம்சம். இப்படத்திலும் நீதியை நிலைநாட்ட எத்தனையோ பேரின் எலும்புகளை முறிக்கிருர். இறுதியில், ஒடிக்கொண்டிருக்கும் ஜீப் வண்டியை மோட்டார் சைக்கிளில் ஓடிச் சென்று துரத்தி மனேகரையும் முடிவுக்கட்டுகிருர்.

ராணியாக வருபவர் சரோஜாதேவி. அவருடைய தந்தை அசோகன்.

நாகேஷ் பல படங்களில் பல வேடங்களைப் புனைந்து வெற்றியீட்டினர். இப்படத்தில் பரசுராமனுக, அவருடைய மகன் பலராமனுக, அவருடைய மகன் ராமனுக, இறுதில் அவனுடைய குழந்தை ராமராமனுகவும் தோன்றி, மொத்தத்தில் நான்கு நாகேஷ்களாக அவதாரமெடுத்துச் சிரிக்கவைக்கிருர். ஒரே படத்தில் பல வேடம் அவருக்கு.

'இதுவரைநீங்கள் பார்த்த பார்வை' என்ற கவிஞர் கண்ணதாசன் பாடலை இயக்குநர் ராமண்ணு, எம். ஜி ஆர்.-சரோஜாதேவி மூலம் நன்கு பயன்படுத்தியிருக்கிருர். மழைக்கு ஒதுங்க இடம் கிடைக்காத காதலர்களுக்கு மாட்டு வண்டிதான் தஞ்சமாயிருக்கிறது.

இரசிக மகா சனங்களைத் தன்பால் இழுக்கவல்ல குடும்பம் இந்த ஆர். ஆர். பிக்சர்சாரின் 'பணக்காரக் குடும்பம்'.

—நாதன்

நடக்கவிருப்பவை

## விவேகானந்தசபை தமிழிசை விழா

ஒடோபர் மாதம் 17, 18-ம் திகதிகளில் கொழும்பு விவேகானந்த சபையின் தமிழிசை விழா நடைபெற விருக்கிறது. திருமதி சிவகுமாரன், திரு. சிலநாதன், திரு. வ. க. நடராசன், செல்வி கௌரீஸ்வரி கனகரத்தினம், திரு. இராமசாமி ஐயர் ஆகியோரின் இன்னிசைக் கச்சேரிகளுடன், நாதஸ்வரக் கச்சேரி, பரத நாட்டியம், ஜலதரங்கம், வீணை ஆகியவையும் நடைபெறும் என்று தெரிகிறது.



நீ எழிமரசியாகவிருக்கலாம் ஆனல் என்னை நீ எதுவுமே செய்துவிட முடியாது என்று ஏறுப்பார்வை பார்க்கும் சிவாஜியையும்........
.....................




# 'அம்மா எங்கே?'

'அம்மா எங்கே' என்று அழுகையுடன் கேட்கும் குழந்தைக்குப் பதிலுரைக்க முடியாமல் அந்த இளைஞன் தவிக்கிருன். அவனுடைய வேதனை அக் குழநதைக்கு எங்கே தெரியப் போகிறது? அது விடாமல் கேட்டுக் கேட்டு அவனைத் துன்பத்துக்குள்ளாக்குகிறது.

அடக்க முடியாத துன்பம் ஆத்திரமாக மாறியதனுல் அவனுடைய மனைவியின் படத்தை எடுத்துத் தரையில் அடிக்கிருன். தரையில் விழுந்த படத்தைக் கண்டு குழந்தையின் அழுகை மறைகிறது. தன் தாயின் உருவத்தைத் தரையில் கிடந்த படத்தில் கண்ட குழந்தை வாஞ்சையுடன் ஓடிப்போய் 'அமமா, அம்மா' என்று அணைக்கிறது.

கேள்வியையே பதிலாக மாற்றி அமைக்கும் முறையில் மொடர்ண் தியேட்டர் சார் 'அம்மா எங்கே' படத்தைத் தயாரிக்கிருர்கள்.



குழந்தையாக பேபி ஷகிலாவும், அப்பாவாக முத்துராமனும் தோன்றுகின்றனர். கதை வசனத்தை சிகம்பட்டி ராஜகோபாலன் எழுத ஜி. விஸ்வநாதன் நடடுவாங்கம் செய்கிருர். தீபாவளிக்கு 'அம்மா எங்கே?' என்ற கேள்விக்குப் பதில் கிடைக்கும் என்று கூறப்படுகிறது.



........வீராதி வீரராளுலும் என் வேல் விழி வீச்சுக்கு முன் நிற்க முடியுமா? என்று கேட்கும் சாவித்திரியையும் பத்மினி பிக்சர்சாரின் 'கர்ணன்' வர்ணப்படத்தில் விரைவில் காணுவீர்கள்.

## பாலும் தேனும்

இராசா தோட்டம் ப. க. பாரதி மன்றத்தாரின் 3வது நாடகமான 'பாலும்தேனும்' விரைவில் அரங்கேற்றப்படும். இதன், கதை, வசனம், டைரக்ஷன், நிர்வாகம் ஆகிய பொறுப்புக்களுடன்' முக்கிய பாகத்திலும் என். கருப்பையா, நடிக்கிருர். மற்றும், சின்னையா, பொன்னையா, பஞ்சரட்னம், லெச்மன், கந்தையா, ராமையா ஆகியோரும் நடிக்கிருர்கள்,

நடந்தவை

## சம்பந்த முதலியார் மறைவு

'19-ம் நூற்றுண்டில் மங்கி மறைந்து கொண்டிருந்த நாடகக் கலைக்குத் தன் தொண்டால் புத்துயிர் ஊட்டி பெருமையைத் தேடித் தந்தவர் பத்ம பூஷணன் பம்மல் சம்பந்த முதலியார் அவர்கள். அன்னுரது மறைவினுல் நாடக உலகின் ஒரு சகாப்தம் முடிந்து விட்டது எனக் கூறலாம். அன்னுரது பிரிவினுல் வாடும் கலைஞர்களோடு இலங்கை எம். ஜி. ஆர். மன்றமும் பங்கு கொண்டு தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.'

ஃ

நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்த முதலியார் மறைவு குறித்து, 27-9-64 ஞாயிறு மாலை மட்டக்களப்பில் கூடிய மாஸ்டர் சிவலிங்கம் வில்லுப் பாட்டு குழுவினர் மேற்காணும் அனுதாபத் தீர்மானத்தை நிறைவேற்றினர்.

# எமது விமர்சனம்

ஸ்ரீதரமி ஸாமக

## வாழ்க்கை வாழ்வதற்கே

பொறாமைத் தீ எரிய ஆரம்பித்தால் பெருகி வாழும்குடும்பம்பாழாகிவிடுகிறது. இப் பொறாமையின் காரணமாகத்தான் கந்தனின் தாய் சந்தேகச் சூறுவளியில் சிக்கிச் சின்னுபின்னமாகினுள். கொண்ட கணவனையே பிரிந்து துடித்த அவள் தன் மைந்தனை அவனுடைய முறைப் பெண்ணுக்குரிய மணுளனுக்கிவிடத் துடித்தாள். பாலிய மணம் கூடாது என்று கருதியோ என்னவோ கந்தனையும் வள்ளியையும் 'பச்சை மாற்று' முறையில் இணைத்து விட்டாள்.

ஆற்றேரம் வீடு கட்டி விளையாடிய பருவத்தில் இரு சிறுவர்களின் கைகளிலும் குத்தப்பட்ட பச்சை, இரு உள்ளங்களிலும் பாசத் தீயை மூட்டி விட்டது. காலம் பிரித்தது. பருவக் கனவுகள் வட்டமிடும் பருவத்தில் பாதை வேறு திரும்பியது.

இடையிடையே இன்னல்கள் தோன்றவே செய்தன. அழகுப் போட்டி, இலங்கையில் குதிரைச் சவாரி முதலிய திருப்பங்கள் எல்லாம்



கதைக்குப் புதுப்புது இரசனைகளை ஊட்டின. இவற்றுக்குத் துணையாக அசோகன், தங்கவேல் 'ஒரிஜினல்', தங்கவேல் டுப்ளிகேட' (தங்கவேல் இருபாகங்களில் நடிக்கிருர்) முதலியோரும் தோன்றுகிருர்கள். தங்கவேலை அனேக நாட்களுக்குப் பின்னர் இப்படத்தில் பார்க்க முடிகிறது. தரங் குறையாமல் தமது வேலையைச் செய்கிருர். முத்தையா, ராஜம்மா, சுந்தரிபாய், சகுந்தலா முதலியோரும் நடிக்கின்றனர்.

கந்தனுக நடிப்பவர் ஜெமினி கணேசன் என்ருல் வள்ளி சரோஜாதேவிதான் என்பதைக் கூறுமலே தெரிந்து கொள்ளுவீர்கள். இன்னும் ஒரு வருடத்திற்குள் மேல் நாடடுப் படங்களின் தரத்துக்கு(?) தமிழ் படம் முன்னேறி விடுமோ, என்று சரோஜா தேவி—ஜெமினி நெருக்கம் நம்மை அச்சுறுத்துகிறது.

இருவரையும் [illegible] நாட்டு வாங்கத்தில் வளர்ந்த கமால் பிரதர்ஸின் படம். முரசொலிமாறனின் வசனங்களால் சிறப்புற்றிருக்கிறது.

கவிஞரின் பாடல்கள் இசை இரட்டையரின் இன்னிசை அத்தனையும் நன்ருகவே உள்ளன. —நாதன்.



என்டர்டெயின்மென்ட்ஸ் திரைகளுக்கு எழுந்தருளும் 'புரொபெசர்' வர்ண ஹிந்திச் சித்திரத்தில் ஷம்மி கபூரும் கல்பனுவும் இப்படித் தோன்றுகிருர்கள்.

## பட விழாவில் 'பூம்புகார்'

1965ம் ஆண்டு ஜனவரி 8ம் திகதி முதல் 23ம் திகதி வரை புதுடில்லியில் சர்வதேச திரைப்படவிழா நடைபெறுகிறது இத்திரைப்பட விழாவில் மொத்தம் 40நாடுகள் பங்குகொள்ளுகின்றன.

இவ்விழாவில் கலந்து கொள்ளும் தமிழ் படத்தைத் தெரிவு செய்யுமுகமாகக் கூடிய தென்னிந்திய திரைப்படத் தயாரிப்பாளர் சங்கம்மேகலா பிச்சர்சாரின் 'பூம்புகார்' படத்தைத் தெரிவு செய்துள்ளனர்.

## அடுத்த இதழில் புதிய பல மாற்றங்களை எதிர்பாருங்கள்

## நடந்தவை நடக்கவிருப்பவை

கலைப்பூஞ்சோலை,
த. பெ இல. 1183
கொழும்பு-12.

நடந்த கலை நிகழ்ச்சிகள், நடைபெறவிருக்கும் கலை நிகழ்ச்சிகள் சம்பந்தமாக செய்திகள் அனுப்புவோர் கீழ் காணப்படும் பகுதியை கடித உறையில் ஒட்டி அனுப்பவும்

## நாடகத் தந்தை மறைந்தார்

நாடகக்கலை குறிப்பிட்ட ஒரு வகுப்பாருக்கு மட்டுமே சொந்தமானது என்றும் 'கூத்து ஆற்ருதவன் செயல்' என்று பழிப்புக்கிடமாகவிருந்த காலத்திலும், முத்தமிழில் சிறப்பான நாடகக் கலைக்கு, தமிழ் கூறும் நல்லுலகம் நல்மதிப்புக்கொடுக்க வகை செய்தவரான நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்தமுதலியார் தமது 92-வது வயதில் காலமானர் முதலியார் இதுவரை 109 தமிழ் நூல்களை எழுதியிருக்கிருர். இவற்றில் 64 தலை சிறந்த நாடகங்களாகும்.

தமிழ் நாடகக்கலையின் மறுமலர்ச்சி கர்த்தாவான பம்மல் சம்பந்தமுதலியார் அவர்களின் இறுதி யாத்திரையின் போது திரைப்படத் துறைக் கலைஞர்களும் பெருவாரியாகப் பங்குகொண்டனர்.

பி. ஏ., பி. எல். பட்டதாரியான முதலியார், நாடகத் துறையோடு மட்டும்தில்லாது ஏராளமான பொதுச் சேவையிலும் ஈடுபட்டுழைத்து வந்தார். அவருடைய 'மனேகரா' நாடகம் மேடையில் பெருஞ் சிறப்படைந்ததுமல்லாமலும் திரைப்பட மாக்கப்பட்டும் மிகவாகப் பாராட்டப்பட்டது.

முதலியாரின் மறைவு தமிழ் கூறும் நல்லுலகத்துக்குப் பெரியதொரு நட்டமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவலை வேண்டாம்..

[ஆனந்தன்]

ஏதையாவது எண்ணிக் கவலைப்படாத மனிதர்களே கிடையாது. சிந்திக்கும் திறன்படைத்த எல்லா சீவன்களுக்கும் கவலைப் பட வேண்டிய ஏதாவது ஒரு காரியம் இருக்கவே செய்யும். மிருகங்களோ பறவைகளோ கவலை கொள்ளுவதாக ஆராய்ச்சிகள் முடிவு கட்டவில்லை. ஒரு மனிதனின் ஏழாவது பராயத்தில் கவலைகளின் சின்னம் படர ஆரம்பிக்கிறது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

சிந்தனைக்கே ஆணிவேர் கவலை என்று கூறலாம். சிறந்த ஆராய்ச்சிகள் தோன்றுவதற்கும் கவலையே காரணம் என்று கூறினாலும் பொருந்தும்.

கவலை வகையறுக்களில் பலதரப்பட்ட பிரிவுகள் இருக்கின்றன. பெரும்பான்மையான கவலைகள் தன்னைப் பற்றியும் தனது சுற்றம் சூழலைப் பற்றியுமே உருவாகுவது கண்கூடு. இத்தகைய 'தன்மைக் கவலைகள்' கோர உருவமெடுத்தால், விபரிக்க முடியாத வேதனைகளை விளைவித்துவிடும்.

பிள்ளைப் பராயத்தைத் தாண்டியதும் தனது வருங்கால வாழ்வு எப்படி அமையவேண்டும் என்பதன் அடிப்படையில் ஒரு மனிதனின் கவலை வித்திடுகிறது. வாலிபப் பருவத்தை எட்டிப் பிடிக்குமுன்னரே ஒருவன் சிறிதளவில் 'பால் கவர்ச்சி' வசப்படுகிறான். பெண் குழந்தைகளுக்கும் சுமார் பத்து வயதானதுமே இக் கவர்ச்சி ஏற்பட ஆரம்பித்துவிடுகிறது. இதைத் தொடர்ந்தே கவலையின் பிரதிபலிப்புகள் இலேசாகத் தொடருகின்றன. தனது வாழ்க்கையில் தனக்கு இணையாகச் சேரக் கூடிய துணையினைத் தேடுவதில் கவலை பெருகிறது. இதன் பின்னரே தொழில் தேடுவதிலும் குடும்பம் குறித்தும், வாழ்க்கை வளர்ச்சி, குழந்தைப் பேறு ஆகிய பல துறைக் கவலைகள் சூளுகின்றன.

உடலையும் உளத்தையும் வாட்டும் கவலையை ஒழித்துக்கட்ட எத்தனை யெத்தனையோ மார்க்கங்களை மனிதன் கண்டு பிடித்துள்ளான். குடிப்பழக்கமும் ஏனைய தீய பழக்கங்களும் கவலையின் நிவர்த்திக்கே பெரும்பாலோரால் கடைப்பிடிக்கப்படுகின்றன.

மனிதனின் கவலையை மாற்றுவதற்கு முன்னுளில் வாழ்ந்த பல பெரியார்கள் பற்பல வழிவகைகளை எமக்குத் தேடித் தந்துள்ளனர். விஞ்ஞானம் மலிந்து விண்ணுலக யாத்திரைகளுக்காக மனிதன் ஏவு கணைகளை ஏவும் இக்காலத்தில் பழைமைச் சம்பிரதாயங்களை எவரும் கடைப்பிடிக்கக் கூசுவார்கள் என்பது உண்மையே. இருப்பினும், அறிவின் துணை கொண்டு மன நிலை ஆராய்ச்சிகளின் அடிப்படையில் உங்கள் கவலைகளையும் அதனுல் ஏற்படும் பலதரப் பிரச்சினைகளையும் போக்கடிக்க வல்ல வழிவகைகளைக் கூற முன்வந்துள்ளோம்.

உங்களை வாட்டும் பிரச்சினை ஒன்றையிட்டுச் சுருக்கமசக எழுதி அனுப்புங்கள். அத்துடன் கீழ் கோரப்பட்டுள்ள குறிப்புக்களையும் தரவேண்டும். உங்களை வாட்டும் கவலையைப் போக்கடிக்கும் வழிவகைகளை வாரா வாரம் 'சுதந்திரனி'ல் "கவலை வேண்டாம்" பகுதியில் கூறுவோம்.

உங்களுடைய பெயரைப் பத்திரிகையில் வெளியிட விருப்பமில்லையானுல், உங்கள் புனைபெயரை எழுதலாம். ஆனுல் உண்மையான பெயரும் முகவரியும் எமக்கு அனுப்பி வைக்க வேண்டும். சொந்தக் கையொப்பமும் இடப்படவேண்டும்.

உங்களுடைய கடிதத் தொடர்புகள் யாவும் இரகசியமாகவே வைக்கப்படும்.

தங்கள் பிரச்சினைகளையிட்டு எழுதுபவர்கள் கீழ்க் காணப்படும் கட்டத்தைக் கத்தரித்துக் காகித உறையில் ஒட்டி அனுப்புதல் அவசியம். கட்டம் ஒட்டப்படாத கடிதங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

தர வேண்டிய விபரங்கள்:

வழமையான பெயர்:—
(தமிழிலும் ஆங்கிலத்திலும்)
சொந்தப் பெயர்:—
(தமிழிலும் ஆங்கிலத்திலும்)
பிறந்த திகதி :—
மாதம் :—
ஆண்டு :—
வழமையான கையொப்பம் :—

குறிப்பு: ஆங்கிலம் தெரியாதவர்கள் தமிழில் தெளிவாக எழுதலாம்.

—ஆனந்தன்

இக் கட்டத்தைக் கத்தரித்து காகித உறையில் ஒட்டி அனுப்பவும்.

ஆனந்தன்,
'கவலை வேண்டாம்'
த. பெ. இல. 1183
கொழும்பு-12

## இந்துக்களின்...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

இல்லை. ஆதலால் இனிமேலாவது சைவப் பெருமக்கள் தனித்தனியாகவும் கூட்டம் கூட்டமாகவும் கால்நடையிலும் ஊர்தி வாகனங்களிலும் சென்று கோணேசனை வழிபடுமாறு வேண்டுகின்றேம்.

எமது உரிமைக்காகப் போராடுமுன் எமக்குள்ள உரிமையை இழக்காது இருக்க முதலில் பழகிக்கொள்வோமாக. 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்ற புறநானூற்றுப்புலவர் புகட்டிய உண்மை எமக்கு முற்றும் பொருந்தும்.

இறுதியில் ஈழம் வாழ் சிவநெறி தழுவி நிற்கும் செந்தமிழ் மக்கள் சார்பிலும், இந்து மத நிறுவனங்கள் சார்பிலும் காலம் தாழ்த்தாது அநுராதபுரத்தை, களனியாவைப் புத்த மதத்தினருக்குப் புனித நகர்கள் ஆக்கியதுபோல் கோணேசர் கோட்டையை உடனடியாக இந்துக்களுக்குப் புனித நகராகப் பிரகடனம் செய்யும்படி அரசாங்கத்தைக் கேட்கிறேம். நாட்டிலே சமய ஒற்றுமையை, அமைதியை அரசாங்கம் உண்மையில் நிலைநாட்ட விரும்பின் சைவப் பெரு மக்களின் ஏகோபித்த வேண்டுதலை ஏற்றேயாக வேண்டும். இதைப் புறக்கணிக்கின் அதனுல் வரும் விளைவுகளுக்கும் அரசாங்கமே முழுப்பொறுப்பாளி என்பதையும் [illegible]ரிக்க விரும்புகிறேம்.

## தமிழ் படித்த...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் கற்றூர் கடனுகும். தமிழை முறையாகச் செந்தமிழ் மரபைப் பேணிக் கற்க முன்வருவோர் குறைந்துள்ளனர்.

இச் சங்கம் தனது கொள்கையில் செந்தமிழ் மரபை பேணிப் பாதுகாக்கும் அம்சத்தை முதலாவதாக வைத்துள்ளதை யான் வரவேற்கின்றேன். தமிழ் மரபைப் நாம் பேணிக் காக்கத் தவறின் நம் மொழி தமிழ் மொழியாக இருக்காது; வேறு மொழியாகி விடும் என அஞ்சுகின்றேன்.

இன்றைய அரசியல் போக்கு உலகத் தமிழர்களோடு ஒன்று பட்டு உறவாடமுடியாத வகையில் இருக்கின்றது. நாளை தமிழ் நாட்டில் இருந்து வரும் நூல்களையும் பத்திரிகைகளையும் இங்கு வர அரசாங்கம் அனுமதிக்குமோ என்பதைக் கூற இயலாது. இந்நிலையில் இச் சங்கம் இவற்றை எல்லாம் ஊன்றி நோக்கிச் சிந்தித்துச் செயற்பட முன்வர வேண்டும்.

வியாபார, வர்த்தக நோக்கத்திற்கென ஆரம்பிக்கும் சங்கம் போல் இருக்காது, செந்தமிழ் மொழியைப் பேணிக் காக்கும் சங்கமாக இது திகழவேண்டுமெனக் கூறி வாழ்த்துகின்றேன்.'

பின்வருவோர் பதவியாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:

காப்பாளர்கள்: திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ., பேராசிரியர் கா. பொ. இரத்தினம் எம். ஏ., பண்டிதர் ச. சபாபதி,

தலைவர்: திரு. இ. பாலசுப்பிரமணியம் எம். ஏ., துணைத் தலைவர்கள்: திரு சுயிலாயநாதன் எம். ஏ., புலவர் ந. சிவபாதசுந்தரம், திரு. மு. சிவானந்தம் எம். ஏ., செயலாளர்: திரு. க. மயில்வாகனம், துணைச்செயலாளர்: புலவர் கா. வேல்முருகன் பி. ஓ. எல்., பொருளாளர்: பண்டிதர் அ. ஆறுமுகம்.

—

### உடுப்பிட்டி தமிழ் மன்றம் கட்டுரைப்போட்டி முடிவுகள்

உடுப்பிட்டி தமிழ் மன்றம் நடாத்திய பாரதிதினக் கட்டுரைப் போட்டி முடிவுகள் வருமாறு:

முதல் இடம்: சுந்தரி அருச்சுனு (பருத்தித்துறை), இரண்டாம் இடம்: சி. யோகேஸ்வரி (மூளாய்), மூன்றும் இடம்: க. சீவகாருண்யம் (காவலூர்).

பாராட்டுப் பெறும் கட்டுரையை எழுதியோர்: வே. அரசரத்தினம் (குருக்கள் மடம்); ச. சிவராஜசிங்கம் (தென்புலோலி); சோ. கிருஷ்ணதாசன் (ஊர்காவற்றுறை). பரிசுகள் தபாலில் அனுப்பிவைக்கப்படும்.

—

### மஞ்சள் குங்குமம்

கொழும்பு ஆனந்தா தயாரிப்பாளர்களின் 'மஞ்சள் குங்குமம்' என்னும் நாடகம் புங்குடுதீவு அர்ச். பிரான்சீஸ் சவேரியார் நூல் நிலையக் கட்டிட நிதிக்காக இத் திங்கள் 7-ம் நாள் புதன்கிழமை மாலை யாழ்ப்பாணம் நகர சபை மண்டபத்தில் நடைபெறும்.

புங்குடுதீவு கிராம சபைத் தலைவர் திரு. கே. வி. தம்பித்துரை தலைமை வகிப்பார்.

திருவாளர்கள் எஸ். நவரட்னம், சங்கர், உதயகுமார், நேசையா, சிக்கந்தர் செல்விகள் கிருஷ்ணகுமாரி, சந்திரகலா, மணிமேகலை ஆகியோர் இந் நாடகத்தில் [illegible]களை ஏற்று நடிக்கின்றனர்.



(25) அறிமுகப்படுத்துகிறோம்

## வளரும் இளநடிகை ஜி. எப். சூரியகலா

இலங்கையிலுள்ள கலைஞர்களிடத்தில் ஆர்வம் இருக்கும் அளவுக்குத் திறமை கிடையாது என்றே கொள்ள வேண்டும். திறமையுள்ளவர்கள் என்று கூறக் கூடியவர்கள் வெகுசிலரே உள்ளனர். பெரும்பான்மையாகவுள்ள திறமையற்ற வெறும் போலிகளின் வலையில் இத்திறமை சாலிகள் வீழ்ந்து விடுவதனுல் உண்மையான திறமையும் ஒளி குன்றி விடுகிறது.

இப்படிக் கருத்துக் கூறுபவர் இளம் நடிகையான செல்வி ஜி. எப். சூரியகுமாரி. சிறந்த நடிகையர் வரிசையிலுள்ள செல்வி கிருஷ்ணகுமாரியின் தங்கை இவர்.

கலைஞர் மு. கருணுநிதி எழுதிய 'மணிமகுடம்' நாடகத்திலே முதன் முதலில் செல்வி மீனுகுமாரியால் புகுத்தப்பட்டு இன்று வரை சுமார் 10 நாடகங்களுக்கு மேல் நடித்துள்ளார்.

கொள்ளுப்பிட்டி அர்ச் அந்தோனியார் பாடசாலையில் பயின்று வரும் செல்வி சூரியகுமாரி நகைச்சுவைப் பாத்திரங்களிலும், வில்லியாகவும் தோன்றவே பெரிதும் விரும்புகிறுர். பிரபல பின்னணிப் பாடகரான முகிதீன் பேக்குடன இலங்கை வானெலியில் பாடியும் உள்ளார். திருமதி துரைசிங்கத்திடம் சங்கீதமும் கற்றுக் கொண்டவர். ஓரளவு நடனம் ஆடவும் தெரியும்.

மர்மநாவல் படிப்பதிலும் சமையல் செய்வதிலும் விருப்புக் கொண்ட இவர் கலைஞர்கள் அரசியலில் பிரவேசிப்பது தவறல்ல என்றும் கூறுகிறுர். தமிழகத்து அண்ணுவையும் ஈழத்து அமிர்தலிங்கத்தையும் இவர் தமது பிடித்தமான அரசியற் தலைவர்கள் என்று கூறுகிருர்.

## வயிற்றைக் கட்டி அறிவை.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

சாற்றை வாங்கி ருசிக்கின்றேம் நாம்.

மெரினு பீச்சின் 'கலகல'ப்பில் நேரம்போனதே தெரியவில்லை. ஒரு படியாக இரவு 9 மணி சுமாருக்கு இருப்பிடம் சேருகின்றேம் நாம்.

### புத்தனேரியின் அழைப்பு

நாம் சென்னை வந்திருந்த சமாச்சாரத்தை எப்படியோ மோப்பம் பிடித்து அறிந்திருந்த தமிழக எழுத்தாளரும், டி. கே. ஷண்முகம் குழுவினரின் நாடக—கவிதைப் பகுதி ஆசிரியருமான புத்தனேரி ரா. சுப்பிரமணியம் அவர்கள் நாம் தங்கியிருந்த ஹோட்டலுக்கு டெலிபோன் செய்து, சென்னை 'சிதம்மா எக்டன்ஷ'னில் உள்ள அவர் 'தமிழ்க் குடி'லுக்கு நம்மை வரும்படி அழைக்கின்றுர்.

அன்றுஇரவே அவருடைய இல்லம் சென்று அவருடைய அன்பைப் பெற்றுக்கொண்டு நம் ஜாகை திரும்பினுல், இரண்டு இளைஞர்கள் மொட்ட மொட்ட விழித்துக்கொண்டு நம்மை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கின்றுர்கள்.

### ஆனந்தனும் மானவரும்

அவர்கள் வேறு யாருமல்ல, நம் நாட்டைச் சேர்ந்த கவிஞர் காசி ஆனந்தன் பி. ஏ. அவர்களும், எழுத்தாளர் தாயுமானவருமாகும்.

'சென்னையில் உங்கள் 'புரோகிராம்' என்ன?' என்று தாம் அருமையாக வளர்த்திருந்த இளம் தாடியைத் தடவிக் கொண்டு கேட்டார் கவிஞர் ஆனந்தன்.

'நாளையே நாங்கள் சென்னையிலிருந்து கிளம்புகின்றேம்!' என்கின்றேம் நாம்.

'அதற்குள் சென்னை புளித்துவிட்டதா?' என்று கேட்டார் மானவர் (தாயுமானவரை 'கட்' பண்ணி 'மானவர்' என்று சுருக்கி அழைக்கின்றுர்கள் இங்கு இவரது நண்பர்கள்!) தம் வழுக்கல் தலையைத் தடவிக் கொண்டு.

மானவருடைய 'வழுக்கை' பற்றிக் கவிஞர் ஆனந்தன் ஒரு தமாஷ் கூடச் சொன்னுர். தாங்கள் குடியிருக்கும் 'சாமா லாட்'ஜில் முகம் பார்ப்பதற்கென்று கண்ணுடி எதுவுமே கிடையாதாம். திருவாளர் தாயுமானவரின் தலையே கண்ணுடியின் தொண்டைச் செய்து வருகின்றதாம்!

### சென்னை புளித்துவிட்டதா?

'சென்னை புளிக்கவுமில்லை, கசக்கவுமில்லை. ஆர அமர இருந்து சென்னையை ரசிக்க வேண்டுமாதலால், நாளைக் காலையில் நாங்கள் திருக்கழுங்குன்றம், மாமல்லபுரம், காஞ்சிபுரம் ஆகிய 'புரங்க'ளுக்குச் சென்றுவிட்டு நாளை மறுதினம் இந்தப் 'புரத்தில்' அதாவது சென்னையில் வந்து குதிக்கின்றேம்' என்கின்றேம் நாம்.

'ஆகா! நல்ல ஏற்பாடு. இந்த இரண்டு நாள் இடைவெளியில் நாங்களாகவே ஓர் அழகான 'புரோகிரா'மை 'ட்ராப்' பண்ணி வைத்துக் கொள்ளுகின்றேம் சென்று வருகுவீர்!' என்று விடை பகர்ந்தனர் ஆனந்தனும், மானவரும்.

அடுத்த நாட்காலை திருக்கழுங்குன்றம், மாமல்லபுரம் நோக்கிப் பயணமானேம் நாம்.........

வளரும்

## நண்பனை...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

என்ற தலைப்பில் நகைச்சுவையாக ஒரு கட்டுரை எழுதி முடித்தேன். அடுத்த நாள்...

நண்பர் ஆனந்தன் படித்துப் பாராட்டி உடனடியாகச் சுதந்திரனுக்கு அனுப்பும்படியும் வேண்டினுர். புலவர் மணி அவர்கள் எனக்குச் சூடிய 'நகைச்சுவைக் குமரன்' என்ற பெயரிலே அடுத்த வாரமே 'டுப்ளிக்கேட்' சுதந்திரன் பிரசுரமானுன். எனது முதலாவது கட்டுரையைப் பிரசுரித்த 'சுதந்திரனை'யும், ஆர்வமூட்டிய நண்பர் கவிஞர் காசி. ஆனந்தனையும் நான் என்றுமே மறப்பதற்கில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்திஜியும் கல்லூரி நண்பரும்

—மட்டுநகர் முத்தழகு—

இன்று உலக உத்தமராக மதிக்கப்படும் காந்திஜி அவர்களது கல்லூரி வாழ்க்கையிலே ஏற்பட்ட சிறு சிறு தவறுகளுக்குக் காரணகர்த்தாக்களாக இருந்தவர்கள் அவரது கல்லூரி நண்பர்களே.

"அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்" என்பதுபோல், புலாலை உண்ணுத காந்திஜியைப் புலால் உண்ணத் தூண்டியவர்கள் அவருடைய கல்லூரி நண்பர்களே. மாமிசத்தினுல் செய்த பலகாரத்தை அதிகமாகச் சாப்பிட்டதனுல், இரவுச் சாப்பாட்டைச் சாப்பிட முடியாமல் தாயிடம் வயிற்று வலியெனப் பொய் சொல்ல வைத்தவர்கள் அவரது கல்லூரி நண்பர்களே.

புகை பிடிப்பதையே கெட்ட பழக்கமென வெறுத்து ஒதுக்கிய குடும்பத்தில் உள்ள காந்திஜியை புகை பிடிக்கப் பழக்கியவர்கள், அவரது கல்லூரி நண்பர்களே.

களவு என்றுல் என்னவெனத் தெரியாத காந்திஜியை, அவரது வேலைக்காரருடைய பணத்தையே திருடச் செய்தவர்கள் அவரது கல்லூரி நண்பர்களே. உலகத் தலைவர்களில் உயர்வாக விளங்கிய காந்திஜியை ஒரு காலத்தில் தற்கொலை செய்யத் தூண்டியவர்கள், அவருடைய கல்லூரி நண்பர்களே.

இத்தனையும் செய்தபின், தமது அறிவுக் கண்ணைத் திறந்து கொண்ட காந்திஜி தான் செய்து கொண்ட பாவச் செயல்களுக்காக மனம் வருந்தித் தனது தந்தையிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதனுற்தான், இன்று உலக உத்தமராகத் துதிக்கப்படுகின்ருர்; போற்றப்படுகின்ருர்.

ஆகவே, தம்பி, தங்கைகளே! "கூடா நட்பு" என வள்ளுவர் கூறும் "சீரிடங் காணின் எறிதற்குப் பட்டை நேரா நிரந்தவர் நட்பு" — உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசும் நண்பர்களது நட்பு, மரணப் பொறி போன்றதாகும். வள்ளுவரது இக்குறளை ஆராய்ந்து, காந்திஜியைப் போல், அறிவுக் கண்ணைத் திறந்து, முன்னேற்றப்பாதையில் அடியெடுத்து வைப்போமாக.




# புதுமைகள் பாரீர் பாரினிலே - (20)

—அன்ரனி பெர்ளுண்டோ, கிரிலப்பனை—

## சுக்குச்...சுக்குச்...சுக்கு...புகையிரதம்!

சிறுவர்களின் உள்ளங்களிலே மகிழ்ச்சி வெள்ளம் பெருகச் செய்யும் ஒரு நிகழ்ச்சிதான் புகையிரதப் பிரயாணம். புகையிரதத்தின் ஓசை காதில் விழும்போதும், அதைப் பற்றிப் பிறர் சொல்லக் கேட்கும் போதும், அதை நேரில் காணும் போதும் கூடச் சிறுவர் உள்ளங்களிலே உவகை பொங்குகிறது. அதில் ஏறிப் பிரயாணம் செய்ய வேண்டுமென்ற ஆவலும் உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து மேலோங்கி வளர்கிறது.

வீட்டிலும் சரி, பள்ளிக்கூடத்திலும் சரி, 'கோச்சு' விளையாட்டில் தம்மை மறந்த நிலையில் ஈடுபட்டு இன்பமடையும் சிறுவர்கள் ஏராளம். 'நான் தான் என்ஜிணும். நீங்கள் தான் கோச்சுப் பெட்டிகளாம். என்னைப் பிடித்துக்கொண்டு பின்னுலே வரிசையா வாங்க. ஊஊஊ......சுக்கு...சுக்கு...சுக்கு...' என்று புகையிரதம் ஓசை செய்து கொண்டு புறப்பட்டுச் செல்வது போல் சிறுவர்கள் வாயினுல் ஓசை செய்து கொண்டு நகர்ந்து செல்கின்றனர். புகையிரதத்தின்மீது சிறுவர்கள் கொண்டுள்ள ஆசைக்கு இந்த விளையாட்டே போதிய சான்ருக இருக்கிறது.

நவசீனுவில் உள்ள சிறுவர்கள் நம்மைப்போல் புகையிரதத்தில் பிரயாணம் செய்வதோடு நின்றுவிடாமல் அவற்றை ஓட்டிச் செல்லவும் செய்கிருர்கள் வெறும் பொம்மை வண்டிகளை என்றுதானே நினைக்கிறீர்கள்? அதுதான் இல்லை. அசல் புகையிரதங்கள் அங்கு சிறுவர்களாலே ஓட்டப்படுகின்றன. அங்கு 'ஹாபின்' என்ற இடத்தில் இருக்கும் இந்தப் புகையிரதங்கள் சாதாரண சிறிய புகையிரதங்களைவிட அளவில் சற்றுச் சிறியன. இவற்றை ஓட்டுவதிலிருந்து மற்றும் சகல பொறுப்புகளையும் சிறுவர்களே ஏற்றுச் செய்து வருகின்றனர். இந்தப் புகையிரத சேவை முழுக்க முழுக்கச் சிறுவர்களாலேயே பரிபாலிக்கப்படுகிறது. சிறுவர் சிறுமியர் இருபாலாரும் அதில் பணிபுரிகின்றனர். அவர்கள் அதற்குத் தக்கவாறு பயிற்சி பெற்றுள்ளனர்.

சிறுவர்களால் நடத்தப்படும் புகையிரதசேவை என்பதால் இந்தப் புகையிரதங்களில் பிரயாணம் செய்வதைச் சிறுவர்கள் பெரிதும் விரும்புகின்றனர். அதனுல் இந்தப் புகையிரத சேவை எப்போதும் சனநெருக்கமான சேவையாக இருக்கிறது. அத்தோடு வண்ணத் துணிகள் போட்டு அலங்கரிக்கப்பட்ட சன்னல்களோடு கூடிய அழகான நாற்சதுரப் பெட்டிகளால் ஆன இந்தப் புகையிரதங்கள் பார்ப்போர் மனதையும் பறிக்கின்றன மேலும் சுறுசுறுப்பும் உற்சாகமும் நிறைந்தோராய்ச் சிறுவர் சிறுமியர் பணிபுரிவதனுல் நாள்தோறும் இந்தப் புகையிரத சேவையின் புகழ் எங்கும் பரவி வருகிறது. இந்தச் சேவை 19[illegible] ஆண்டு ஆனி மாதம் 1ம் திகதி அங்கு ஆரம்பிக்கப்பட்டது.

தொடர் கதை

# அதிசயத்தீவில் கலிவர்

—மாஸ்டர் சிவலிங்கம்—

"மன்னிக்க வேண்டும்...! பிரபு..." என்ற குரல் வாசல் புறத்திலிருந்து கிளம்பியது. குரல் வந்த பக்கம் எல்லோரும் திரும்பினர். அங்கே...! படைத்தளபதி நின்று கொண்டிருந்தார். அரசருக்கு வீர வணக்கம் செலுத்திவிட்டுத்தான் நேரில் கண்ட நிகழ்ச்சியை வர்ணித்துவிட்டு, கலிவரின் அன்புள்ளத்தையும், இரக்க சிந்தையையும் வெகுவாகப் புகழ்ந்து பாராட்டினுர். அச்செய்தியைக் கேள்வியுற்ற அரசர் மிகவும் மகிழ்ந்து கலிவரைத் தொடர்ந்து ஆதரிப்பதென முடிவு செய்தார். எல்லோரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

அரசர் சில அறிஞர்களை [illegible] தங்கள் நாட்டு மொழியைப் படிப்பிக்கும்படி உத்தரவிட்டார். கலிவரும் மிகக் குறுகிய காலத்தில் அந்நாட்டு விசித்திர மொழியைக் கற்றுக்கொண்டார்.

ஒரு நாள் அரசர் கலிவரைச் சந்தித்துப் பேசிக்கொண்டிருக்கையில், பேச்சோடு பேச்சாகத் தன்னை சங்கிலிப் பிணைப்பிலிருந்து விடுவிக்கும்படி கலிவர் அரசரிடம் வேண்டினுர். விரைவில் ஆவன செய்வதாக அரசர் உறுதியளித்தார். அடுத்த நாள்...!

மூவாயிரம் வீரர்கள் அணி வகுத்து முன்செல்ல, மந்திரி பிரதானிகள் புடைசூழ, அரசர் கலிவரிடம் வந்தார். கலிவர் சிரம் தாழ்த்தி அரசரை வணங்கினுர். அரசர் மகிழ்ச்சிப் புன்முறுவலுடன், "பின் வரும் நிபந்தனைக்கு நீங்கள் உடன் பட்டால் மிக விரைவில் உங்களைச் சங்கிலிப் பிணைப்பிலிருந்து விடுவிப்போம்..." என்ற பூர்வ பீடிகையுடன் ஆரம்பித்துப் பின்வரும் நிபந்தனைகளைக் கூறினுர்.

"எங்களுடைய அனுமதியின்றி நீங்கள் இந்த நாட்டை விட்டு எங்கும் செல்லக் கூடாது. முன்னறிவித்தலின்றி வெளியில் நடமாடக்கூடாது. உத்தரவு பெற்றபின் பிரதான வீதிகளால் மட்டும் நடமாட வேண்டுமே தவிர புற்தரைகளில் கால் வைத்து விடக்கூடாது. வீதியில் செல்லும் போது மனிதரையோ, பிராணியையோ மிதித்துவிடாமல் மிகவும் அவதானமாகவே செல்ல வேண்டும். இங்கிருந்து சற்றுத் தொலைவிலுள்ள 'பிலிபுஸ்கோ' தீவு மக்கள் எங்கள் பரம எதிரிகள். அவர்களை வெற்றி கொள்வதற்கு எங்கள் படை வீரர்களுக்குப் பக்கபலமாக இருக்க வேண்டும். அத்தோடு இத் தீவைச் சுற்றிப் பிரமாண்டமான மதில் கட்டப்படுகிறது. அங்கு வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் பக்கபலமாக இருக்க வேண்டும். இவற்றிற்கெல்லாம் நீங்கள் சம்மதம் தெரிவித்தால் உங்களை நாளைக்கே சங்கிலியினின்றும் விடுவிக்கத் தயாராயிருக்கிறேன்" என்று கூறிவிட்டுக் கலிவரை நோக்கினுர்.

கலிவரும் மிகவும் மகிழ்ச்சியுடன் அந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு நடப்பதாக உறுதி அளித்தார். அடுத்த நாள்...! கலிவர் சங்கிலியினின்றும் விடுவிக்கப்பட்டதும் உற்சாக மிகுதியில் துள்ளிக் குதித்தார். அரசரிடம் முன்னறிவித்தல் கொடுத்துவிட்டு அத்தீவைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினுர். அதே நேரத்தில்......!

(தொடரும்)

எனது கிராமம்:

# அளவெட்டி

—தி. மதுரம்—

ஈழத்தின் வடமாகாணமாகிய யாழ்ப்பாணத்திலிருந்து 9 மைல் தொலைவில் எனது கிராமம் அமைந்திருக்கிறது. தெல்லிப்பழை, சுன்னுகம், மல்லாகம், இளவாலை போன்ற கிராமங்களுக்கு மத்தியில் இருக்கின்றது.

எனது கிராமம் மல்லாகம் கோவில் பற்றைச் சார்ந்தது. இது ஒன்பது வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது.

ஏறக்குறைய 15 சதுரமைல் விஸ்தீரணமுள்ள எமது கிராமத்தில் 7 தமிழ்ப் பாடசாலைகளும், ஒரு தமிழ்ப் பாடசாலையும், இந்து, கிறிஸ்தவ ஆலயங்களும், தபாற்கந்தோரும், இன்னெரு உபதபாற்கந்தோரும், அரசாங்க வைத்தியசாலையும், கிராம முன்னேற்றச் சங்கம், வாசிகசாலை, நெசவுத் தொழிற்சாலை, இந்து வாலியர் சங்கம் ஆகியனவும் இருக்கின்றன.

இது மட்டுமின்றி, இயற்கை வனப்புகளாலும் சிறந்து விளங்குகின்றது. இங்குள்ள பிரதான தொழில் விவசாயம் விவசாயிகளின் பிரதான விளைபொருள்கள் புகையிலை, வெங்காயம், கிழங்கு வகைகளாகும்.

நாட்டின் நற்பணிக்காக வாழும் தமிழ்ப் பெரியார்களும், கலையார்வம் மிக்க இளைஞர்களும், கலைஞர்களும வாழ்கின்றுர்கள். அரசாங்க உத்தியோகத்தர்களும் இருக்கின்றனர்.

எனது கிராமம் காங்கேசன் துறைத் தொகுதியைச் சார்ந்தது. தமிழரசுத் தந்தை செல்வா அவர்களை அங்கத்தவராகக் கொண்டதால், பெருமையும், மகிழ்ச்சியும் அடைகின்றேம்.

தமிழ் மொழி பயிலப் பயில, அதன் அழகை உணரலானேன். அஃதொரு மணங்கமழும் இனிய மொழி தமிழ் மக்களுள் பண்டை நாளிலிருந்து இந்நாளிலுங்கூட பல அறிஞர்கள் இருந்தார்கள்; இருக்கிருர்கள் என்பதும் மொழியின் அமைப்பாலும், அப் பயிற்சியாலும் அறியக்கிடக்கிறது.

—மகாத்மா காந்தி

# சின்ன வயதில்...(16)

-சிந்தனைச் செல்வி', ஏழாலை-



உயர்ந்த பண்பாடுகள் யாவும் நிரம்பப் பெற்ற குடும்பத்திலே தான் பிறந்தான் இச்சிறுவன். ஆனுல் ஒரு சமயம் பள்ளிச் சிறுவர்களின் கெட்ட சகவாசத்தால் எப்படியோ சுருட்டுப் புகைக்கப் பழகிக்கொண்டான். பாவம்! பெற்ருேர்களோ அவனுடைய செயல்களை அறியவில்லை. பையனுடைய பழக்கம் ஆசையாக மாறியதும் அவன் சுருட்டு வாங்குவதற்குப் பணத்திற்குத் திண்டாடினுன். சந்தர்ப்பம் அவனைத் திருடத் தூண்டியது. யாரும் அறியாமல் தன் சகோதரனுடைய பொற் காப்பில் ஒரு துண்டு வெட்டி எடுத்து விற்றுத் தன் ஆசையைப் பூர்த்தி செய்தான்.

ஆசைக்காக அந்த அடாத செயலைச் செய்துவிட்டான் அவன். ஆசை தான் எந்த மனிதனையும் அழிவிற்கு இட்டுச் செல்கிறது. பையன் சிறியவன். ஆனுல் உள்ளம் உயர்ந்தது. தான் செய்த தவறை எண்ணி எண்ணி மறுகினுன். நற்குணமுடையோர் சிறு தவறிழைப்பினும் அவர் மனச்சாட்சியே அவரை எந்நாளும் உலுக்கும். மனச்சாட்சியை மதியாதவன் மனிதனுகான்.

"சொல்லப்படாத பாவம் மன்னிக்கப்படாது" என்ற பைபிள் வாக்கியம் பையனைத் தந்தையிடம் குற்றத்தைக் கூறி மன்னிப்புக் கேட்கத் தூண்டியது. பையன் ஒரு துண்டுக் காகிதத்தில் தன் தவறை எழுதித் தந்தையிடம் சமர்ப்பித்தான். அவனுடைய உடலும் உள்ளமும் நடுங்கின.

தந்தை கடிதத்தைப் படித்தார். அவருடைய விழிகள் மழையாய் நீரைப் பொழிந்தன. பையனும் கரைந்துருகினுன். தந்தை கடிதத்தைக் கிழித்தெறிந்தார். தந்தையின் கண்ணீரில் மைந்தனின் பாவம் கரைந்தது. தந்தை அடிப்பார் என்று கலங்கிய மகனுக்குத் தந்தையின் அன்பான மன்னிப்பு ஆறுதலளித்தது. பிஞ்சு வயதிலேயே தன் மனச் சாட்சியைப் பெரிதாக மதித்த இந்த உத்தமச் சிறுவன் யார் தெரியுமா?

பிற்காலத்தில் இவர் நீதியையும் நேர்மையையும் கொண்டு போராடி ஆத்ம பலத்தை மாத்திரம் நம்பி வாழும் உலக மக்களுக்கு ஒரு அன்பு வழியைச் சமைத்துத் தந்த ஒரு மகான்......

ஆமாம்! இவர்தான் அண்ணல் காந்தி!

[காந்தி அண்ணல் 2-10-1869-ல் பிறந்தார் அவரது பிறந்தினத்தை யொட்டி இக் கட்டுரை வெளியாகிறது]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## செங்குந்த இந்துக் கல்லூரி தமிழ் விழா

யாழ்ப்பாணம் திருநெல்வேலி கிழக்கிலுள்ள செங்குந்த இந்துக் கல்லூரியில் சென்ற 11-9-64 வெள்ளிக்கிழமை, 12-9-64 சனிக்கிழமை ஆகிய இரு நாட்களிலும் மிகச் சிறப்பான முறையில் தமிழ் விழா நடைபெற்றது. யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், எழுத்தாளர்கள், அறிஞர்கள், கவிஞர்கள், மாணவர்கள், பொது மக்கள் உட்பட ஐயாயிரத்திற்கதிகமானோர் விழாவில் கலந்து கொண்டனர்.

வெள்ளிக்கிழமை பி. பி. 3 மணியளவில், சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லூர் சட்டநாத சுவாமி கோவிலிலிருந்து தலைவரும், பேச்சாளர்களும் மேள வாத்தியத்துடன் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர். பின் கல்லூரி மாணவிகள் கல்லூரிக் கீதம் இசைக்கக் கல்லூரி அதிபர் திரு. நா. கணபதிப்பிள்ளை அவர்கள் கல்லூரிக் கொடியை விழா நடைபெறும் இடத்தில் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து கைதடிப் பழனி மலைக் குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரி நடைபெற்றது. அதன் பின் கடவுள் வணக்கம், தமிழ் வாழ்த்து ஆகியவற்றைத் தொடர்ந்து கல்லூரி அதிபர் வரவேற்புரை நிகழ்த்தினார்.

இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் கலாநிதி ஆ. சதாசிவம் அவர்கள் தமது தலைமையுரையில், "சுவையும் பயனும் நிறைந்த இவ் விழாவை, இத்துணை பெரிய அளவில், மிகச் சிறப்பாக நடத்துவதன் மூலம், இக்கல்லூரி, மற்றைய கல்லூரிகளுக்கு வழி காட்டியாக அமைகின்றது. இலக்கியங்கள் கூறும் உயர்ந்த பண்புகளை மாணவர்களின் உள்ளங்களில் நன்கு பதிப்பதற்கு இத் தகைய விழாக்கள் மிகவும் அவசியம்" எனக் குறிப்பிட்டார்.

பிரபல சிறுகதை எழுத்தாளர் க. தி. சம்பந்தன், அவர்களின் தலைமையில் "இராமாயணத்தில் மிகச் சிறந்த பாத்திரம் யார்?" என்ற தலைப்பில் ஒரு பட்டிமன்றம் நடைபெற்றது. இராமனே சிறந்தவன் என்று திரு. சி. பரமசாமி திரு. பொ. இராமசாமி, பண்டிதர் வ. நடராஜன் ஆகியோரும், "இராவணனே சிறந்தவன் என்று" திரு. க. சிவராமலிங்கம், திரு. சு. கணபதிப்பிள்ளை ஆகியோரும், பரதனே சிறந்தவன் என வித்துவான் திரு. க. வேந்தனார், திரு. சி. சிவானந்தன், திரு. மு. ஆலாலசுந்தரம் ஆகியோரும், கும்பகருணனே சிறந்தவனெனப் பண்டிதர் பொன். கிருஷ்ண பிள்ளை, பண்டிதர் செ. சிவப்பிரகாசம் ஆகியோரும் வாதாடினர்.

சங்கீத பூசணம் ப. முத்துகுமாரசாமி அவர்களின் இன்னிசைக் கச்சேரியும், கொக்குவில் "கலாபவன" மாணவிகளின் நடனமும் நடைபெற்றன. ஆசிரியர் திரு. கு. சோமசுந்தரம் அவர்களின் நன்றி உரையுடன் முதனாளைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள், திருவாட்டி மகேஸ்வரி இராசேந்திரா அவர்களின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகியது. இலங்கைப் பல்கலைக் கழக விரிவுரையாளர் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள், "தமிழ் மொழி சாகாது என்று சொல்லிவிட்டு வாளா இருப்பதில் பயனில்லை. நாம் தமிழுடன் கலக்க வேண்டும். தமிழ்ப் பண்புடையவர்களாகத் திகழ வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

கவிஞர் நாவற்குழியூர் நடராசன் அவர்களின் தலைமையில் "கனவுலகம்" என்ற தலைப்பில் நடைபெற்ற கவியரங்கில் திரு. செ. கதிரேசபிள்ளை, திரு. வி. கந்தவனம், திரு. ச. வே. பஞ்சாட்சரம், திரு. நீலாவணன், பண்டிதர் ச. இராமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பண்டிதை சத்திய தேவி துரைசிங்கம் அவர்களின் தலைமையில், "கைகேகியிலும் பார்க்கக் கூனியே கொடியவள்" என்ற தலைப்பில் நடைபெற்ற சொற்போரில் கைகேகியே கொடியவள் எனத் திருவாட்டி வள்ளிநாயகி இராமலிங்கம், திருவாட்டி லீலாவதி ஆலாலசுந்தரம் திரு. நாவேந்தன் ஆகியோரும் கூனியே கொடியவளென செல்வி நவமணி முருகேசம்பிள்ளை, செல்வி. கனகம்மா சின்னத்துரை, திரு. க. சி. குலரத்தினம் ஆகியோரும் வாதாடினர்.

செல்வன் செ. குகதாசன் செல்வி ச. ஜெயகுமாரி ஆகியோரின் பேச்சுகளைத் தொடர்ந்து செல்வி சந்திரமதி சதாசிவம் அவர்களின் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது. பின் கல்லூரிப் பழைய மாணவர்களின் "வா ராசா வா" என்ற நகைச்சுவை நாடகம் நடைபெற்றது. ஈற்றில் செல்வி து. இராஜமலர், திரு. சி. சரவணபவன் ஆகியோரின் நன்றி உரையுடன் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளும் இனிது நிறைவேறின.

---

### மட்டக்களப்பில் பாரதி விழா

மட்/கன்னன் குடா அரசினர் பாடசாலையில் அண்மையில் நிகழ்ந்த பாரதி விழாவில் மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் சங்கப் புதிய தலைவரும், திமிலை நளின கலா மன்றப் போஷகருமான கவிஞர் திமிலைத் துமிலன் பேசுகையில், இல்லற வாழ்க்கையின் இணையற்ற தொரு எடுத்துக்காட்டாக பாரதி, குருவிக் குடும்பத்தை காட்டுகிறான்' என்று குறிப்பிட்டார்.

தலைமையாசிரியர் திரு. செ. தம்பிராசா அவர்களது தலைமையில் நடைபெற்ற இந்தப் பாரதி விழாவில் 'நகைச் சுவைக் குமரன்' மாஸ்டர் சிவலிங்கம், அன்புமணி, அ. சிதம்பர நாதன், செல்வன் பா. பொன்னுத்துரை ஆகியோரும் பேசினர்.

---

### மலையகத்தில் அண்ணு பிறந்த தின விழா

கொட்டகல மாவட்டம் பளிங்குமலை கிளை இலங்கை திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரவில், தமிழக தி. மு. க. தலைவரும், எதிர்க்கட்சித் தலைவரும், பகுத்தறிவு பாசறையுமான அறிஞர் அண்ணு அவர்களின் 56 வது வயது பிறந்த தினத்தையும், தமிழக தி. மு. க. துவக்க தினத்தையும், ஈழத் தமிழர்களின் முன்னணித் தலைவர்களிலொருவரும், கோப்பாய் தொகுதி முன்னுள் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழரசுக் கட்சி முன்னுள் தலைவருமான, திரு. கு. வன்னியசிங்கம் அவர்கள் நினைவு தினம், திரு. வி. க. அவர்கள் நினைவு தினம் இவற்றை முன்னிட்டும், 17-9-64-ம் நாள் வியாழன் மாலை 5 மணிக்கு, இ. தி. மு. க. பணிமனையில் விழா நடாத்தப்பட்டது.

இவ்விழாவிற்கு இ. தி. மு. க. ஹட்டன் மாவட்டச் செயலாளரும், இ. தி. மு. கழகச் செயலாளரும் பளிங்குமலை பாண்டியன் பகுத்தறிவு கலை [illegible] பொதுச் செயலாளருமான தோழர் இரா. ரெங்கையா அவர்கள் தலைமை தாங்கினார்.

### உனுப்பிட்டி இந்து சன்மார்க்க சங்கம்

வியாழக்கிழமை 17.9.64ல் நடைபெற்ற உனுப்பிட்டிய இந்து சன்மார்க்க சங்கத்தின் விசேட நிர்வாகசபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

சரித்திரப்பிரசித்திபெற்ற பாடல் பொருந்திய புண்ணிய யாத்திரை ஸ்தலங்களாகிய திருக்கோணமலையையும், திருக்கேதீஸ்வரத்தையும் புனித நகர்களாக மாற்றும்படியும், கோணேஸ்வரர் எழுந்தருளியிருக்கும் பிரட்றிக் கோட்டையினுள் இருக்கும் அரசாங்க காரியாலயங்கள், வாசஸ்தலங்கள், இராணுவ விடுதிகள், பிறமதஸ்தாபனங்கள் அனைத்தையும் உடனடியாக அங்கிருந்து அகற்றி அனுராதபுரம், களனிபோன்ற நகரங்களை தற்போது அரசாங்கம் புனித நகரங்களாகப்பிரகடனம் செய்திருப்பதைப் போல், திருக்கோணேஸ்வரத்தையும் திருக்கேதீஸ்வரத்தையும் புனித நகரங்களாகப் பிரகடனப்படுத்துமாறும் அரசினரைவேண்டிக் கொள்கிறது.

இத்தீர்மானத்தின் பிரதிகள் மகா தேசாதிபதி அவர்கள், கௌரவ பிரதம மந்திரி, தமிழ்பேசும் பா. உக்கள், ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

---

### இலங்கை முஸ்லிம் எழுத்தாளர் சங்கம்

இலங்கை முஸ்லிம் எழுத்தாளர் சங்க இணைச் செயலாளர்களுள் ஒருவரான ஜனுப் யூ. எல். தாவூத் அவர்களால் தொகுக்கப்பட்ட 'முஸ்லிம்கதைமலர்' ஒக்டோபர் மாத இறுதியில் வெளியாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

ஈழத்து முதல் முஸ்லிம் சிறு கதைத் தொகுப்பெனக் குறிப்பிடப்படும், "முஸ்லிம் கதை மல"ரின் வெளியீட்டு விழா இலங்கை முஸ்லிம் எழுத்தாளர் சங்க முதல் ஆண்டு வைபவத்தின் போது [illegible] யுமென இணைச் செயலாளருள் ஒருவரான ஜனுப் எம். எம். மக்கீன் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### பாரதி பேச்சுப் போட்டி

கொஸ்லாந்தை அரசினர் மகா வித்தியாலயம் தமிழ்ப் பிரிவில் பாரதியார் நினைவு தினத்தை முன்னிட்டு எல்லா வகுப்புகளுக்கும் பாரதியாரை பற்றிப் பேச்சுப் போட்டிகள் நடைபெற்றன. பேச்சுப் போட்டியின் முடிவுகள் பின்வருமாறு:

3-ம் வகுப்பு:— (1) செல்வன் பா. கலானந்தன், (2) செல்வன் எம். பத்மன், (3) செல்வி ஆர். விசயலட்சுமி.

4-ம் வகுப்பு:— (1) செல்வன் ஆர். அருணுசலம், (2) செல்வன் கே. வெங்கடாசலம், (3) செல்வி எஸ். ஜெயலட்சுமி அம்மா.

5-ம் வகுப்பு:— (1) செல்வன் பி. வீரப்பன், (2) செல்வன் வி. அழகன், (3) செல்வி பி. ஜானகி.

6-ம் வகுப்பு:— (1) செல்வி கே. இந்திராணி (2) செல்வி எஸ். குணபூசணி அம்மா, (3) செல்வன் எல். வசந்த குமார்.

7-ம் வகுப்பு:— (1) செல்வன் ஆர். முகுந்த குமார், (2) செல்வன் என். கனகரத்தினம், (3) செல்வி ஆர். பூரணும்பாள்.

8-ம் வகுப்பு:— (1) செல்வன் கே. ரி. தங்கராஜா, (2) செல்வி எம். ருக்மணி, (3) செல்வன் ஏ. மோகன்.

ஜீ. ஸீ. ஈ. (ஆ):— (1) செல்வன் ரி. ஜோண், (2) செல்வன் எஸ். சுப்பிரமணியம், (3) செல்வன் ஈ. பழனியாண்டி.

ஜீ. ஸீ. ஈ (இ):— (1) செல்வன் பத்மநாத ஐயர் (2) எஸ். நாராயணன் (3) செல்வன் எஸ். சுரேஷ் சந்திரன்.

---

### செயலாளரின் சேவைக்கு பாராட்டு

யாழ்ப்பாண மாவட்ட சன சமூக நிலையங்களின் சமாச வருடாந்தக் கூட்டம் சென்ற 13-9-64 ஞாயிறு காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் பாடசாலை மண்டபத்தில் சமாசத் தலைவர், சமூகஜோதி இராசவாசல் முதலியார் சி. தியாகராசா தலைமையில் நடைபெற்றது. வட பகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர் உட்படப் பெருந்தொகையானோர் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். சமாசச் செயலாளர் திரு. த. துரைசிங்கத்தின் சேவைகளைப் பாராட்டிப் பலர் பேசினர். வருடாந்த அறிக்கைகள் அங்கீகரிக்கப்பட்ட பின் நடப்புவருடநிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: இராசவாசல் முதலியார், சி. தியாகராசா, துணைத் தலைவர்கள்: பண்டிதர், வீ. வ. நல்லதம்பி, திருமதி. வேதவல்லி கந்தையா, திரு. ச. முத்துலிங்கம் (உடுவில் கி. ச. தலைவர்), திரு ச. கைலாயபிள்ளை, திரு. இ. வேலாயுதர்.

செயலாளர்: திரு. த. துரைசிங்கம், துணைச்செயலாளர்: திரு. தி. சி. சண்முகலிங்கம், பொருளாளர்: திரு. சி. இராசரத்தினம்.

---

### நாவேந்தனுக்குப் பாராட்டு

'கடந்த 15 ஆண்டுகாலமாகத் தமிழிலக்கிய வளர்ச்சிக்குத் தாங்களாற்றிவரும் அருந்தொண்டினைப் பாராட்டும் வகையில் சாகித்திய மண்டலம் இவ்வாண்டு தங்களுக்குப் பரிசளித்துக் கௌரவித்துள்ளது. தங்கள் சேவை மென்மேலும் சிறந்தோங்க வாழ்த்துகிறோம்.' ஈழத்து இலக்கியத்திற்கான சாகித்திய மண்டலத்தின் பரிசினைப் பெற்றுள்ள பிரபல எழுத்தாளர் திரு. நாவேந்தனுக்குச் சுழிபுரம் கலைமகள் சனசமூக நிலையத்தினர் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியொன்றில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளனர்.

திரு. நாவேந்தனுக்குப் பாராட்டுத் தெரிவித்து ஈழத்தின் பல பாகங்களிலிருந்தும் பாராட்டுச் செய்திகள் பல கிடைத்துள்ளன. பல பொது ஸ்தாபனங்கள் அன்னருக்குப் பாராட்டளித்துக் கௌரவிக்க முன்வந்துள்ளன.

### 'சட்டத்தால் தமிழை அழிக்க முடியாது'

'ஒரு இனத்தை வேறொரு இனம் நசுக்க முயல்வதினுல் மனிதகுலம் வாழ்ந்துவிட முடியாது. மனிதனுக்கு மொழி கண்களையொத்தது. மொழி கண்ணின் விழியை விட மேலானது. இன்றைய அரசாங்கம் தமிழினத்தை அடக்கி ஒடுக்குவதிலேயே தனது நேரத்தை விரயமாக்கி வருகின்றது. புதுப் புதுச் சட்டங்கள் மூலம் தமிழை அழிக்க முடியாது. இறைவன் மொழியான தமிழை அழிக்க முயல்வது தன்னையே அழிக்க முயல்வதாகும்.'

கரணவாய் தெற்கு கலா படிப்பகமன்ற மூன்ருவது ஆண்டுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த திரு. ஐ. சிவகுரு பேசுகையில் மேற்கண்டவாறு கூறினுர்.

திருவாளர்கள், எம். எஸ். ஜேசுதாசன், பூ. உமாமகேஸ்வரன், க. நீலகண்டன், என். டி. ராஜன், ஜே. ஜெயக்குமார் ஆகியோரும் பேசினர்.

புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு. ஐ. சிவகுரு, உபதலைவர்: திரு. எம். எஸ். ஜேசுதாசன், காரியதரிசி: திரு. ஜே. ஜெயக்குமார், உப-காரியதரிசி: செல்வன் வே. மகாலிங்கம், பொருளாளர்: செல்வன் ஜே. உதயகுமார், உபபொருளாளர்: செல்வன் செ. பாலசுப்பிரமணியம்.

---

### பாரதி தின விழா

சேனையூர்-கட்டைப் பறிச்சான் கிராமியக் கலைமலர்ச்சி மன்றத்தால் பாரதி தின விழா 12-ந் திகதி சனிக்கிழமை, சேனையூர் அரசினர் தமிழ் வித்தியாலயத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடப் பட்டது.

விழாவிற்கு மூதூர் வைத்திய அதிகாரி திரு. எஸ். சுந்தரலிங்கம் தலைமை வகித்தார். கட்டைப் பறிச்சான் கி. ச. தலைவர் திரு. ஏ. சிவபாக்கியம் குத்துவிளக்கேற்றி விழாவைத் தொடக்கிவைத்தார். விழாவிற்கு ஐந்நூற்றுக்கு மேலான மக்கள் வந்திருந்தனர்.

கிராமியக் கலை மலர்ச்சி மன்றத் தலைவர் திரு. க. நா. நடராசபிள்ளை, வரவேற்புரை நிகழ்த்தினுர். திருவாளர்கள்: பண்டிதர் ஐ. சரவணமுத்து, கா. ஜீவரெத்தினம், எஸ். தவதாசன், சி. நடராசா, எஸ். சுந்தரலிங்கம், பண்டிதர் வ. நிக்லஸ், முருகு சந்திர சேகரம், கனக தாமோதரம்பிள்ளை, வ. அ. இராசரெத்தினம், வீர சுப்பிரமணியம், ஆகியோர் பிரதம பேச்சாளர்களாகக் கலந்து கொண்டனர்.

திருவாளர்கள் கா. வீரசிங்கம், வீ. மயில்வாகனம், க. நவரெத்தினம், இ. முத்துராசா, இ. குணநாயகம் ஆகிய மன்ற அங்கத்தவர்கள் இன்னிசையளித்தனர். 'புது வாத்தியார் பட்டபாடு' என்ற நாடகம் திருமலை மூற்போக்குக் கலாமன்றத்தாலும், 'பரலோகத்தில் பாரதி' என்ற நாடகம் கிராமியக் கலை மலர்ச்சி மன்றத்தினராலும் சிறப்பாக நடிக்கப்பெற்றன.

# இயற்கைவர்ண எழிற்காட்சியில் 'பேராசிரியர்'?



ஆடுகிறார், பாடுகிறார், அறிவூட்டுகிறார்
நம்மை ஆனந்தக் கடலிலாட்டுகிறார்

வடநாட்டில் வெள்ளி விழாக் கொண்டாடிய
'மெஹ்ரா' அளிக்கும்

# 'புரொபெசர்'

ஈஸ்ட்மென் கலர் ஹிந்திச் சித்திரம்

ஷம்மிகபூர்—கல்பனா—லலிதா பவார் நடித்தது

செண்ட்ரல் (மருதானை) ஈரோஸ் (பாமன்கடை) ஆகிய திரைகளில்!

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

---

ஜனத் திரளான தியேட்டர்களில்
இப்பொழுது ஓடிக்கொண்டிருக்கிறது!

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை) வின்ஸர் (யாழ்ப்பாணம்) இர்பீரியல் (மட்டக்களப்பு) நெல்சன் (திருகோணமலை) நீகல் (கண்டி)
சிற்றம்பலம் (வவுனியா) ஹரிசன் (கல்முனை) பேர்ல் (சிலாபம்)



ஜெமினி கணேசன்,
சரோஜாதேவி,
கே. ஏ. தங்கவேலு,
எம். வி. ராஜம்மா,
சுந்தரிபாய், அசோகன்,
எஸ். ராமராவ்,
ஸி. சகுந்தலா,
லக்ஷ்மி பிரபா
நடித்த



கமால் பிரதர்சாரின்

# வாழ்க்கை வாழ்வதற்கே

நடனம் : கிருஷ்ணன்-பஞ்சு
கதை : கொத்தமங்கலம் சுப்பு—வசனம் : முரசொலி மாறன் எம். ஏ.
இசையமைப்பு : விஸ்வநாதன்-ராமமூர்த்தி—பாடல்கள் : கண்ணதாசன்
பின்னணி : ஸ்ரீநிவாஸ், சுசிலா, ஈஸ்வரி, ஜமுனாராணி, லதா

---

# தீபாவளிப் பெரு விருந்து!

எம். ஜி. ராமச்சந்திரன்,
சரோஜாதேவி, எம். ஆர். ராதா,
நம்பியார், பாலாஜி, நாகேஷ்,
விஜயலட்சுமி
நடித்த

# என் கடமை

பாடல்கள்:
கண்ணதாசன்
இசையமைப்பு:
விஸ்வநாதன்-ராமமூர்த்தி
பின்னணி:
சௌந்தரராஜன்—சுசீலா

---

# 2வது புகழ் வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) நவா (கும்பனித்தெரு) பிளாஸா (வெள்ளவத்தை)
குயின்ஸ் (ஜாகேகொடை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) ராஜ் (நீர்கொழும்பு)
வெம்பிளி (கண்டி) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை)

தேன் உள்ள இடத்தில் தான் வண்டுகள் வட்டமிடும் என்ற தத்துவத்தை விளக்கும் சித்திரம்! காதுக்கினிய பாடல்கள், கருத்துக்கினிய கதை வசனம், கண்ணுக்குக் குளிர்ச்சியான காட்சிகள் பற்றும் பல நவீன அம்சங்கள் கொண்ட காதல் விருந்து!



எம். ஜி. ராமச்சந்திரன்—சரோஜாதேவி—அசோகன்—நாகேஷ்—மணிமாலா
மாதவி—மனோகர்—சகுந்தலா
நடிக்கும்

ஆர். ஆர். பிக்சர்ஸ்

# பணக்கார குடும்பம்

இசை : விஸ்வநாதன்-ராமமூர்த்தி பாடல்கள் : கண்ணதாசன் டைரக்ஷன் : ராமண்ணா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1964-ம் வருடம் ஒக்டோபர் மாதம் 4-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.